Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

34°C 27°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 171 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 2, வியாழன் 16.05.2013

■ காணி பறிப்பு ■ வடக்கு தேர்தல்


# 1,474 பேர் சார்பில் 'ரிட்'

## வலி. வடக்குக் காணிகள் சுவீகரிப்புக்கு எதிராக

யாழ்ப்பாணம், மே 16

வலி. வடக்கில் பொதுமக்களின் காணிகள் படைகளால் சுவீகரிக்கப்படுவதை எதிர்த்துக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆயிரத்து 474 பேர் சார்பில் 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில், தமிழ் மக்களின் காணிகளில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் நிலப்பரப்பை இராணுவத் தலைமையகம் அமைப்பதற்காகச் சுவீகரிப்பதாக, யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலரால் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.



இந்த நடவடிக்கையை எதிர்த்து வலி.வடக்கு மக்கள் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக ஆயிரத்து 474 பேர் சார்பில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்புச் சட்டத்துக்கு முரணான வகையில் காணிகளை அபகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே இந்த 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலர், யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களத் தலைவர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் தலைமையில் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், விரான் கொரியா, லக்ஸ்மணன் ஜெயக்குமார், பவானி பொன்சேகா மற்றும் நிரான் அங்கிட்டல் ஆகியோர் தயாரித்த வரைவை சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்தார். (த-5)



" இந்த மனுவில் பிரதிவாதிகளாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அலுவலர், யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்களத் தலைவர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## அமெரிக்கத் தூதுவர் சம்பந்தனுடன் பேச்சு

கொழும்பு, மே 16

வடக்கில் விஸ்வரூபமடைந்துள்ள காணிப்பிரச்சினை, வடமாகாண சபைத் தேர்தல் மற்றும் அரசியல் தீர்வுத் திட்ட பேச்சு உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிசன் விரிவான கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.



கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கில் திட்டமிட்ட அடிப்படையில் காணிகள் சுவீகரிக்கப்படுவதால் எழுந்துள்ள பிரச்சினைகள், அதிகரித்துள்ள இராணுவத் தலையீடு, மீள்குடியேற்றம் என்ற பெயரில் நடைபெறும் கொடுமைகள், இனப்பரம்பலை மாற்றியமைக்க அரசு மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு கூட்டமைப்பினர் சந்திப்பில் விரிவாக எடுத்துரைத்தனர் என்று கூறப்பட்டது.

அத்துடன், செப்ரெம்பர் மாதம் நடைபெறுமென அரசால் அறிவிப்பு விடுக்கப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்தும் அமெரிக்கத் தூதுவரிடம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய கூட்டமைப்பினர் ''சர்வதேச கண்காணிப்புக்கு மத்தியிலேயே வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்'' என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

## 23 ஆவது கூட்டத்திலும் இலங்கையை நெருக்குக

### ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கடிதம்

லண்டன், மே 16

ஜெனிவாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா.மனித உரிமைகள்சபையின் 23ஆவது கூட்டத்தொடரில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படுவது அவசியம் என்பதை

Amnesty International

வலியுறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 24

## உலகம்



பக். 06
மியன்மார் படகு விபத்தில் 100 பேரை காணவில்லை

## செய்திகள்



பக். 11
மத்தல விமான நிலையத்தால் எந்தவித பயனும் கிடைக்காது

## விளையாட்டு



பக். 22
டெல்லியை வீழ்த்தியது சென்னை சூப்பர் கிங்ஸ்

## 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க சட்டவரைவு

கொழும்பு,மே 16

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கான சட்டவரைவு ஒன்றை ஜாதிக ஹெல உறுமய அடுத்த இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

இதற்கான தீர்மானம் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மனசாட்சிக்கு அமைய வாக்களிக்க அனுமதிக்குமாறு கட்சித் தலைவர்களிடம் கோருவது எனவும் ஹெல உறுமய கூறியுள்ளது. (த)

## வடக்கு தேர்தல் மட்டுமே செப்ரெம்பரில்

கொழும்பு,மே 16

வடக்குத் தேர்தலை மட்டுமே செப்ரெம்பரில் நடத்துவதற்கு அரசு இப்போது தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு,வடமத்திய,மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அரசு செப்ரெம்பரில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னரே வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளைக்

தொடர்ச்சி: பக்கம் 24

## வடக்கு மக்களை முடக்க மஹிந்த அரசு முயற்சி

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கடந்த நான்கு வருடகாலப் பகுதியில்இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாது தமிழர்கள் மனதில் வைராக்கியத்தையும், அவநம்பிக்கையையும் வளர்த்துள்ள அரசு, வேறொரு நாட்டைத்தான் தாம் கைப்பற்றியுள்ளது என்ற நிலைப்பாட்டில்தான் இருக்கிறது. இவ்வாறான நிலையில்தான் வடக்குத் தேர்தலும் இடம்பெறவுள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித்தது.



வெள்ளையர்களைக் கண்டால் கோட் போடுவதற்கும், உள்நாட்டு மக்களிடம் தேசாபிமானம் காட்டவும் அவர்களை சிரிக்கவைக்கவும், வெவ்வேறு நடிகர்களை மஹிந்த ராஜபக்ஷ வைத்துள்ளார். அவர் உத்தரவு பிறப்பிக்கும் நேரத்தில் அந்த நடிகர்கள் நடிக்கின்றனர் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொடர்ச்சி: பக்கம் 24

## மூலப்பிரதிகளை 'சனல் -4' இடம் கேட்கிறது அரசு

லண்டன்,மே 16

சனல் - 4 வெளியிட்ட 'இலங்கையின் கொலைக் களங்கள், ஆவணப்படத்தை முற்றாக நிராகரித்துள்ள போதும் அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக இலங்கை அரசு இப்போது தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கைத் தூதுவர் வி.எம்.அம்சா ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

'சனல்-4' ஆவணப்படத்தின் மூலப்பிரதிகளை தம்மிடம் வழங்குமாறும் அதன் மூலம் விசாரணைகளை மேலும் துரிதப்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு சனல்-4 ஆவணப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழ் பேசும் குடிமகன் என்ற முறையில் தன்னால் நிரூபிக்க முடியும் என்று கூறிய அம்சா, புலிகளின் ஆதரவுடன் இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். (த-ப)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பெற்ற மன்னன் மகாசேனன் பெயரைப் புயலுக்குச் சூட்டுவதா?

## விசாரணை நடத்தக் கோரிக்கை

கொழும்பு,மே 16

வங்கக் கடலில் உருவான புயலுக்கு, அநுராதபுரத்தை ஆண்ட சிங்கள மன்னனான மகாசேனனின் பெரைச் சூட்டியது எப்படி? என்பது தொடர்பாக, உள்ளக விசாரணை நடத்தும்படி, இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு வரலாற்று நீரியல் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சபை அழுத்தம் கொடுத்துள்ளது.



புயலுக்கு அநுராதபுர அரசன் மகாசேனனின் பெயர் சூட்டப்பட்டதால், அவரது புகழ் கெடுக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தத் தவறினால், இலங்கை வணிமண்டலவியல் திணைக்களம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக, வரலாற்று நீரியல் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சபையின் செயலர் நிமல் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடத்தும்படி கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் வரலாற்று நீரியல் கலாசார பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சபை முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இது குறித்து கருத்து வெளியிட்ட வளிமண்டலவியல் திணைக்களத்தின் நடவடிக்கை மற்றும் நிர்வாக பணிப்பாளர் காரியவாசம், தாம் ஏற்கனவே புயலுக்கு மகாசேனனின் பெயரைப் பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (த)

# தாய்லாந்து பிரதமர் இலங்கை வருகிறார்

கொழும்பு,மே 16

தாய்லாந்து பிரதமர் ஜிங்லுக் சினவத்ரா இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 31 ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார்.



அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு குறித்துக் கலந்துரையாடுவதுடன் இரு நாடுகளுக்கிடையிலான பல ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கண்டி தலதா மாளிகைக்கு பயணம் செய்யும் தாய்லாந்து பிரதமர், அங்கு வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் மகா நாயக்க தேரர்களையும் சந்திக்க கலந்துரையாடவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

# காணி சுவீகரிப்பு அலுவலர் பதவியில் எவருமில்லை

யாழ்ப்பாணம், மே 16

யாழ்.மாவட்டக் காணி சுவீகரிப்பு அலுவலர் ஆ.சிவசுவாமி பதவி விலகி 3 வாரங்களுக்கு மேலாகின்ற நிலையில் அந்த இடத்துக்குப் புதிதாக எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் அதன் மாவட்டக் காரியாலயம் கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதன் நிர்வாக அலுவலராகவும், மாவட்டக் காணி சுவீகரிப்பு அலுவலராகவும் வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் அ.சிவசுவாமி நியமிக்கப்பட்டார்.

இந்த அலுவலகம் திறக்கப்பட்டு ஒரு மாத காலத்தினுள்ளேயே யாழ்.மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுத்தது.

இந்த நிலையில் காணி சுவீகரிப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட ஆ.சிவசுவாமி கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி பதவி விலகினார். இந்தப் பதவி வெற்றிடத்துக்கு புதிதாக யாரும் விண்ணப்பிக்கவில்லை. இதனால் யாரும் நியமிக்கப்படவுமில்லை. இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தைத் தொடர்பு கொண்டபோது அவர் பதிலளிக்கவில்லை. (த-5)

# வடக்குத் தேர்தலில் மாற்றம் இல்லை

### வாசுதேவ கூறுகிறார்



கொழும்பு,மே 16

செப்ரெம்பர் மாதத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் எனத் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தும் அரசின் திட்டங்களில் மாற்றமில்லை.காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கீழே காணப்படுகின்றன. மாகாண சபைகளுக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என சில கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.எனினும், இது வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தடையாக அமையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# தெற்கு மக்களுக்கு மனோ 'அட்வைஸ்'

## வடக்கு மாகாண சபை ஒன்றும் காணக்கிடையா தீர்வல்ல என்றும் கருத்து

கொழும்பு, மே 16

வடமாகாண சபையை ஏதோ காணக்கிடைக்காத பெரும் தீர்வாகக் கருதி தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக தென்னிலங்கையில் எவரும் நினைத்துவிடக் கூடாது என்று தெரிவித்திருக்கிறார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன். மாகாண சபையை நிராகரிப்போர் வடக்கில் இருக்கின்றார்கள் என்பதை தென்னிலங்கையிலுள்ளவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள தீவிரவாதிகள் சொல்கிறார்கள் என்று, மாகாண சபை அதிகாரங்களை வெட்டிக்குறைக்கும் விஷப் பரீட்சையில் அரசு இறங்கக் கூடாது என்றும் மனோ கணேசன் ஆணித்தரமாகச் சுட்டிக் காட்டினார்.

''செப்ரெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் நவம்பரில் பொது நலவாய மாநாடு என்று ஓர் இரகசிய ஒப்பந்தம் இருப்பது விமலுக்கும், சம்பிக்கவுக்கும் தெரியாதா? அரசு சிக்கலில் சிக்கியிருப்பது இவர்களுக்குப் புரியாதா?

காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் நடத்தப்படும் வடமாகாண சபை தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடும் என்று நாம் நம்பவில்லை. நாம் அப்படி ஒரு நிலைமையை வரவேற்கப் போவதும் இல்லை.'' என்று அவர் மேலும் கூறினார்.

கூட்டமைப்பு இல்லாது வடக்கில் அரசு தேர்தல் நடத்துமாக இருந்தால் அது மணமக்கள் இல்லாத திருமணம் போன்றது என மனோ கணேசன் வர்ணித்தார்.

''அதிகாரங்களை குறைத்தால் வெளியேறுவோம் என்று முஸ்லிம் காங்கிரஸும், அதிகாரங்களை நீக்காவிட்டால் வெளியேறுவோம் என்று விமல் வீரவன்ஸவும் சொல்கின்றனர். எப்படியும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் சில அமைச்சர்களை முன்னாள் அமைச்சர்களைப் பார்க்கலாம் என்றார் அவர். (உ-5)

# மின்னல் தாக்கிய மீனவர் கடலில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 16

இடி, மின்னல் தாக்கத்தால் வல்வெட்டித்துறைப் பகுதியில் படகிலிருந்து கடலில் வீசப்பட்டவர் இரண்டு தினங்களின் பின்னர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

தங்கவேல் அருளானந்தம் (வயது -18) என்பவரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 'மகாசென்' புயல் வீசிய போது வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிப் பகுதிக் கடலில் படகில் நின்று கொண்டிருந்த இருவர் மீது இடி, மின்னல் தாக்கியது.

இதன்போது படகிலிருந்த அருளாந்தம் கடலில் தூக்கி வீசப்பட்டார். இவரைக் கடந்த 2 தினங்களாகத் தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த சடலம் கரையொதுங்கியதாகவும் அதனை உடனடியாகவே தகனம் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

# பாடசாலை மாணவரிடையே வாக்காளர் பதிவு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மே. 16

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே வாக்காளர் பதிவின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் நடத்தப்படவுள்ளன என வட மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினம். அன்றைய தினம் வீடு வீடாக விநியோகிக்கப்பட்ட வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்களை (பி.சி.படிவம்)பதிவு செய்யும் நாளாகும்.

ஜூன் முதலாம் திகதியிலிருந்து ஒரு வார காலத்தினுள் சகல வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்களும் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தினால் மீளப் பெறப்படும்.

எதிர்வரும் முதலாம் திகதி வாக்காளர் தினத்தை முன்னிட்டு, வாக்காளராகப் பதிவதன் முக்கியத்துவம் தொடர்பில் பாடசாலைகளிலுள்ள உயர்தர மாணவர்களுக்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வாக்காளர் பதிவின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தித் துண்டுப் பிரசுரம் மற்றும் பதாகைகள் என்பனவும் காட்சிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணையாளர் மேலும் கூறினார். (த-5)

# இந்திய மீனவர் வராமையால் மீன்பாடு 25 வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே 16

இலங்கைக் கடல் எல்லையினுள். இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறைந்துள்ளமையால் யாழ். மாவட்டத்தில் 25 சதவீதம் வரை மீன்பாடு அதிகரித்துள்ளது என்று யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.



இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களின் 'றோலர்' படகுகள், வட பகுதி மீனவர்களின் வலைகளை அறுத்து வருகின்றன. அத்துடன் சட்ட விரோத மீன்பிடி கடல் வளங்களும் அழிக்கப்படுவதாக வட பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த நிலையில் மீன்களின் இனப்பெருக்க காலத்தை முன்னிட்டு, கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இந்திய மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு இந்திய அரசினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்திய மீனவர்கள் வரமாட்டார்கள் என்பதால் யாழ்ப்பாண மீனவர்கள் துணிவாக ஆழ் கடல் வரை சென்று மீன் பிடிக்கின்றனர்.

அவர்களது வலைகள் அறுத்துச் சேதமாக்கப்படாமையினாலும், இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபடாமையினாலும் இலங்கை மீனவர்களுக்கு அதிகளவான மீன்கள் பிடிபடுவதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களை விட ஏப்ரல் மற்றும் தற்போது வரை சாராசரியாக 25 சதவீத அதிகரிப்பு மீன் பிடியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வட மாகாண சபைத் தேர்தல் ஆடி அசைந்தேனும் ஒப்பேறுமா?

வடக்கு மாகாண சபைத் தேர்தல் செப்ரெம்பர் மாதத்தில் நடத்தப்படும் என்று ஊடகவியலாளர்களுடன் இந்த மாதம் முற்பகுதியில் நடத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து, தேர்தலுக்கு முன்னர் அது செய்ய வேண்டும், இது செய்யக்கூடாது என்று தேர்தலை விரும்பாத - வடக்கில் மாகாண சபை இயங்குவதை விரும்பாத சக்திகள், சாரார்-வாயில்வந்த எல்லாவற்றையும்- தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வருகிறார்கள்; உளறிக் கொட்டுகிறார்கள்.

இவற்றுக்கு மத்தியில், தேர்தலை நடத்தி முடிக்கும் பொறுப்புள்ள, அதிகாரம் கொண்ட, தேர்தல் ஆணையாளர், வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் கைக்கு வரவில்லை என்று சொல்கிறார்.

நிறைவேற்று அதிகாரம் (ஜனாதிபதி), சட்டவாக்கக் கட்டமைப்பு (நாடாளுமன்றம்), அவசியம் ஏற்படும் நிலையில் நீதிமன்றம் ஆகிய முத்தரப்புகளுமே தேர்தல் குறித்து தீர்மானிக்க இயலும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலை எந்தச் சூழ்நிலையிலும் நடத்துவதற்குத் தமது திணைக்களம் தயாராகவே உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் ஆயத்தங்கள் குறித்த தகவல், குரல் மேலெழுந்ததும், குழி பறிக்கக் காத்திருக்கும் தரப்புகள் உசாரடைந்து தமது வண்டவாளங்களை அவிழ்த்து விடத் தொடங்கியுள்ளன.

மாகாண சபைகளுக்கு இப்போதுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் உட்பட அரசமைப்பின் மூன்று பிரிவுகளையும், மாகாண சபைப் பட்டியலில் உள்ள உறுப்புரை ஒன்றையும் திருத்தி அமைத்து அதன் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் முரசு அடிக்கத் தொடங்கியுள்ளது.

அதேபோன்று, அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றவர்களைத் தூண்டி வடக்கு மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கு அரசாங்கம் உள்ளாந்தரமாக திட்டமிடுவதாகவும் சொல்லப்படுகிறது.

அறிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேர்தல் நடத்தப்பட்டால், தாம் அரசை விட்டு வெளியேறப் போவதாக அமைச்சர் வீரவன்ச வீரப்பிரதாபம் பேசிவரும் வேளையில், பயமுறுத்தல் விடுத்து வரும்வேளையில், அரசியல் வட்டாரங்களில் பலவிதமான ஆக்கபூர்வமான கருத்துக்களும் வெளிவராமல் இல்லை.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் எந்த மாற்றங்களும் செய்யாது வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மத்திய, வடமேல் மாகாண சபைகளின் தேர்தலை ஒத்தி வைத்தாலும் பரவாயில்லை; வடமாகாண சபைத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிலைப்பாட்டை மூத்த அமைச்சர்கள் பலர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

வடமாகாண சபைக்கான தேர்தலை ஒத்தி வைத்தால், அனைத்துலக மட்டத்தில் அரசுக்கு அபகீர்த்தி உண்டாகும்.

மிகுந்த கஷ்டப்பட்டு, பல அரசியல் தந்திரங்களை கையாண்டு, இந்தியாவின் ஒத்தாசையுடன்-அதன் ஆசீர்வாதத்தோடும் என்றும் கூறலாம்-பொதுநலவாய உச்சிமாநாட்டை கொழும்பில் செப்ரெம்பரில் நடத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்த பின்னர்-

வடக்குத் தேர்தலை ஏற்கனவே தெரிவிக்கப்பட்டவாறு செப்ரெம்பர் மாதத்தில் நடத்தாது ஒத்தி வைப்பது, நாட்டிற்குப் பல வகைகளிலும் கீர்த்தி இன்மையையும், பாதகமான பின்விளைவுகளையும் தரும் என்றும் அரசின் ஆலோசகர்கள் பலர் எடுத்துக்கூறியுள்ளதாகவும் கருதப்படுகிறது.

போருக்குப் பிந்திய கடந்த நான்கு வருடங்களிலும், வட மாகாண சபைத் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு அனைத்துலகத்துக்கு பல காரணங்களை முன்னிறுத்தி வந்த அரசு, இனி மேலும் அந்த வகைக் கூத்தை ஆட முடியாது என்று உணர்ந்து கொண்டுள்ளது எனலாம்.

இதே வேளை-

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பின்வரும் மூன்று முக்கிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி இருந்தமையையும் இங்கு தொட்டுக் காட்டுவது பொருத்தம்.

★ வடக்குத் தேர்தலுக்கு முன்பதாக சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டும்.

★ தேர்தலுக்கு முன்னதாக வடக்கு மாகாணத்துக்கு சிவில் துறையைச் சேர்ந்த ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

★ பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் மூலம் வட மாகாண சபைக்குரிய தேர்தல் கண்காணிக்கப்பட வேண்டும்.

மோசடிகள், தில்லுமுல்லுகள், அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன இல்லாத சுயேச்சையான சுதந்திரமான தேர்தல் மிக அவசியம்.

இவற்றில் ஊன்றிய கவனம் செலுத்தித் தேர்தல் நடத்தப்படுவதற்கு வகை செய்வது அரசின் தவிர்க்க முடியாத தலையாய கடமை. அது குறித்து மனம்கொள்ளுமா அரசு....?

# சங்கானைப் பிரதேச ஆஸ்பத்திரியின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வு

அச்சுவேலி, மே 16

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் முன்னோடி செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் நோயாளர் நலன்புரி சங்க நிர்வாகிகள் நேரில் சென்று பார்வையிட்டு அறிந்துகொண்டனர்.

இந்தக் களப் பயணத்துக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் செய்திருந்தார்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும் நோயாளர் நலன்புரி சங்கத்தின் தலைவருமான மருத்துவர் கு.கணேசலிங்கம் தலைமையில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குழுவினர் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்குச் சென்றனர்.

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் முன்னோடிச் செயற்பாடுகள், வேலைத்திட்டங்களை வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மருத்துவர் த.பிரகாசன் களப் பயணம் மேற்கொண்டு சென்ற குழுவினருக்கு எடுத்துக் கூறினார்.



சங்கானை வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் கு.குணசிறியும் சமுகமளித்திருந்தார்.

சங்கானைப் பிரதேச வைத்தியசாலையின் மாதிரியை பின்பற்றி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் செயற்பாடுகள் முன்னெடுப்புக்களையும் எதிர்காலத்தில் மேற்கொள்ளுவதற்கு வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வைத்தியசாலைகளின் அபிவிருத்திச் சபைகளுக்குப் பதிலாக நோயாளர் நலன்புரி சங்க கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருவதால் சங்கானை பிரதேச வைத்தியசாலையை பின்பற்றி ஏனைய வைத்தியசாலைகளிலும் முன்மாதிரிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாக ஏனைய வைத்தியசாலைகளின் உத்தியோகத்தர்கள், நலன்புரி சங்க நிர்வாகிகள் சங்கானை வைத்தியசாலையின் செயற்பாடுகளை பார்வையிடுவதற்கான ஏற்பாட்டை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் செய்து கொடுப்பதற்கு முன்வந்துள்ளார். (ம-11)

### நயினாதீவு திருவிழா காலத்தில்

## ஆலய உள் வீதியில் ஒரு பகுதியில் மட்டும் பொலிஸார் கடமையாற்றுவர்

யாழ்ப்பாணம், மே 16

நயினாதீவு அம்பாள் ஆலய திருவிழாக் காலத்தில் ஆலய உள்வீதியில் கடமையாற்றும் பொலிஸார் உட்பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே கடமையாற்றவுள்ளனர்.

உள்வீதியில் கடமையாற்றும் ஆண் பொலிஸார் தமது சிவில் உடைகளுக்குப் பதிலாக வேட்டியுடனும் பெண் பொலிஸார் புடைவையுடனும் கடமையில் ஈடுபட வேண்டும் என்று ஆலய அறங்காவல் சபையால் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதை அடுத்து இவ்வாறு முடிவு செய்யப் பட்டது.

''நாங்கள் சாதாரண உடைகளுடன் கடமையில் இருக்கும்போது பிரச்சினைகள் ஏற்படலாம் திருடர் களுக்கும் எமக்கும் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்து எமது கடமையைச் செய்ய வேண்டுமானால் சீருடையில் கடமையாற்றுவது தவிர்க்க முடியாதது'' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலய திருவிழா ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடலின் போது இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

திருவிழா ஏற்பாடுகள் குறித்த மற்றொரு கூட்டம் யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது என்றும் இதன் போது இது குறித்து ஆராயப்படும் எனவும் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார். (ம-7)

## மீற்றருள்ள ஓட்டோக்களுக்கு இன்று 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும்

யாழ்ப்பாணம், மே 16

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு இன்று வியாழக்கிழமை 'ஸ்ரிக்கர்' ஒடப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஓட்டோக்களில் சில சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளாமல் சேவையில் ஈடுபடுவதால் சங்கத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபடும் ஓட்டோ சாரதிகள் போதிய வருமானம் இல்லாமல் தரிப்பிடங்களில் காத்திருக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக ஓட்டோச் சாரதிகள் சங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சங்க நிர்வாகத்தால் யாழ்.மாநகரசபைக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து.

யாழ்.மாநகர சபையால் ஓட்டோச் சாரதிகளின் நலன் கருதி சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களை அடையாளப்படுத்தக்கூடிய வகையில் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு மட்டுமே 'ஸ்ரிக்கர்' ஒட்ட முடியும்.

இதற்கமைவாக இன்று வியாழக்கிழமை யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் வைத்து ஓட்டோக்களுக்கு 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும்.

இன்று சுமார் 50 ஓட்டோக்களுக்கு 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும். அதனைத் தொடர்ந்து மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்களுக்கு சங்கத்தில் வைத்து 'ஸரிக்கர்' ஒட்டப்படும்.- என்றார். (வ-14)

## குடாநாட்டுக்கான வெளியூர் தபால் 3 மணி நேரம் தாமதித்து வந்தது

### மதவாச்சி–மடு ரயில் சேவை வெள்ளோட்டமே காரணம்

யாழ்ப்பாணம், மே 16

குடாநாட்டுக்கான வெளியூர் தபால் பொதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று மணி நேர தாமதத்தின் பின்னரே வந்து சேர்ந்தன.

இதனால் இவற்றின் விநியோகப் [illegible] தரம் பிரிக்கப்பட்ட தபால்கள் புதன்கிழமை விநியோகிக்கப்பட்டன.

மதவாச்சியில் இருந்து மடுவுக்கான ரயில் சேவையின் வெள்ளோட்ட விழா செவ்வாய்க்கிழமை இடம்பெற்றமையே இந்தத் தாமத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இந்த வெள்ளோட்ட நிகழ்வால் கொழும்பு - வவுனியா தபால் ரயில் தாமதித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மணிக்கூட்டுக் கோபுர திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,மே 16

யாழ்.நகரப் பகுதியில் மீள் புனரமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்தின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலர் ஏ.விஜயலட்சுமியும் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கலந்து கொள்வர். (ம-ரி)

## நயினாதீவு படகு சேவையில் ஈடுபடுவோர் மருத்துவ பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 16

நயினாதீவு படகுச் சேவையில் ஈடுபடும் ஊழியர்களுக்கான மருத்துவ பரிசோதனை நாளை மறுதினம் சனிக்கிழமை நயினாதீவில் நடைபெறவுள்ளது.

நயினாதீவு பொது சுகாதார பரிசோதகர் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளார்.

படகுப் பயணிகளின் பாதுகாப்பு கருதி படகு ஊழியர்களுக்கான இந்த மருத்துவப் பரிசோதனை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஆசிரிய மாணவரை இணைப்பதற்கு நேர்முகத் தேர்வு

கொழும்பு.மே 16

கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிதாக ஆசிரிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியியற் கல்லூரிகளில் அதற்கான நேர்முகத் தேர்வுகள் இடம்பெறும் எனவும், நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் இந்த வாரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்துறைகளுக்கு தெரிவு செய்யப்படவுள்ள ஆசிரிய மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை இடம்பெறவுள்ளது எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## கனகசபை காலிங்கராஜா (சின்னமணி)

இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை, புகுந்த இடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை காலிங்கராஜா (சின்னமணி) கடந்த (11.05. 2013) சனிக்கிழமை இணுவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நேசமலரின் அன்புக் கணவரும் உதயகுமார், விஜயகுமாரி, சசிகுமாரி, நந்தகுமாரி, பாலகுமார், திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா, சந்திரகுமார், அழகானந்தன், குமுதா, சுஜீபா ஆகியோரின் பாசமிகு மாமனும் சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்சா, யதுர்சா, விக்னேஷ், ஹரீஷ், ஹரினி, வைஷினி, வர்ஷினி, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கண்மணி, பொன்னம்மா மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று இணுவில், காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில். (c9434v) (17-16-14) தொடர்பு:- கா.திலீபன் (மகன்) 0778462355

## திருமதி சுகிர்தமலர் ஜெயராஜா



196/A நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தமலர் ஜெயராசா நேற்று(15.05.2013) புதன்கிழமை பி.ப.12.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் தவமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற குருசாமி மற்றும் இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், ஜெயராஜாவின் அன்பு மனைவியும், ராஜி, மைதிலி, காலஞ்சென்ற விஜிதரன் மற்றும் சஞ்ஜீவன், சுகன்னியா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

196/A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (365611)(14-16-17)
தகவல்:
குடும்பத்தினர்.

## நடேசு சுப்பிரமணியம் (பாலசிங்கம்) JP

*(ஒய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர்)*



புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு சுப்பிரமணியம் 14.05.2013 நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் தம்பையா - இரத்தினம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலேந்திரன் (பிரான்ஸ்), சுரேந்திரன் (ஜேர்மனி), ஜெயந்திரன் (லண்டன்), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பராணி, பற்றீஸியா, கிரிஜா, தயாபரன் (தபாலகம்- ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2013) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில். (பி/9432) (23-16-14)

## பிலேந்திரன் யோகராஜா (ராயு)



**(உரிமையாளர் றெக்னோ சலூன் )**

இல.27, கடற்கரை வீதி, நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிலேந்திரன் யோகராஜா (14.05.2013) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பிலேந்திரன் காலஞ்சென்ற தேவராணி தம்பதியரின் அன்பு மகனும், யோசேப் - புஸ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும், விஜிதாவின் அன்புக் கணவரும், திபியா, றெக்னோ (நாவாந்துறை அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி, அமலன், சின்னா (மூன்றாம்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வரதன், நிச்சாட், றமேஸ் ஆகியோரின் சகலனும், சந்திரன், சலூஜா, ரூபிதா, றஜிதா, சுகிர்தா, டெனிதா, பிரிந்தா ஆகியோரின் மைத்துனரும், சதுர்ஷன், சதுர்ஷனா, ஷாம் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.05.2013) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு நாவாந்துறை சென்நீக்கிலஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 27, கடற்கரை வீதி,
நாவாந்துறை. (36560)
தகவல்:
குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாம் ஸ்கூலுக்கு மிக அருகில் பலாலி வீதியை ஒட்டி ஒன்றே முக்கால் பரப்பு சற் சதுரக் காணிகிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0212225363, 0776589624

## காணியும் வீடும் விற்பனைக்கு

கனகரட்ணம் வீதி, அரியாலை என்னும் முகவரியில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு: 0777955706 அல்லது 0779223158 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (36569) (23)

## அதிஷ்லாப சீட்டிழுப்பு முடிவுகள் பிற்போடப்பட்டுள்ளது

**சண்முகராசா இராசரெத்தினம்** (முகாமையாளர், சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்) அவர்களின் திடீர் மறைவின் காரணமாக எமது ஸ்தாபனத்தின் **அட்ஷய திருதியை அதிஷ்டலாப சீட்டிழுப்பு** அன்னாரின் இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின் இடம்பெறும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
சாரங்கா நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

காரைநகர் கசூரீனா கடற்கரையில் (Casutena Beach) பனை, தென்னை, மா போன்ற பயன்தரு மரங்களுடன் கூடிய முக்கியமான 13 ஏக்கர் (210 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
0770780393, 0777696443

## குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகள்

12, 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற அக்ஷய திருதியை கொள்வனவில் வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் பரிசு விவரம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1 சிறி நதியா** இல.1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | | | | மேலும் 06 ஆறுதல் பரிசுகள் - ப.சீ.இ | |
| முதலாம் பரிசு | 2809 | குளிர்சாதனப் பெட்டி | | 1 | 2755 |
| இரண்டாம் பரிசு | 2890 | சலவை இயந்திரம் | | 2 | 2801 |
| மூன்றாம் பரிசு | 3033 | துவிச்சக்கரவண்டி | | 3 | 2663 |
| **2 சிறிநதியா** இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | | | | 4 | 3080 |
| முதலாம் பரிசு | 2039 | குளிர்சாதனப் பெட்டி | | 5 | 2748 |
| இரண்டாம் பரிசு | 2023 | சலவை இயந்திரம் | | 6 | 3103 |
| மூன்றாம் பரிசு | 2328 | துவிச்சக்கரவண்டி | | | |

(C/9433) (10.6) வெற்றியாளர்கள் பற்றுச் ... டன் நேரில் வரவும்.

# NALIN IT

hp DELL

195/2,Palaly road, Parameswara Junction,Palaly Road,Jaffna.

மிக மிக குறைந்த விலைகளில்

LAPTOP களின் புதிய வரவுகள் எம்மிடம்

உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற ஏராளமான தெரிவுகள்

- LAPTOPS
- BRANDED/ASSAMBLED PC
- PRINTERS & TONNERS
- COMPUTER ACCESSORIES
- CCTV CAMERA SYSTEM
- REPAIRING & SERVICE

wih laptops HUAWEI 7.2 Dongle Free

FREE - mouse Headphone Lap Bag



facebook.com/nalin it

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD
TP:0212221121/1166 | HOTLINE-0777667975

**கேள்வி: மென்மையான பாறைகளை உடைப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றது**
**கேள்வி இல: RC/JAF/RM/ENG/JAF/KKS/2013/019**

**கேள்வி: கிறவல் மண் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது**
**கேள்வி இல: RC/JAF/RM/ENG/JAF/KKS/2013/020**

- விண்ணப்பங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட இரண்டு கேள்விகளுக்கும் ஒப்பந்தகாரர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- கேள்விகளை **கேள்வி கோரல் சபை (முகாமையாளர்), பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ **21.05.2013, 14.00** மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றையதினமே உடனடியாக திறக்கப்படும்.
- சேவை அல்லது வேலை இடம்: கீரிமலை கோயிலடி, காங்கேசன்துறை (Inside of the Army / Navy Camp)
- 021 – 321 5568 எனும் தொலைபேசி இலக்கமூடாக பொறியியலாளர். E.ஜெகதீசன் அவர்களிடமும் அல்லது 021 – 222 3742 / 021 – 222 8962 எனும் தொலைபேசி இலக்கமூடாக ஸ்ரீ. முகுந்தன் அவர்களிடமும் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய முகாமையாளர் (யா)
யாழ்ப்பாணம்.
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
கண்டி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோவிலாக்கண்டி ஆலயங்களில் திருடர் கைவரிசை



தென்மராட்சி, மே 16
தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டியில் இரு ஆலயங்கள் ஒரே இரவில் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின. ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்த ஆலய விக்கிரகங்கள் உட்பட பித்தளைப் பொருள்கள் அனைத்தும் அபகரிக்கப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## விசேட தேவையுடைய மாணவருக்கான விளையாட்டுவிழா


தென்மராட்சி, மே 16
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் வலய மட்ட விளையாட்டு விழா இன்று கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண விசேட ஒலிம்பிக் குழுவின் பணிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறை விரிவுரையாளருமான மா.இளம்பிறையன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஒய்வு நிலை ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவும் கௌரவ விருந்தினராகக் கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரனும் கலந்துகொள்வர். (வ-9)

## சகலகலா வித்திக்கு கற்றல் உபகரணங்கள்


சாவகச்சேரி,மே 16
தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட மறவன் புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு கணினி மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் பாடசாலை அதிபர் யோ.ஜெயகாந்தன் தலைமையில் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கணினியை 522 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் அனுர சுதர்சிங்க வழங்கினார். தொடர்ந்து 523 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் அத்துல மாரசிங்க, 18 ஆவ்து படைப்பிரிவின் கட்டளை அதிகாரி லெப் கேணல் சம்பத் புளத் ஆகியோர் கற்றல் உபகரணங்களை வழங்கினர்.
நிகழ்வில் சிவில் அதிகாரி லெப் கேணல் அபயவர்த்தனா, தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-131)

# கட்டடங்கள் நாளை திறப்பு

## தென்மராட்சி கல்வி வலயத்தில்



தென்மராட்சி,மே 16
தென்மராட்சி கல்வி வலயத்தில் சேவாலங்கா மற்றும் மாகாண பாடசாலை அபிவிருத்தி நன்கொடைத் திட்டம் என்பவற்றின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் நாளை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன.
சேவா லங்கா நிறுவனத்தினரால் நாவற்குழி மகா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் ஆகியவற்றிலும் மாகாண பாடசாலை அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் மூலம் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி ஆகியவற்றிலும் நிர்மாணிக்கப்பட்ட புதிய மாடிக் கட்டடங்களே திறந்து வைக்கப்படவுள்ளன.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்வார். (வ-9)



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வடக்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் இராஜகோபுரத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆலய உற்சவத்துக்கு முன் நிறைவடையவுள்ளன. (வ 7)

## கொடிகாமம் வர்த்தகர்கள் 12 பேர் வசமாக சிக்கினர்

தென்மராட்சி, மே 16
யாழ்.மாவட்டச் செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது அண்மையில் திடீர் பரிசோதனைகளை நடத்தினர்.
காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, விலைப்பட்டியல் வைக்கப்படாமை, நிறைகுறைவாக பொருள்கள் விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்களுக்காக 12 வர்த்தகர்களை இனங்கண்டுள்ளனர்.
குறித்த 12 வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# சட்டவிரோத மது விற்பனையை பிடிப்பதில் நெருக்கடி நிலை


## நயினாதீவுக் கூட்டத்தில் பொலிஸார்

யாழ்ப்பாணம்,மே 16
நயினாதீவில் சட்டவிரோத மது விற்பனையாளர்களைப் பிடிக்க நாம் வருவதற்கு முன்பாக குறிப்பிட்ட விற்பனையாளர்களுக்கு யாரோ இரகசியத் தகவல்களை வழங்கி விடுகின்றனர். இதனால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழா ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடலின் போது இவ்வாறு கூறப்பட்டது.
வியாபாரிகள் தமது இதர பொருள்களுடன் சாராயப் போத்தல்களையும் சேர்த்துக் கொண்டு வந்து விடுகின்றனர். இதனால் திருவிழாக் காலத்தின் போது நயினாதீவுப் பகுதியில் மதுபோதையில் எவராவது காணப்படின் அவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**திருவிழாக் காலத்தின் போது மதுபோதையில் எவராவது காணப்படின் அவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.**

வியாபாரிகள் மீதான சோதனை கடுமையாக இருக்கும்.
அமுதசுரபி அன்னதான சபைக்கு எடுத்துவரும் பொருள்களை அதற்கான கடிதத்தைச் சமர்ப்பித்தால் தாமதமின்றி அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
அன்னதான சபைக்கு வரும் பொருள்கள் சில சமயங்களில் தாமதப்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டதை அடுத்தே பொலிஸார் இவ்வாறு கூறினர். (ம-7)

# சாவகச்சேரி வைத்தியசாலை விடுதியை பதம் பார்த்த 'மகாசென்'



தென்மராட்சி,மே 16
'மகாசென்' புயல் சாவகச்சேரி வைத்தியசாலை நான்காம் இலக்க விடுதியின் கூரைப் பகுதியைச் சேதப்படுத்தியுள்ளது.
பின்லாந்து -ஐரிஸ் நாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களின் நிதி உதவியுடன் இலங்கை பொறியியலாளர் நிர்மாணப் பிரிவினரால் வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் மேல்மாடிக் கூரையின் தட்டைத் தகடுகள் (Level Sheets) ஓர் அறைக்குள் உடைந்து வீழ்ந்ததுடன் பல இடங்களில் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (வ-9)

# வெறிச்சோடிக் காணப்படும் அங்காடி வியாபாரக் கடைகள்



யாழ்ப்பாணம், மே 16
யாழ்.மாநகரசபையால் ஆஸ்பத்திரி வீதிச் சந்திப் பகுதியில் அமைக்கப்பட்ட அங்காடி வியாபாரக் கடைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கடைகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே திறந்து வைக்கப்பட்டன. எனினும் இங்குள்ள கடைகளில் வியாபாரம் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.
இந்தக் கடைத்தொகுதி சரியான அமைப்புடன் அமைக்கப்படவில்லை. இதன் காரணமாகவே வியாபாரிகள் கடைகளை நடத்த முடியாத நிலையில் உள்ளனர் என்று மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி கூறினார்.
இந்தக் கடைத் தொகுதி தொடர்பாக அடுத்த மாதக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் அவர் கூறினார். (ம-17)

# படையினர் ஆக்கிரமிப்பில் கொல்களம் மாடுகள் வெட்டுவதற்கு திண்டாட்டம்


## இறைச்சிக் கடைக்காரர்கள் சிரமம்

வலி.தென்மேற்கு,மே 16
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணியில் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டிருந்த கொல்களத்தைப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இதனால் இந்தப் பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்கடை வைத்திருப்பவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதுடன் மாடுகளை வெட்டுவதற்கு தூர இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள்.
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் காக்கைதீவு கடற்கரையில் இயங்கி வந்த கொல்களத்தைப் பயன்படுத்த போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக் கருதித் தடை விதித்திருந்தனர். இதனால் இந்தப் பிரதேசத்தில் மாட்டிறைச்சிக் கடை வைத்திருப்பவர்கள் மாடுகளை வெட்டுவதற்கு வலி.தெற்கு, வலி.மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள கொல்களங்களைப் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து, பண்டத்தரிப்பு பகுதியில் காடாப்புலம் என்னும் இடத்திலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் பல லட்சம் ரூபா செலவில் கொல்களம் அமைக்கப்பட்டது.

**42 பரப்பு விஸ்தீரணமுள்ள இந்தக் காணியைப் பாதுகாப்புப் படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளார்கள். இதனால் இந்தக் காணியிலுள்ள கொல்களத்தைப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது**

42 பரப்பு விஸ்தீரணமுள்ள இந்தக் காணியைப் பாதுகாப்புப் படையினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ளார்கள். இதனால் இந்தக் காணியிலுள்ள கொல்களத்தைப் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. மாட்டிறைச்சிக்கடை வைத்திருப்பவர்கள் மாடுகளை வெட்டுவதற்கு மீண்டும் தூர இடங்களுக்கு அலைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காக்கை தீவிலுள்ள கொல்களம் தற்பொழுது கள்ளுத்தவறணையாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக வடிவமைக்கப்பட்ட ஆளில்லா தாக்குதல் விமானம் ஒன்றை அமெரிக்க கடற்படை சோதனை செய்துள்ளது. நேற்றுமுன்தினம் வேர்ஜினியா கடற்படைத் தளத்தில் செய்யப்பட்ட சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது என்று அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது. இந்த விமானம் 40 ஆயிரம் அடி உயரத்தில் 2 ஆயிரத்து 100 கடல்மைல் வேகத்தில் பயணத்தை மேற்கொள்ளவல்லது.

# அழகை உதறினார் ஏஞ்சலினா ஜுலி

## அதிர்ச்சியில் இரசிகர்கள்

நியூயோர்க், மே 16

மூன்று பெண்கள் 10 ஆண்டுகளின் பின்னர் மீட்கப்பட்ட சம்பவம் மற்றும் அனைத்துப் பிரச்சினைகளையும் மீறி தற்போது ஒரு விடயம் மட்டுமே அமெரிக்காவின் அனைத்து ஊடகங்களின் தலைப்புச் செய்தியாகியுள்ளது.

அது வேறொன்றுமில்லை, நடிகை ஏஞ்சலினா ஜுலி சத்திரசிகிச்சை மூலம் தனது மார்பகங்கள் இரண்டையும் நீக்கிக் கொண்டமைதான்.

இந்தத் தகவல் வெளியாகியதும் ஏஞ்சலினாவின் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். ஊடகங்கள் அனைத்திலும் அதுவே தலைப்புச் செய்தியாகின.

37 வயதாகும் ஏஞ்சலினா ஜுலி, ''புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்ததை அடுத்தே இந்தமுடிவை நான் எடுத்தேன்'' என்று தெரிவித்துள்ளார்.

ஏஞ்சலினாவின் தாயாரும் 10 ஆண்டுகளுக்கும் மேலாக புற்றுநோயுடன் போராடி 56 வயதில் உயிரிழந்தார். (ற)



# அமெரிக்க இராஜதந்திரி ரஷ்யாவில் கைது



மொஸ்கோ, மே 16

சி.ஐ.ஏக்கு முகவர்களைத் திரட்ட முயன்றார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் ரஷ்ய பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் உள்ள மூன்றாவது செயலாளரான றியான் பொகின் என்ற இராஜதந்திரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

''ரஷ்யாவைச் சேர்ந்த ஒருவரை சி.ஐ.ஏ. முகவராகச் செயற்படுமாறு பொகின் கோரினார். அதையடுத்தே நாம் அவரைக் கைது செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டோம். அவரிடமிருந்து நவீன கருவிகள் மற்றும் பெருமளவு பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன'' என்று ரஷ்யப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற)

# மியான்மர் படகு விபத்தில் 100 பேரை காணவில்லை

பாக்டாவ், மே 16

மியான்மரில் இடம்பெற்ற படகு விபத்தில் 100 பேர் காணாமற்போயுள்ளனர்.

வங்கக் கடலில் தற்போது நிலைகொண்டுள்ள 'மகாசென' புயல் மியான்மரை நோக்கித் தற்போது நகர்ந்து வருகிறது. அதையடுத்து அங்கு கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது.

இந்தநிலையில், தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவசர அவசரமாகப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

அவ்வாறு மக்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்றே விபத்தில் சிக்கியுள்ளது. குறித்த படகில் 100க்கும் அதிகமான மக்கள் பயணித்தனர் என்று அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



''கடும் காற்று மற்றும் மழை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. படகில் பயணித்த எவரும் இதுவரை மீட்கப்படவில்லை. விபத்தில் சிக்கியோரில் பெரும்பாலானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. காணாமற்போனவர்களைக் தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன'' என்று மீட்புக்குழுவினர் கூறுகின்றனர்.

விபத்தில் சிக்கியவர்கள் கடந்த ஆண்டு இடம்பெற்ற மதக் கலவரத்தால் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியிருந்தவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# பாகிஸ்தான் தூதுவர் பதவி விலகினார்

நியூயோர்க், மே 16

அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஷெர்ரி ரஹ்மான் பதவிவிலகியுள்ளார். இதுதொடர்பாக அமெரிக்காவில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஷெர்ரி ரஹ்மான் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டுள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை பாகிஸ்தான் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# நீதிமன்றக் காவல் முஷாரப்புக்கு நீடிப்பு



இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரபின் நீதிமன்றக் காவல் எதிர் வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு முஷா ரப் ஆட்சியிலிருந்த போது பெனாசீர் பூட்டோ குண்டுவெடிப்பில் உயிரிழந்தார். அப்போது அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று முஷாரப் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள முஷாரப், பயங்கரவாத தடுப்பு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அப்போது முஷாரப்பின் சட்டத்தரணி சல்மான் சாப்தார் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அதையடுத்து முஷாரப்புக்கு விதிக்கப்பட்டிருந்த நீதிமன்றக் காவலை எதிர் வரும் 28 ஆம் திகதிவரை நீடிப்பதாக நீதிபதி அறிவித்தார்.

இதேவேளை, நீதிபதிகளை பதவியிலிருந்து நீக்கி, தடுப்புக் காவலில் வைத்திருந்தமை, பலுசிஸ்தான் தேசியவாதத் தலைவர் அக்பர் பக்டி மீது இராணுவத் தாக்குதல் நடத்தி கொல்ல முயன்றமை போன்ற பல்வேறு வழக்குகளில் முஷாரப் குற்றவாளிகள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# 4 வயதுச் சிறுவன் மேயராகத் தெரிவு

டோர்செட், மே 16

அமெரிக்காவில் நான்கு வயது சிறுவன் மேயராகி உலக மக்கள் அனைவரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளான்.

அமெரிக்காவின் மின்னிசோட்டா மாகாணத்தில் வசிப்பவன் ராபர்ட் டப்ஸ். அமெரிக்காவில் 22 பேர் மட்டுமே வசிக்கும் டோர்செட் நகரத்தின் மேயராக அவன் தெரிவு செய்யப்பட்டுள்ளான். அந்நகர மக்கள் குலுக்கல் முறையில் டப்ஸை மேயராகத் தேர்ந்தெடுத்தனர். 4 வயதான டாப்ஸ் இன்னும் பாலர் வகுப்பில் தேர்ச்சி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# விருது வழங்கும் விழாவில் வன்முறை பொலிஸார் உட்பட 30 பேர் படுகாயம்

பாரிஸ், மே 16

பிரான்ஸில் 19 வருடங்களுக்குப் பின்னர் நடைபெற்ற கால்பந்து விருது வழங்கும் விழாவில் பெரும் வன்முறை வெடித்தது. அந்த வன்முறைகளில் பொலிஸார் உட்பட 30 பேர் படுகாயங்களுக்கு ஆளாகினர்.

பரிஸ் நகரில் டிரொகாடெரோ பகுதியில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் விளையாட்டு வீரர்களைப் பார்க்க வந்த ரசிகர்களிடையே திடீரென்று பெருங் கூச்சல், குழப்பம் ஏற்பட்டு வன்முறை வெடித்தது.

அதையடுத்து வன்முறையைத் தடுக்க முயன்ற பொலிஸாருக்கும், ரசிகர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அந்த மோதல்களில் மூன்று பொலிஸார் உட்பட முப்பது பேர் காயமடைந்துள்ளனர். கலவரத்தை அடக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

எண்ணூறு பொலிஸார்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோதும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அவர்கள் பல மணி நேரம் போராட வேண்டியிருந்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நகர காவல்துறை உயர் அதிகாரி பெர்னார்டு போகல்ட், ''இனி ஒருபோதும் கால்பந்தாட்ட விருது வழங்கும் விழாக்கள்நடத்துவதற்குஅனுமதிவழங்கப்படமாட்டாது'' என்று தெரிவித்தார். (ற)




# மதுபானசாலையில் துப்பாக்கிச் சூடு

## 12 பேர் சாவு: பலர் காயம்

தெஹ்ரான், மே 16

ஈராக் தலைநகரில் மதுபானசாலை ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 12 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

பாக்தாத்தில் உள்ள சயுனா என்ற இடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் பணியில் இருந்த காவல்துறையினரைக் கடந்து நான்கு வண்டிகளில் வந்தவர்களே மதுபானசாலையில் திடீரென துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

இஸ்லாம் மதத்தில் மதுபானம் தடை செய்யப்பட ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. ஆயினும், சிறுபான்மை மதத்தினரை பணியில் அமர்த்தி மதுபானசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ. 100 கோடி செலவில் தமிழ்த் தாய்க்கு சிலை

### அறிவித்தார் முதல்வர் 'ஜெ'

சென்னை, மே.16
அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலையைப் போல மதுரையில் பிரமாண்ட அளவில் தமிழ்த் தாய்க்கு ரூ. 100 கோடி ரூபா செலவில் சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் விதி எண் 110 இன் கீழ்இந்த அறிவிப்பை முதல்வர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் வெளியிட்டார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருமை வாய்ந்த தமிழ் மொழியை சிறப்பிக்கும் வகையில், அமெரிக்கா நாட்டின் பெருமையையும் புகழையும் உலகளவில் பரப்பும் வகையில் அமைந் துள்ள சுதந்திர தேவி சிலையைப் போல, தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, இலக் கியச் செல்வங்கள், கட்டடக் கலைத் திறன் ஆகியவற்றை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 100 கோடி ரூபா மதிப்பீட்டில் தமிழ்த் தாய் சிலை அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐவகை நிலங்களான குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகியவற்றின் மாதிரிகளை உருவாக்கி தமிழர்களின் தொன்மைச் சான்றுகளாய் விளங்கும் சங்க இலக்கி யங்களில் குறிப்பிட்டுள்ள மரம், செடி, கொடிகளுடன் தமிழ்த் தாய்ப் பூங்கா ஒன்றும்அங்கு உருவாக்கப்படும் -என்றார். (வ-7)

## நடிகர் சஞ்சை தத்துக்கான கால அவகாசம் நிராகரிப்பு



மும்பை, மே 16
மும்பை குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஹிந்தி நடிகர் சஞ்சய் தத் சரணடைய மேலும் கால அவகாசம் கோரி தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக தயாரிப்பாளர்கள் இருவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் மேலும் கால அவகாசம் வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து உடனடியாக அவர் கட்டாயமாகச் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் நடிக்கும் படங்களுக்கான படப்பிடிப்புகள் ரத்தாகும் சூழல் உருவகியுள்ளத்தால் சுமார் 278 கோடி ரூபா முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மும்பை குண்டு வெடிப்பு மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி சஞ்சய் தத்துக்கான சிறைத் தண்டனையை 5 ஆண்டுகளாகக் குறைத்து உறுதிசெய்தது. மேலும் அவர் சரணடையவும் 4வார கால அவகாசம் அளிக்கப்பட்டது.

முன்னதாக சிறைத் தண்டனையை நீக்கக் கோரி சஞ்சய் தத் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் சில மாதங்களுக்கு முன் நிராகரித்தது.

இதுவரை 18 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ள அவருக்கு மீதமுள்ள 42 மாத சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (வ)

# தீவிரமடையும் கண்காணிப்பு

### சுகோய் போர் விமானங்களை தஞ்சாவூரில் நிலை நிறுத்தும் இந்தியா



தஞ்சாவூர், மே.16
இந்தியப் பெருங்கடலின் மீதான மூலோபாய கண்கா ணிப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தென்னிந்தியாவில் தனது அதிசக்தி வாய்ந்த சுகோய் போர் விமானங்களை நிறுத்தும் திட்டத்தை இந்தியா தீவிரப் படுத்தியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழ் நாட்டில் உள்ள தஞ்சாவூரில், புதிய விமானத் தளத்தை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி திறந்து வைக்கவுள்ளார்.

சுகோய் போர் விமான அணி ஒன்று(ஸ்குவாட் ரன்) இங்கு நிலை நிறுத்தப்படும். இந்தத் தளத்தில், விமானத் தரிப்பிடங்கள், எரிபொருள் குதங்கள், உள்ளிட்ட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் அடுத்த சில ஆண்டுகளில் செய்யப் படவுள்ளன. இந்த அணியில் 16 -18 வரையான சுகோய் போர் விமானங்கள் இடம் பெறவுள்ளன.

தஞ்சாவூர் ஓடுதளம் அமைக்கப்பட்டதில் இருந்து வழக்கமான போர் விமானங்கள் மற்றும் போக்குவரத்து விமானங்களின் தரிப்பிட மாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இங்கு சுகோய் போர் விமானங்களை நிலைநிறுத்துவதன் மூலம் அந்தமான் நிகோபார் தீவுகள் உள்ளிட்ட வங்காள விரிகுடா முழுவதும், அவற்றின் கட்டுப்பாட்டில் வரும்.

இதேவேளை- இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களிலும்-சீனா மற்றும் பாகிஸ்தானை அண்டிய பகுதிகளில் மேலும் சுகோய் விமான அணிகளை இந்தியா நிறுத்தவுள்ளது.

ரஷ்யாவிடம் 272 சுகோய் போர் விமானங்களை வாங்க உடன்பாடு செய்து கொண்ட இந்தியா 170 இற்கும் அதிகமான போர் விமானங்களை இதுவரை பெற்றுள்ளது.

ஏற்கனவே மகாராஸ்டிர மாநிலத்தில் உள்ள புனேயிலும், உத்தரப்பிரதேசத்தில் உள்ள பரெய்லியிலும் தலா இரண்டு ஸ்குவாட்ரன் சுகோய் விமானங்களை இந்தியா நிறுத்தியுள்ளது.

சீனாவின் வான் நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்கில் தேஜ்பூர், சபுவா, பரெய்லி ஆகிய தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக திபெத் பிரதேசத்தில் 8 நடவடிக்கை விமான தளங்களை நிறுவி யுள்ள சீனா அவற்றில் 21 ஸ்குவாட்ரன் போர் விமானங்களை நிறுத்தியுள்ளது.

சீனா அண்மையில் ஜே-10, சுகோய் - 27 யுபிகே, சுகோய் - 30 எம். கே.கே. போர் விமானங்களுடன் திபெத் பிரதேசத்தில் ஒத்திகைகளில் ஈடுபட்டது.

காலம் கடந்த மிக் போர் விமானங்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால் தற்போது இந்திய விமானப் படையின் பலம் 34 ஸ்குவாட் ரன்களாக குறைந்துள்ளது. இதனால் இன்னும் அதிக போர் விமான அணிகள் தேவை என்றும், நவீன போரில் விமானப்படை பலம் மிக முக்கியமானது என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹல்வாரா, சிர்சா, ஜோத்பூரில் உள்ள சுகோய் ஸ்குவாட்ரன்கள் பாகிஸ்தானின் எந்தத் தாக்குதலையும் முறியடிக்கும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தியாவுக்குள் சீனாவின் படைகள் ஊடுருவியிருந்தது. பின்னர் தனது படைகளை சீனா வாபஸ் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

### எல்லைப்பிரச்சினை: தீர்வு காண இந்தியா தயார்

எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண தயாராகவே இருக்கிறோம் என்று சீனா வுக்கு இந்தியா பதிலளித்துள்ளது.

முன்னதாக இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண விரும்புகிறோம் என்று சீனா கடந்த திங்கட்கிழமை தெரிவித்திருந்தது.

டில்லியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன்,

''எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பது இருதரப்பு நலனுக்கும் வழி வகுக்கும். பாதுகாப்பு நோக்கில் இருநாடுகளின் முக்கிய நோக்கமாக இது இருக்க வேண்டும்'' என்றார்.

### இந்தியாவின் முதல் பெண் சிப்பாய் மர்மச் சாவு

இந்தியாவின் முதலாவது பெண் இராணுவச் சிப்பாய் தூக்கிட்டு மர்மான முறையில் இறந்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் ஜல்பை கூரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஷாந்தி டிக்கா (வயது 36). அவர் ரயில்வே பொறியியலாளர் பிராந்தியத்தின் 969 ஆவது இராணுவப் பிரிவில் சேர்ந்து கடும் பயிற்சி எடுத்து இந்தியாவின் முதலாவது பெண் இராணுவச் சிப்பாய் என்ற பெருமைபெற்றார். கடந்த 11 ஆம் திகதி இவரை மர்ம நபர்கள் கடத்திச் சென்றனர்.

அவரது கண்கள் துணியால் கட்டப்பட்டு, கடுமையாக தாக்கப்பட்டதற்கான ரத்தக் காயங்களுடன் ரயில் தண்டவாளம் அருகே மயக்க நிலையில் கிடந்தார். மறுநாள் மீட்கப்பட்டு அலிபுர்டுவார் ரயில்வே மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மருத்துவமனை பகுதியில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அவர் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாரா? அல்லது அவரது தற்கொலைக்கு வேறு காரணம் உண்டா என விசாரணை இடம்பெற்று வருகின்றது. (வ)

## சி.பி.ஐக்கு தன்னாட்சி அதிகாரம்

### ஆராய அமைச்சர் குழுவை நியமித்தார் மன்மோகன்



டில்லி, மே 16
மத்திய புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) தன்னாட்சியுடன் செயற்படுவதை உறுதி செய்வதற்கான வழி வகைகளை ஆராய்வதற்காக, மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தலைமையில் அமைச்சர்கள் குழுவை பிரதமர் மன்மோகன் சிங் செவ்வாய்க் கிழமை நியமித்தார்.

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் முறைகேடு நடை பெற்றதாக சமூக ஆர்வலர் பிரசாந்த் பூஷெண் உள்ளிட்ட சிலர் தொடர்ந்துள்ள வழக்கு உச்ச நீதிமன்ற மேற்பார்வையில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கின் விசாரணை அறிக்கையை, சி.பி.ஐ. இயக்குநர் ரஞ்சித் சின்ஹா அண்மையில் மத்திய சட்ட அமைச்சராக இருந்த அஸ்வனி குமார், பிரதமர் அலுவலகம், மத்திய நிலக்கரித் துறை அதிகாரி ஆகியோருடன் பகிர்ந்து கொண்டார். இது குறித்து நீதிமன்றத்தின் கவனத்துக்கு மனுதாரர்கள் கொண்டு சென்றனர்.

இதையடுத்து, விசாரணை அறிக்கையைப் பார்வையிட்ட விவகாரத்தில் மத்திய அரசுக்கும் சி.பி.ஐ. இயக்குநருக்கும் உச்ச நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. ''சி.பி.ஐயின் தன்னிச்சையான செயற்பாட்டை உறுதிப்படுத்த தனிச் சட்டம் ஏதாவது கொண்டு வர வேண்டுமா என உடன் ஆராயப்பட வேண்டும் சி.பி.ஐ. தன்னிச்சையாகச் செயற்படுவதை உறுதிப்படுத்தத் தவறினால் இந்த விடயத்தில் நீதிமன்றமே நேரடியாகத் தலையிட்டு சில உத்தரவுகளைப் பிறப்பிக்கும் நிலை ஏற்படும்.

இது குறித்து மத்திய அரசு நீதிமன்றத்தில் தனது நிலையைத் தெரிவிக்க வேண்டும். சி.பி.ஐக்குத் தன்னாட்சி அளிப்பதற்கு சட்டம் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்'' என்று குறிப்பிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

மத்திய சட்டத்துறை அமைச்சர் பதவியில் இருந்து அஸ்வனி குமார் கடந்த் வெள்ளிக்கிழமை விலகினார். அந்தத் துறையின் அமைச்சராக கபில் சிபல் நியமிக்கப்பட்டார்.

இதையடுத்து, சி.பி.ஐ. தன்னிச்சையாகச் செயற்படுவதை உறுதிப்படுத்த எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்பது குறித்து மத்திய அமைச்சரவைச் செயலர், பிரதமர் அலுவலக உயரதிகாரிகளுடன் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார். (வ)

## கூடங்குளம் அணு நிலையத்தில் தரமற்ற கருவிகள் பயன்பாடு

### பிரதமருக்கு விஞ்ஞானிகள் கடிதம்

சென்னை, மே.16
கூடங்குளம் அணுமின் நிலையத்தில் தரமற்ற கருவிகள் பயன்படுத்தப்படுவதை தடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 60 விஞ்ஞானிகள் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழகத்தின் நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் அமைந்துள்ள அணு மின் நிலையத்தை மூட வேண்டும் என்று தொடர் போராட்டம் நடைபெற்றுவரும் வேளையில், கூடங்குளம் அணு மின்நிலையம் செயற்படுவதற்கு உச்ச நீதிமன்றம் கடந்த 6 ஆம்திகதி அனுமதிவழங்கியது.

இந்த நிலையில், அணுமின் நிலையத்தின் 'கிரிட்டிகல் சேப்டி சிஸ்டம்' பிரிவில் பயன்படுத்தப்படும் 4 வால்வுகள் தரம் குறைந்தவை என்று ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது.

இதனிடையே, தரம் குறைந்த அந்தக் கருவிகள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கக் கோரி உயர் கல்வி நிலையங்களைச் சேர்ந்த 60 விஞ்ஞானிகள், பிரதமர் மன்மோகன்சிங்குக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

அந்த கடிதத்தில், கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட அந்த கருவிகள் தரம் வாய்ந் தவைதானா என்பதை உறுதி செய்த பின்னரே அங்கு மின் உற்பத்தியை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த திங்கட்கிழமை வீசிய சூறாவளியால் மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட கிரான்குளத்தில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டின் மேல் தென்னை மரம் வீழ்ந்து சேதப்படுத்தியுள்ளது.

# மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு அநீதி

## கிழக்கில் 80 வீதமானோர் எம்மவர்களாக இருந்தும் பயன் ஏதுமில்லை என்கிறார் உறுப்பினர் மஹ்ரூப்

திருகோணமலை,மே 16

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெறுகின்றது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அமைச்சரவையில் 80 வீதமானோர் முஸ்லிம்களாக இருந்தும் நியமனங்களின் போது முஸ்லிம்களுக்கு அநீதி இடம்பெற்று வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

கிண்ணியா, மாஞ்சோலை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நியமனங்களின் போது எந்த இனமும் பாதிக்கக்கூடாது என்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசு 1990 ஆம் ஆண்டு இன விகிதாசார நியமனத்தை அறிமுகப்படுத்தியது.அதற்காக பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை ஒன்றையும் வெளியிட்டது.

இந்தச் சுற்றறிக்கை தற்போதும் நடைமுறையிலுள்ளது. எனினும் கிழக்கு மாகாணத்தைத் தவிர வேறெங்கும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படும் போது 1981ஆம் ஆண்டு சனத்தொகை அறிக்கையே உத்தியோகபூர்வமானதாக இருந்ததால் அது பின்பற்றப்பட்டு வந்தது. தற்போது புதிய சனத்தொகை அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி முஸ்லிம்களின் விகிதாசாரம் கிழக்கு மாகாணத்தில் சுமார் 5 சதவீதமாக அதிகரித்துள்ளது. எனவே, அதற்கேற்பவே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும். எனினும் இன்னும் பழைய தரவுகளே பின்பற்றப்படுவதால் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர், பட்டதாரி ஆசிரியர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற நியமனங்களில் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. -என்றார்.(ச)

# அரசுக்கு முட்டுக்கொடுக்கும் அனைத்து முஸ்லிம் கட்சிகளையும் புறக்கணிக்குக

## வடக்கு முஸ்லிம்களை கேட்கிறது முஸ்லிம் மக்கள் கட்சி



மட்டக்களப்பு,மே 16

கிழக்கு முஸ்லிம்களை நாடகமாடி ஏமாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது வட மாகாண முஸ்லிம்களையும் ஏமாற்றுவதற்காக நாடகமாடுகிறது.

இவ்வாறு முஸ்லிம் மக்கள் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண முஸ்லிம்கள் விடயத்தில் எதுவித அக்கறையுமற்றிருந்த முஸ்லிம் காங்கிரஸ் இப்போது அவர்கள் பற்றி நீலிக்கண்ணீர் வடிக்க ஆரம்பித்துள்ளது.


அண்மையில் வட மாகாணம் சென்ற ரவூப் ஹக்கீம் தாம் சூழ்நிலைக் கைதியாக உள்ளதாக கூறி தமிழ் மக்களின் அனுதாபத்தை பெற முயற்சித்துள்ளார். இவரை யாரோ பலாத்காரப்படுத்தி அரசில் வைத்திருப்பது போன்று கூறியுள்ளார்.

உண்மையில் இவர் ஒன்றும் சூழ் நிலைக்கைதியாக இல்லை. மாறாக சுய நலக்கைதியாக உள்ளார் என்பதே சரியானதாகும்.

இன்றைய அரசுக்கு முட்டுக்கொடுக்கும் அனைத்து முஸ்லிம் கட்சியினரும் சுய நலக்கைதிகளாகவே உள்ளனர். வட மாகாண சபைத் தேர்தல் எட்டிப்பார்ப்பதால் சூழ்நிலைக் கைதி என்றும், கட்சியின் உயர்பீட கூட்டம் விரைவில் கூடி கடுமையான தீர்மானம் எடுக்கும் என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள் .-என்றார். (ச)

# சம்பூர் மின் நிலையம் வந்தும் மின்சார சபைக்கு நட்டமே

## ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு குற்றச்சாட்டு



திருகோணமலை,மே 16

சம்பூர் நிலக்கரி மின் நிலையம் அமைக்கப்பட்டதன் பின்னர் ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்கு மேலும் நட்டம் ஏற்படும் என்று ஊழலுக்கு எதிரான கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை மின்சார சபை ஏற்கனவே நட்டமடைந்துள்ள நிலையில் இன்னும் நட்டமடையும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த மின் நிலையத்தை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள முறைக்கேடாலே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்த அமைப்பின் பேச்சாளர் சமன் தேசப்பிரிய தெரிவித்தார்.

குறைந்தளவு வினைத்திறனுள்ள மின் உற்பத்தித் தொகுதியை அமைப்பதற்கான ஒப்பந்தம் காரணமாக ஆண்டுக்கு 4.9 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படவுள்ளது என்று அவர் கூறினார்.


தரக்குறைவான அந்தத் தொகுதியைப் பாராமரிக்க ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா கூடுதலாகவும் தேவைப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சம்பூர் மின் உற்பத்தியில் கிடைக்கும் லாபம், சர்வதேச நியமங்களுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு 1.2 பில்லியன் ரூபா குறைவானதாகலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பூர் மின் உற்பத்தி நிலையம் ஆண்டுக்கு 7.3 பில்லியன் ரூபா நட்டம் அடையவுள்ளது. இந்த நட்டத்தை இவ்வாறான பாதகமான ஒப்பந்தத்துக்குக் காரணமான அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டும் என்று அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (ச)

# இறால் வளர்ப்பை தடை செய்யுங்கள்

## பொது அமைப்புக்கள் வேண்டுகோள்



மட்டக்களப்பு,மே 16

வவுணதீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரையாக்கந்தீவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இறால் வளர்ப்பைத் தடைசெய்யுமாறு கரையாக்கந்தீவு பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இறால் வளர்ப்பதற்காக உவர்நீர் தேக்கப்படுவதனால் வயல்கள் உவர்த்தன்மையாகி விளைச்சல் பாதிக்கப்படுகின்றது. அதனால், குடிதண்ணீர்க் கிணறுகள் உப்புத் தண்ணீராக மாறுகின்றன என்று அந்த அமைப்புக்கள் தெரிவித்தன. (ச)

# இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட பட்டதாரிப் பயிலுநருக்குக் கால் முறிவு

மட்டக்களப்பு,மே 16

மட்டக்களப்பு ,ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் இருந்து மின்னேரியா இராணுவ பயிற்சி முகாமுக்கு சென்று பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் கால்முறிவு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் பணியாற்றிய முகைதீன் என்ற இளைஞருக்கே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மின்னேரியா இராணுவ பயிற்சி முகாமில் மலையேறிக் கொண்டிருந்தபோது சறுக்கி விழுந்து கால்முறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுன்றது.

குறித்த இளைஞர் தற்போது பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார் என்று அவருடைய பெற்றோர் தெரிவித்தனர்.

மின்னேரியா இராணுவ பயிற்சி முகாமில் கடுமையான பயிற்சிகளை தங்களது பிள்ளைகளுக்கு வழங்குவதாக முறைப்பாடு தெரிவிக்கும் பெற்றோர்கள், எமது பிள்ளைகளை கஷ்டத்தின் மத்தியிலும் பட்டதாரியாக்கியது மலையேறவைப்பதற்கு இல்லை என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

எமது பிள்ளைகளுக்கு என்ன பயிற்சி வழங்குவதாக இருந்தாலும் எங்களது பிரதேசத்திலேயே வழங்குமாறும் பெற்றோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# 14 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

கொழும்பு,மே 16

பாதுக்க பொலிஸ் நிலையத்தின் 14 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் சேவையில் செயற் திறனற்று இருந்தமையைக் கருத்தில் கொண்டு இந்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது என்று பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி கூறினார்.

இடமாற்றம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுள் பாதுக்க விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியும் மூன்று மகளிர் உத்தியோகத்தர்களும் உள்ள டங்குகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# கடத்தப்பட்ட காருடன் சந்தேகநபர் மாட்டினார்

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் காரொன்றுடன் சந்தேகநபரொருவர் தெற்கு அதிவேக வீதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த அநாமதேய தொலைபேசி தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிப்பென்ன நுழைவாயிலுக்கு அருகில் குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரால் கடத்தப்பட்ட கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பயாகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்ளோமா பட்டதாரிகளுக்கு விரைவில் அரச நியமனங்கள்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 16
தேசிய உயர் தொழில்நுட்பக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு வெகு விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உயர்தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிறுவனத்தால் தெரிவுசெய்யப்பட்ட 88 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்ட போது உயர் தொழில்நுட்பவியல் கற்கை நெறிப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும் நடைமுறை அறிவிக்கப்படாத காரணத்தால் அப்போது அவர்களுக்கான நியமனத்தை வழங்க முடியவில்லை.

எனினும் வெகுவிரைவில் அவர்களுக்கான நியமனங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார்.

யாழ்.உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.ஜே.எம்.சகாஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 400 மாணவர்களில் வருமானத்தின் அடிப்படையில் 88 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. (த-14)

# காளை மாட்டைப் பார்க்க கூடும் சுற்றுலா பயணிகள்

யாழ்ப்பாணம்,மே 16
நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்ட ஐரோப்பிய இனக்காளை மாட்டைப் பார்ப்பதற்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து விற்பனை செய்யப்பட்ட பெரிய இனக் காளை மாடு ஒன்றை ஏலத்தில் வாங்கிய தனிநபர் ஒருவர் அதனை இறைச்சிக்காக வெட்டுவது குறித்து துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டதுடன் யாழ். நகர்ப் பகுதியில் குறித்த காளை மாட்டையும் காட்சிப்படுத்தியிருந்தார். இதனைக் கண்டித்து சமூக சமய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில் குறித்த காளை மாட்டை வெட்டத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

சுமார் 2 ஆயிரத்து 500 இறாத்தல் எடைகொண்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான குறித்த காளை மாட்டு விவகாரம் நீதிமன்றம் வரை சென்று அதனையடுத்து நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அது நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு வழங்கப்பட்டது.

தற்போது இந்தக் காளை மாடு ஆலய வளாகத்தில் கட்டப்பட்டுள்ளதால் ஆலயத்துக்கு வருகை தருவோரும் பிறமாவட்டங்கள், வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரும் நாளாந்தம் அதனைப் பார்வையிட்டு வருகின்றனர். (ஓ-14,17)

# மிளகாய் கன்று மேடைகள் நாசம்

யாழ்ப்பாணம்,மே 16
குடாநாட்டில் மிளகாய் செய்கைக்காக அமைக்கப்பட்ட மிளகாய் கன்று மேடைகள் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையினால் நாசமாகியுள்ளன.

அடுத்த போகத்துக்கான மிளகாய் செய்கையில் ஈடுபடுவதற்காக விவசாயிகள் மண் மேடைகள் அமைத்து அதில் மிளகாய் விதைகளை விதைத்திருந்தனர்.

இந்த மிளகாய் விதைகள் முளைத்து பயிராகும் நேரத்தில் பெய்த மழையினால் அவை முற்றாக நாசமாகிவிட்டன என்று மிளகாய் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (த-17)

# வெளிநாட்டு மோகம் காரணமாக பணத்தை இழந்த இளைஞர்கள்

சங்கானை, மே 16
சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த எட்டு இளைஞர்களை ஏமாற்றி ரூபா 12 இலட்சத்தை மோசடி செய்துள்ளனர் கோப்பாயைச் சேர்ந்த தம்பதிகள்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கோப்பாயைச் சேர்ந்த இருவர் தம்பதிகளாக சங்கானைக்கு வந்து, தாங்கள் வெளிநாட்டுக்கு ஆள்களை அனுப்பும் முகவர்களாகச்செயற்படுவதாகவும், முற்பணமாக ரூபா ஒன்றரை இலட்சம் தருமாறும், வெளிநாட்டுக்குச் சென்றபின் மிகுதிப் பணத்தைத் தருமாறும் கூறி சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த எட்டு இளைஞர்களிடம் ரூபா பன்னிரண்டு இலட்சம் பெற்றுள்ளனர்.

இந்த மாதம் அவர்களை அனுப்புவதாகவும், அதற்காகக் கொழும்புக்கு வருமாறும் கூறிவிட்டுத் தம்பதிகள் கொழும்பு திரும்பினர். இளைஞர்கள் எட்டுப்பேரும் கொழும்புக்குச் சென்றனர்.

ஆனால் அவர்களில் நான்கு பேருக்குச் சிங்கப்பூர் செல்வதற்கான சாதாரண சுற்றுலா விசா மற்றும் விமான ரிக்கெட்டைக் கையளித்து விட்டு தம்பதியர் தலைமறைவாகினர்.

வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி இப்படி மோசடி செய்யப்பட்டதையும் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதையும் புரிந்துகொண்ட இளைஞர்கள் குறித்த ரிக்கெட்டுக்களை இரத்துச் செய்து விட்டுச் சங்கானைக்குத்திரும்பிவிட்டனர்.

குறிப்பிட்ட இருவரும் தலைமறைவாகியுள்ளதுடன் செயற்படாத தொலைபேசி இலக்கங்களையும் கொடுத்துள்ளதால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க முடியாமல் இளைஞர்கள் கவலையுடன் உள்ளனர்.

இதுபற்றி மானிப்பாய் பொலிஸில் இவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-9)

# அரச நாடக விழாவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 16
இந்த வருடத்துக்குரிய அரச நடன மற்றும் நாட்டிய நாடக விழாவில் பங்குபற்றவுள்ள நாடகங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கலைக் கழக அரச நாட்டிய மற்றும் நடனக்குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவை ஒன்றிணைந்து நாடக விழாவை நடத்தவுள்ளன.

போட்டியில் சிறுவர் நாட்டிய நாடகம், குறுநாட்டிய நாடகம், வளர்ந்தோருக்கான குறுநாட்டியம், முழுநேர நாட்டியம் ஆகியவைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் மூன்றாவது சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களைக் கொண்ட நாடகங்கள் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் இடம் பெறும்.

நாடக விழாவில் பங்குபற்றும் குழுக்களில் பின்வரும் துறைகளில் மிளிர்பவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித்கனுகல அறிவித்துள்ளார்.

சிறந்த உடையலங்காரம், மேடையமைப்பு, இசை, நடனக் கலைஞர், ஒப்பனைக் கலைஞர், நடன ஆசிரியர், ஒளி அமைப்பு, நாட்டிய நடனம் ஆகியவற்றில் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# 100 வயதில் சாவடைந்தார் கைதடி இல்ல வயோதிப மாது

யாழ்ப்பாணம்,மே 16
கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த பல வருடங்களாகத் தங்கியிருந்த வயோதிபப் பெண் ஒருவர் தனது 100 ஆவது வயதில் சாவடைந்தார்.

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபை பார்வதி என்ற இந்த வயோதிபப் பெண் எவரது பராமரிப்பும் இன்றி இல்லத்தில் இணைந்து வாழ்ந்து வந்தவர்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த இந்த வயோதிபப் பெண்ணின் மூத்த மகனான கே.சின்னத்தம்பியும் கடந்த வருட இறுதியில் இல்லத்தில் சேர்ந்து கொண்டார்.

சின்னத்தம்பியின் மனைவி மற்றும் பிள்ளைகள் வன்னியில் இறுதிக்கட்ட போரில் சிக்கி மரணமாகியிருந்தனர்.

குடும்பத்தையே இழந்த நிலையில் நோய்வாய்ப்பட்ட சின்னத்தம்பி கைதடி வயோதிபர் இல்லத்தில் இணைந்த போது தனது தாயும் அங்கு இருந்தமை கண்டு சந்தோஷமடைந்தார்.

இந்நிலையில் அவரது தாய் தனது 100ஆவது வயதில்கடந்த வாரம் காலமானார். அவரது சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (த-17)



தேசிய விழிப்புலனிழந்தோர் சம்மேளன வடமாகாண கிளையினால் ஆலயங்களை ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 'அறம் புனைந்து அருள் பெறுவோம்' என்ற தொனிப் பொருளினாலான வேலைத் திட்டத்தில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ.அ[illegible] தலைவர் இ.கந்தராசாவிடம் நிதி வழங்கி ஆதரிப்பதைக் காணலாம். (த-5)

# தாவீது அடிகளார் நினைவாக கட்டுரை, பொதுஅறிவுப் போட்டி

வடமராட்சி, மே 16
பன்மொழிப்புலவர் கலாநிதி தாவீது அடிகளாரின் 32 ஆவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி கட்டுரை , பொது அறிவு, கத்தோலிக்க திருமறைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கலாநிதி தனிநாயகம் அடிகளாரும், கலாநிதி தாவீது அடிகளாரும் ஓர் ஒப்புநோக்கு என்ற தலைப்பில் 400 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரைப்போட்டியும், மாணவர்களுக்கிடையே பொது அறிவு மற்றும் கத்தோலிக்க திருமறைப் போட்டியும் இடம்பெறவுள்ளன. கட்டுரைப்போட்டிக்கு வயதெல்லை கிடையாது.

இந்தப் போட்டிகள் பற்றிய விவரங்களையும் வினாத்தாள்களையும் காலநிதி தாவீது அடிகளார் நினைவுக்குழு இணைப்பாளர் சி.அந்தோனிமுத்து, லூர்து மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை என்ற முகவரியிலோ பருத்தித்துறை பங்குத் தந்தை அலுவலகத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கலாநிதி தாவீது அடிகளாரின் 32 ஆவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தும்பளையில் அனுஷ்டிக்கப்படும். புனித லூர்து அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதைத் தொடர்ந்து அன்னாரின் பிறந்த வளவில் அவரின் நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும்.

1981 ஆம் ஆண்டு ஆசியாவிலேயே முதன்மை வாய்ந்த யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தை கேள்வியுற்ற பன்மொழிப் புலவர் கலாநிதி த்ாவீது அடிகளார் அதிர்ச்சியினால் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-8)

# வடமராட்சி கிழக்கில் 800 பேருக்கு இலங்கை வங்கி வாழ்வாதார உதவி

வடமராட்சி, மே 16
வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களில் 800 பேருக்கு பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையின் மருதங்கேணி வாடிக்கையாளர் சேவை நிலையம் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடனுதவிகளை வழங்கியுள்ளது.

இந்தக் கடன்களைப் பெற்றவர்களில் 750 பேர் கடன்களை ஒழுங்கான முறையில் மீளச் செலுத்துவதாகவும் 30 பேர் காலம் தாழ்த்திக் கடன்களை திருப்பிச் செலுத்துவதாகவும் எஞ்சிய 20 பேர் கடன்களை மீளச் செலுத்துவதில் அக்கறையின்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெற்ற கடன்களை ஒழுங்காகச் செலுத்துவோருக்கு மீளவும் கடன்களை வழங்க பருத்தித்துறை இலங்கை வங்கி முன்வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கடந்த வருடம் யாழில்

# வெங்காய விளைச்சலில் பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 16



யாழ். மாவட்டத்தில் கடந்த வருட காலபோக வெங்காயச் செய்கையின் போது 2 ஆயிரத்து 34 ஹெக்ரேயரில் ஆயிரத்து 448 மெற்றிக்தொன் வெங்காயம் அழிவடைந்துள்ளது இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருட, காலபோக வெங்காயப் பயிர்ச் செய்கையில் 30 ஆயிரத்து 510 மெற்றிக் தொன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டபோதும் தேறிய விளைச்சலாக 6 ஆயிரத்து 980 மெற்றிக்தொன் வெங்காயம் உற்பத்தியாகக் கிடைக்கப் பெற்றது. எனினும் 31 ஆயிரத்து 20 மெற்றிக்தொன் வெங்காயம் விளைச்சலாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

அத்துடன் ஆயிரத்து 779 ஹெக்ரேயரில் நடுகை செய்யப்பட்ட நிலையில் ஒரு ஹெக்ரேயரில் 15 மெற்றிக்தொன் உற்பத்தியாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இந்த வருடம் ஒரு ஹெக்ரேயரில் 12 மெற்றிக்தொன் வெங்காயமே உற்பத்தியாகக்கிடைக்கப்பெற்றது.

தற்போது அடுத்த சிறுபோக வெங்காயச் செய்கைக்கு 6 ஆயிரத்து 21 மெற்றிக் தொன் வெங்காயம் நடுகை செய்யத் தேவைப்பட்டது. எனினும் கடந்த வருட காலபோகத்தில் வெங்காயம் பெருமளவு அழிவைச் சந்தித்துள்ளதால் கிட்டத்தட்ட 30 வீதமான நல்லின வெங்காய விதைகளையே உள்ளூரில் பெறக்கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் இந்த வருட சிறுபோக வெங்காய உற்பத்தியில் விவசாயிகள் அதிகளவு நாட்டம் காட்டவில்லை. தற்போது இதுவரைக்கும் 200க்கும் உட்பட்ட ஹெக்ரேயர் நிலப்பரப்பிலேயே விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வருட போகத்தில் பருவம் தவறிய மழையாலும், அதிக வரட்சியாலும் வெங்காயம் அழிவடைந்தது. இதனால் விவசாயிகள் நஷ்டத்தை எதிர்கொண்டதுடன் நல்லின வெங்காய விதைக் குமிழ்களைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனினும் எதிர்பார்க்கக்கூடிய விவசாயிகளை ஊக்குவித்து நல்லின வெங்காயத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (ந-14-17)



யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி கிளைக்குச் சமீபமாக பழைய தபால் கந்தோர் வீதி சந்திப்பில் வடிகால் மூடி உடைந்து காணப்படுவதால் விபத்துக்கள் எந்நேரமும் ஏற்படலாம் என்ற ஆபத்து நிலை நீடிக்கிறது. (ஒ-7)

## 15 ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளில் 1 லட்சத்து 16,000 பேர் சிகிச்சை

குருநகர், மே 16

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மேற்பார்வையில் யாழ். மாவட்டத்தில் இயங்கும் 15 ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடந்த வருடம் சுமார் 1 லட்சத்து 16 ஆயிரத்து 791 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து இந்தத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் 18ஆயிரத்து 56 பேரும், பண்டத்தரிப்பு கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் 15 ஆயிரத்து 42 பேரும், பருத்தித்துறை ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 8 ஆயிரத்து 124 பேரும்,கரவெட்டி கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் 10 ஆயிரத்து 651 பேரும், மருதங்கேணி ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 915 பேரும், காரைநகர் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 4 ஆயிரத்து 311 பேரும், ஊர்காவற்றுறை ஆயுள் வேத மத்திய மருந்தகத்தில் 6ஆயிரத்து 495 பேரும், நெடுந்தீவு ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில். 268 பேரும், ஊரெழு ஆயுள்வேத மருந்தகத்தில் 7 ஆயிரத்து 47 பேரும் நவக்கிரி ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 2 ஆயிரத்து 907 பேரும், அச்சுவேலி ஆயுள்வேத மருந்தகத்தில் 7 ஆயிரத்து 225 பேரும், சாவகச்சேரி ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 7 ஆயிரத்து 177 பேரும்,அராலி ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் 10 ஆயிரத்து 834 பேரும், தெல்லிப்பழை கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையில் 10ஆயிரத்து 39 பேரும் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளார்கள் என அந்தப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-51)



வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சங்கத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட ரி.கே. ஆனந்தராஜா உட்பட புதிய நிர்வாக சபை உறுப்பினர்களைக் காணலாம். (ஒ-51)

## 'கண்ணகி'யும் தப்பவில்லை

யாழ்ப்பாணம், மே 16

சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையமும் ''மகாசென்'' புயலினால் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 153 குடும்பங்களை உள்ளடக்கியுள்ள கண்ணகி நலன்புரி நிலையத்தினுள்ள வீடுகளின் தகரங்கள் புயலினால் தூக்கி எறியப்பட்டன. அத்துடன் மழை நீரும் உட்புகுந்தது.

இதனால் அங்கிருந்தவர்கள் தற்காலிகமாக வேறு இடங்களில் குடிபெயர்ந்து தற்போது மீண்டும் முகாமுக்குத் திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

# அச்சுவேலி நகர்ப் பகுதியில் பஸ் நிலையமும் வீதிகளும் இருளில்

அச்சுவேலி, மே 16

அச்சுவேலி நகரப்பகுதியில் தெரு விளக்குகள் இன்மையாலும், பஸ் நிலையத்துக்கு மின்சார இணைப்பு மேற் கொள்ளப்படாமையாலும் இப்பகுதிகள் இரவில் இருளில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றன என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலி.கிழக்கு பிரதேச சபையினால் 50 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்த பஸ் நிலையம் சில மாதங்களுக்கு முன்பு திறந்து வைக்கப்பட்டபோது,பஸ் நிலையத்துக்கு மின் இணைப்பு வேலையும் செய்யப்பட்டது.

எனினும் மின் இணைப்பு வழங்கப்படாமையால் இருளில் மூழ்கிய நிலையில் பஸ் நிலையம் காணப்படுகின்றது. இதனால் இரவில் பஸ் நிலையத்தில் தங்கி நின்று பயணம் செய்வதற்கு பயணிகள் தயங்குகின்றனர்.

வெளிச்சமின்றி பஸ் நிலையம் இருளில் காணப்படுவதால் இரவு வேளையில் சமூக விரோதச் செயல்களுக்கு உரிய இடமாக அது மாறி வருவதாக கூறப்படுகின்றது.

அச்சுவேலி பஸ் நிலையத்தோடு சேர்ந்த பகுதியில் அமைந்துள்ள ஐந்து வீதிகளுக்கும் வீதி விளக்குகள் இல்லாமல் இருப்பதால் அவையும் பொது மக்களின் இயல்பு நிலை நடமாட்டத்துக்கு இடையூறாக இருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாகவும் அதனோடு சேர்ந்த வீதியிலும் நீண்ட தூரத்துக்கு வீதி விளக்குகள் இல்லை.

அச்சுவேலி பஸ் நிலைத்திலும் வீதி விளக்கு இல்லாமல் இருப்பதோடு பஸ் நிலையத்தில் இருந்து பிரிந்து செல்லும் ஐந்து சந்திகளிலும் நீண்ட தூர இடைவெளியில் வீதி விளக்குகள் எதுவும் ஒளிரவில்லை . அச்சுவேலி பிரதேச சபை உப-அலுவலக முன்பக்க வீதியிலும் வீதி விளக்குகள் இல்லை. இதனால் இந்தப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-11)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
The Jaffna Education Centre
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)
Spoken English with Grammar "சிங்களம்" Shorthand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் 17.05.2013
ESOL, IELTS போன்ற வகுப்புகளுக்கு ஆயத்தம் செய்து விடப்படும்.
ஆசிரியை: இ.லோகநாயகி
T.P.No:07[illegible]779340
பாடமுடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும். (38550) (10,6)

புத்தம் புதிய வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுண்டுக்குளி (விதானையார் வீதி) பகுதியில், 1 பரப்பும் 6.33 குழி உடைய காணியில் புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
சுற்றிவர மதில், 3 அறை, ஹோல், கிச்சின், பாத்றூம் என வீடு முழுவதும் [illegible] வீடு சகல வசதி[illegible] விற்பனைக்கு
தொ.பே: 0773273125

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 15*11*1951

மறைவு 16*04*2013

கடந்த 16.04.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வம்

### அமரர் காசிவிஸ்வநாதன் சாந்தலட்சுமி

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும், அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டும், சகல வழிகளிலும் ஒத்தாசை நல்கி, எம் அன்னையின் பிரிவுத் துயரில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, தபால் மூலம் தூர தேசத்திலிருந்து எம்மை தேற்றியவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை 1ஆம் விடுதியில் சிறப்புற சிகிச்சை வழங்கிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், எல்லா வழிகளிலும் உதவி நல்கிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று மண்கும்பான், சாட்டி புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

150, நாவலர் வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(C9182)(10,6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைதிகளிடையே இளைஞர் கழகம் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,மே 16
கைதிகளிடையே இளைஞர் கழகங்கள் அமைக்கும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இளைஞர் கழகம் அமைக்கும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

மட்டக்களப்பு சிறைச்சாலை நலன்புரி அதிகாரி கே.சிறீனிவாசன் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் கே.தவராஜா மற்றும் சிறைச்சாலை அத்தியட்சகர் கித்சி ஸ்ரீ பண்டார உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மட்டக்களப்பு சிறையிலுள்ள கைதிகளில் 29 வயதுக்குட்பட்டோர் இந்த இளைஞர் கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.**

மட்டக்களப்பு சிறையிலுள்ள கைதிகளில் 29 வயதுக்குட்பட்டோர் இந்த இளைஞர் கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

அவர்களிலிருந்து இளைஞர் கழகத்துக்கான தலைவர், செயலர் மற்றும் பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



இலங்கை இராணுவத்துக்கு பாகிஸ்தான் அரசால் ஆறு குதிரைகள் கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இந்தக் குதிரைகள் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளன.

### இறக்குமதி பால்மா சர்ச்சை:

# இரசாயன பதார்த்தங்களை பரீட்சிக்குமாறு ஆலோசனை

கொழும்பு,மே 16
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மாவில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்துள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, அணுசக்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மா, பால் உணவுகளிலும் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.



இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்கள் மற்றும் மீன் வகைகளின் மாதிரிகளை அணுசக்தி அதிகார சபை பரீட்சித்து சான்றிதழ் வழங்கி வருகிறது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளை நவீன உபகரணங்களின் உதவியுடன் பரீட்சித்து அவற்றில் இரசாயன கதிர்கள் இல்லை என்று உறுதிப்படுத்தினால் மாத்திரம் அவற்றை சந்தைக்கு விநியோகிக்க நிறுவனங்களுக்கு அனுமதிப்பதாக அணுசக்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ச)

# மத்தல விமான நிலையத்தால் எந்தவித பயனும் கிடைக்காது

## செயற்பாடுகள் குறித்து ஆராய குழு


கொழும்பு,மே 16
மத்தல விமான நிலையத்தால் இலங்கைக்கு எவ்வித பயனும் இல்லை. அது வீண் பண விரயம்.

இந்த விமான நிலையம் உரிய இடத்தில் அமைக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

விமான ஓடு பாதையில் பறவைகள் தொல்லை காணப்படுவதால் விபத்து அபாயம் உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, புதிதாக திறக்கப்பட்ட மத்தல விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் போது முன்னுரிமை கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தவென இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ண தெரிவித்தார்.



**விமான ஓடு பாதையில் பறவைகள் தொல்லை காணப்படுவதால் விபத்து அபாயம் உள்ளது.**

இந்த நிலையில் எயார் அரேபியா விமான நிறுவனம் அண்மையில் மத்தல விமான நிலையத்தினூடான தனது சேவையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொள்ளையர் இருவர் கைது

கொழும்பு,மே 16
மீகொடை பொருளாதார மத்திய நிலையத்துக்குள் நுழைந்து துப்பாக்கியைக் காட்டி அங்கிருந்த இரண்டு வர்த்தக நிலையங்களில் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையிட்டு தப்பிச்சென்ற இரண்டு சந்தேகநபர்கள் மிரிஹான குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்த துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.


கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் கடற்படையிலிருந்து விலகியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் அண்மையில் மீகொடை பொருளாதார மத்திய நிலையத்துக்குள் நுழைந்து பணத்தைக் கொள்ளையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய பணிகள் இடைநிறுத்தப்படலாம்

## அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு



நிலையகொழும்பு,மே 16
இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திரிகரிப்பு நிலையத்தின் பணிகள் இன்று வியாழக்கிழமையுடன் இடைநிறுத்தப்படலாம் என்று அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அரசு விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்னும் மசகு எண்ணெய் கிடைக்கப்பெறவில்லை என்று அவர் கூறினார்.

இந்த நிலையில் இன்று வியாழக்கிழமை வரை மசகு எண்ணெய் கிடைக்காத பட்சத்தில், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திரிப்பு நிலையத்தின் பணிகள் முற்றாக இடைநிறுத்தப்படலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அதிகாரிகள் உரிய நேரத்தில் மசகு எண்ணெயை பெற்றுக் கொள்ள தவறியமையே இதற்கான காரணம் என்று தொழிற்சங்கள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே இடம்பெறுகின்றன என்று இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. (ச)

# கெக்கிராவ பாடசாலையில் மனித ஓநாயின் பாலியல் சேஷ்டைக்கு இலக்கான மாணவிகள்

கெக்கிராவ,மே 16
கெக்கிராவ கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் எட்டு மற்றும் ஒன்பது வயதுகள் கொண்ட பதினொரு சிறுமிகள், அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரால் பாலியல் சேஷ்டைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக பரபரப்பான தகவல் வெளியாகியுள்ளது.

வளர்ந்த இரு பெண் பிள்ளைகளின் தந்தையான இந்த ஆசிரியரின் மனைவியும் கூட ஓர் ஆசிரியையாவார். இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

ஓராண்டு காலத்துக்கு மேலாகக் குறிப்பிட்ட மாணவிகள் 10 பேர் மீது குறித்த ஆசிரியர் அடிக்கடி பாலியல் சேஷ்டைகள் மேற்கொண்டு வந்த போதிலும், அந்த மாணவிகள் அது குறித்து தமது பெற்றோரிடமோ, ஆசிரியர்களிடமோ முறையிடவில்லை.

இந்த நிலையில் புதிதாக வகுப்பில் சேர்ந்து கொண்ட மாணவியொருவர் மீது ஆசிரியர் தமது வழமையான பாலியல் சேஷ்டைகளை மேற்கொள்ள முயன்றிருக்கிறார். குறிப்பிட்ட அந்த மாணவி அது குறித்துத் தமது பெற்றோர்களுக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்தே ஆசிரியரின் இந்த லீலைகள் பற்றிய தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

குறித்த மாணவியின் பெற்றோர் சம்பவம் குறித்து பாடசாலையின் பெண் அதிபரிடம் முறையிட்ட போதும் பெற்றோரோ அல்லது பாடசாலை அதிபரோ சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு எதனையும் மேற்கொள்ளவில்லை.

அதே சமயம் குறிப்பிட்ட ஆசிரியரின் பாலியல் சேஷ்டைகள் குறித்து வேறு வழிகளில் பொலிஸாருக்குத் தெரியவந்ததையடுத்து, ஹரல்கியாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தேகநபரான ஆசிரியரை பாடசாலை அதிபர் முன்னிலையில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார். அதன்போது குறிப்பிட்ட மாணவியின் பெற்றோரால் சம்பவம் குறித்து தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், தாம் அது குறித்து கெக்கிராவ பிரிவு கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அறிவித்திருந்ததாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து சம்பந்தப்பட்ட வகுப்பில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகளை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியபோது, குறிப்பிட்ட ஆசிரியர் அதற்கு முன்னரும் பத்துப் பெண் பிள்ளைகள் மீது பாலியல் சேஷ்டைகள் புரிந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

அதனையடுத்து சந்தேக நபரான அந்த ஆசிரியரைக் கைது செய்த பொலிஸார் கெக்கிராவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவிகள் சகலரையும் வைத்திய பரிசோதனைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ஒ-ஞ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைவெளி நிரப்புதல்

செல்வி.ரஜீலாதேவி
செல்லமுருநாதன்
அதிபர், யாழ்.தாதிய கல்லூரி.

புத்தாயிரம் ஆண்டிற்கான இலக்குகளின் நோக்கின் பின்னணியானது உலகின் வறியநாடுகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதன் மூலம் அபிவிருத்திக்கு தூண்டுதல் ஆகும்



தாதியத் தொழிலை இழிவாகக் கருதிவந்த வேளை, அந்தக் கருத்தை மாற்றி தாதியத் தொழிலை ஓர் உன்னத தொழில் நிலைக்கு உயர்த்திய பெருமை புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரையே சாரும். இந்த தாதிய சேவையானது, மனித சமூக நன்மைகளை மேம்படுத்துவதற்காக இன மத பேதங்களைக் கடந்து மேற்கொள்வதாகும்.

இந்தச் சேவைகள் விஞ்ஞானபூர்வ, தொழில்நுட்ப அறிவு ஆற்றல்களை உள்ளடக்கியிருப்பதன் மூலம் மனித மேம்பாட்டுக்கு தாதியம் உதவுகின்றது. நோயுற்றவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மருத்துவ, துணை மருத்துவ குழுக்களின் பங்களிப்புடன் வழங்கப்படுகின்றன. மனிதனின் உடல், உள, சமூக, ஆன்மிகத் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடியவைகளாக உத்தியோகபூர்வ தாதிய சேவைகள் அமைந்துள்ளன. இதனால் தான் இத்தகைய உயரிய சேவையை மேற்கொள்ளும் தாதியரை பாராட்டி மகிழ்விக்குமுகமாக தாதியர்தின விழா கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் தாதியர் தினமானது ஒரு கருப்பொருளை முன்வைத்து அதனை அடையும் முகமாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடம் 2013 இற்கான கருப்பொருள் "இடைவெளி நிரப்புதல்: புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகள்" (Closing The Gap: Millenium Development Goals) என்பதாகும். இதில் எட்டு சர்வதேச வளர்ச்சி இலக்குகள் அடங்கியுள்ளன. இந்த இலக்குகள் ஐக்கியநாடுகளின் உறுப்பு நாடுகளும், 23 அனைத்துலக அமைப்புகளும் ஒன்றிணைந்து 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு நிறைவேற்றுவதற்காக உடன்பட்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள வளர்ச்சி இலக்குகள் ஆகும். இவை மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும்வண்ணம் அமைகின்றன. அந்த இலக்குகளாவன:-

தீவிர வறுமையை ஒழித்தல், அனைவருக்கும் அடிப்படைக் கல்வி, ஆண், பெண் சம உரிமை, குழந்தை, தாய் இறப்பு வீதத்தைக் குறைத்தல், தாய் நலத்தை மேம்படுத்தல், எச்.ஐ.வி எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களை எதிர்த்தல், சூழல் பேண் தகு நிலை யை உறுதி செய்தல், உலக வளர்ச்சிக்கான கூட்டுக் கட்டமைப்பை விருத்தி செய்தல் என்பனவாகும்.

விஷேடமாகத் தீர்மானிக்கப்பட்ட இலக்குகளையும் அவற்றை அடைவதற்கான திகதிகளையும் கொண்டுள்ளது. புத்தாயிரம் ஆண்டிற்கான இலக்குகளின் நோக்கின் பின்னணியானது உலகின் வறியநாடுகளின் சமூக, பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதன் மூலம் அபிவிருத்திக்கு தூண்டுதல் ஆகும். இந்த இலக்குகளுள் நான்காம், ஐந்தாம், ஆறாம் இலக்குகள் சுகாதாரப் பகுதியைச் சார்ந்தவையாகும். நான்காம், ஐந்தாம் இலக்குகளானவை குழந்தை , தாய் இறப்பு வீதத்தைக் குறைத்தல். இதற்கான குறித்த தீர்வானது 1990-2015 காலப்பகுதிக்குள் தாய் இறப்பு வீதத்தை 3/4 இனால் குறைத்தல்; திறமை வாய்ந்த சுகாதார ஆளணியினால் கவனிப்பு வழங்கப்பட்ட பிறப்புக்களின் விகிதம்; 2015 அளவில் இனப்பெருக்க சுகாதாரத்துக்கு ஒரு பொதுவான வழி மூலம் அதனை எட்டுதல் என்னும் தீர்மானங்களை விரிவாக முன்வைத்துள்ளது. ஆறாவது இலக்கானது எச்.ஐ.வி, எயிட்ஸ் , மலேரியா மற்றும் ஏனைய நோய்களை எதிர்த்தல். இதற்கான தீர்மானங்களாக 15-24 வயதினரிடையே எச்.ஐ.வி தொற்று சாதாரண வீதம் , அது பற்றிய சரியான அறிவு, ஆபத்து விளைவிக்கும் எனக் கருதுமிடத்து பாதுகாப்பான பாலுறவு, எயிட்ஸ் நோய்ச்சிகிச்சை தேவைப்படுவோர்க்கு பொதுவான சிகிச்சை பெறும் வழி, 2015 ஆம் ஆண்டளவில் இவற்றை நிறுத்துதலும் எயிட்ஸ் ,மலேரியா பரவலை மாற்ற ஆரம்பித்தலும் மற்ற பிரதான நோய்களை நிறுத்துதலும் ஆகிய தீர்மானங்களையும் அவற்றிற்கான விரிவான செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல் என விரிவாக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு முறைகளில் ஏற்கனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் சுகாதார அமைச்சினூடாக 2000 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு கருத்துரைகள் செயலமர்வுகள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

புத்தாயிரம் ஆண்டு இலக்குகளை அடைய தாதியர் அனைவரும் தனித்தனியாகவும் , குழுக்களாகவும் இணைந்துசெயற்பட வேண்டும்.

இன்று தாதியர் தினவிழா கொண்டாடுவதன் முக்கிய நோக்கமும் தாதியரது அர்ப்பணிப்புடனான சேவையைப் போற்றி உயரிய தரமான சேவைக்காக தமது அறிவு, ஆற்றலைப் பல்வேறு ஆராய்ச்சிகளினூடாகவும், வாசிப்பு பழக்கத்தினூடாகவும் பெருக்குவதற்கு ஊக்குவிப்பு வழங்கிக் கௌரவிப்பதற்காகும். எனவே அனைவரும் கைகோர்த்து தமது பணியைத் தொடர வேண்டும். ஒவ்வொரு தாதியரும் தத்தமது உன்னத சேவை நோக்கை மனதில் கொண்டு அந்த இலக்கையடைய அனைவருடனும் கைகோர்த்து தமத பணியைத் தொடர வேண்டும். ஒவ்வொரு தாதியரும் உன்னத சேவை நோக்கை மனதில் கொண்டு உதவி தேவைப்படும் நோயுற்ற, நோயற்ற சமூகத்தினருக்கு தமது சேவையை செவ்வனே நல்கி தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். ★

சர்வதேச தாதியர் தினத்தையொட்டி யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் தாதியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திருந்தால் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றிருப்பேன்

## குடத்தனை மாணவி சுகன்யா ஆதங்கம்

எமது பாடசாலையில் சகல பாடங்களுக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படாமையால்தான் அனைத்துப் பாடங்களிலும் சிறப்புச் சித்தியடைய முடியாமல் போய்விட்டது என்று குடத்தனை அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஜேசுதாஸ் சுகன்யா ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவி 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சையில் 7ஏ.பி.சி. பெறுபேற்றைப் பெற்று வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் இவ்வளவு காலத்திலும் அதிகூடிய பரீட்சைப் பெறுபேற்றைப் பெற்ற மாணவி என்ற வகையில் 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகன்யா மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எனது அப்பா வியாபாரத்தை தொழிலாகக் கொண்டவர். எனது வீட்டுக்கு மின்சாரம் இல்லை. அதனால் மண்ணெண்ணெய் விளக்கிலேயே எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

எனது ஆரம்பப் பள்ளிப்பருவத்தில் முறையான ஆங்கில ஆசிரியர் இருக்கவில்லை. ஆகையால் என்னால் ஆங்கிலப்பாடத்தை சரியாகக் கற்க முடியவில்லை. அதன் பின்னர் இடைநிலைப் பிரிவிலேயே எமது பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் கற்பித்தார். எனக்கு ஆரம்ப அடிப்படை அறிவு இல்லாதபோதும் அந்த ஆசிரியரின் உதவியுடன் ஆங்கிலப் பாடத்துக்கு 'சி' பெறுபேற்றினைப் பெற்றேன்.

இதே போல் தரம் 10 இல் [illegible] பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். இந்தப் பாடத் தெரிவுக்கும் எமது பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லை. இருந்த போதும் சுகாதாரமும் உடற்கல்வியும் எனும் பாடம் இலகுவானது என நினைத்துப் படித்தேன். ஆசிரியர் இந்தப் பாடத்துக்கு இல்லாததால் 'பி' பெறுபேற்றை மட்டுமே என்னால் பெற முடிந்தது.

ஏனைய 7 பாடங்களிலும் 'ஏ' திறமைச்சித்தியை பெற்றபோதும் ஏனைய இரு பாடங்களிலும் திறமைச்சித்தி பெறமுடியாமல் போனமை எனக்கு மிக வேதனையாக இருக்கின்றது.

பின்தங்கிய பாடசாலைகளை அதிகாரிகள் கருத்தில் கொள்ளாமலேயே செயற்படுகின்றனர். நகரப்புறத்திலிருக்கும் பாடசாலைக்கு ஆசிரியர்களின் தேவைகளை விட கிராமப்புறப் பாடசாலைகளுக்கே ஆசிரியர்கள் தேவை. ஏனெனில் நகர்ப்புறப் பாடசாலை மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று தமது கல்வியைப் பூர்த்தி செய்து கொள்வர். ஆனால் எமக்கு அந்த வசதி இல்லை. நாம் தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லவேண்டுமானால் ஐந்து, ஆறு கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் சாதாரணமாக திறமை இருப்பவர்களும் சித்தியடையாமல் இருக்கின்றனர்.



வடமராட்சி கிழக்கில் குடத்தனை அ.த.க.பாடசாலையில் இதுகாலவரையில் அதிகூடிய பெறுபேற்றைப் பெற்ற மாணவி சுகன்யா தான்

எனது இலட்சியம் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பது தான். அதற்காக என்னைத் தயார்ப்படுத்தி வருகின்றேன். ஆண்டவரின் அருள் இருந்தால் எனது கனவு பூர்த்தியாகும். எனது சமூகத்துக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது நோக்கம். இறுதியாக பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் ஆசிரியர்கள் சேவை மனப்பாங்குடன் கடமையாற்ற வேண்டும் என்பதும் எனது அன்பான வேண்டுதல்கள் ஆகும் என்றார். (ஒ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா சித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

கிளை முகவர்கள்: 'சதா ஜொன்ஸ்' - மாவடிச்சந்தி, அல்வாய்: 021226 3206. 'நெல்லியடி கொமேர்ஸ் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி: 021490 1519. ஜோதி புக் சென்டர் மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோபி லைலக்சிற்றி' முல்லைத்தீவு நகர்: 0779598917. 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

## இன்னும் மாறவில்லை

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சியில் இருந்த போது சிங்கப்பூர் அதிபர் இலங்கைக்கு வந்தார். அப்போது அவர் கொழும்பின் வீதிவழியாக ஜே.ஆருடன் காரில் சென்றபோது, வீதியோரங்களிலேயே அனேகர் சிறுநீர் கழிப்பதைக் கண்டார். உடனே சிங்கப்பூர் அதிபர்,

"என்ன உங்கள் நாடு இப்படி குப்பையா? எங்கள் நாட்டில் எல்லோரும் சுத்தத்தைப் பேணுபவர்கள். தவறிப்போய் யாரும் சிறு குப்பையை வீதியில் போட்டால்கூட அடுத்தகணமே பொலிஸ் அவர்களை மடக்கிப் பிடித்துவிடும். அந்தளவுக்கு எங்கள் நாடு தூய்மையானது" என்று கூறினார். ஜே.ஆருக்கு அவமானமாகப் போய்விட்டது. எதுவும் பேசாமல் இருந்துவிட்டார்.

அடுத்து சில மாதங்களில் ஜே.ஆர் சிங்கப்பூருக்குப் போனார். விமான நிலையத்தில் இருந்து தனது காரில் ஜே.ஆரை ஏற்றிப்போனார் சிங்கப்பூர் அதிபர். அப்போது வீதியில் ஒருவன் மதிலோரமாக சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தான். இந்தக் காட்சியைக் கண்ட ஜே.ஆர் புளுகத்தில் துள்ளினார். சிங்கப்பூர் அதிபரைப் பார்த்து,

"இலங்கைக்கு நீங்கள் வந்தபோது உங்கள் நாட்டில் எவரும் வீதியில் குப்பைகூட போடுவதில்லை, அந்தளவுக்கு தூய்மையான நாடு என்று பெருமையடித்தீர்களே. இதோ ஒருவன் வீதியில் சிறுநீர் கழிக்கிறான். இதுவா உங்கள் தூய்மை?" என்று கேலியாக ஜே.ஆர் கேட்டார். சிங்கப்பூர் அதிபர் எதுவும் பேசவில்லை. காரை நிறுத்திவிட்டு சுவர் ஓரமாக சிறுநீர் கழித்தவனை கைதட்டி அழைத்தார். அவனும் கார் அருகே வந்தான். ஏற இறங்க அவனைப் பார்த்துவிட்டு "நீ எந்த நாட்டவன்?" என்று கேட்டார். அவன் சற்றும் தாமதியாமல் "இலங்கை" என்று ஒரேபோடாகப் போட்டான். ஜே.ஆரின் முகத்தில் ஈயாடவில்லை.

இன்னமும் இந்த நிலைமை இங்கு மாறவில்லை. "தூய்மை என்றால் கிலோ என்ன விலை?" என்று கேட்கும் அளவுக்கே இலங்கையின் சுற்றுச்சூழல் பராமரிப்பு இருக்கிறது. அதிலும் சூழலை பேண வேண்டிய பொலிஸாரே அதனை சீரழித்தால் நாட்டின் சாதாரண குடிமக்கள் எப்படி நல்லவிதமாக நடந்துகொள்ள முடியும்?

சிவில் நிர்வாகத்தில் சட்டம், நீதி, நியாயம் என்பவற்றை பேணுவதற்காக உருவாக்கப்பட்டதே பொலிஸ்துறை. ஆனால் சட்டத்தின் காவலர்களே அதனை மீறுவதோடு, தவறான முன்னுதாரணங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்து விடுகிறார்கள்.

அண்மையில் மல்லாகத்தில் புதுவருடக் கொண்டாட்டம் ஒன்றுக்காக இரவு முழுதும் "தண்ணியில்" மிதந்த பொலிஸார், வெற்று மதுப் போத்தல்களையும், உணவின் எச்சங்களையும் பாடசாலை ஒன்றின் வகுப்பறைகளுக்குள் வீசிவிட்டு தம்பாட்டுக்குப் போய்விட்டார்கள். அது புனிதமான கல்விக்கூடம் என்பதையோ, நாட்டின் நாளைய தலைவர்களான மாணவர்களின் வகுப்பறை என்பதையோ அவர்கள் மதித்து நடந்ததாகத் தெரியவில்லை. போதையும், கொண்டாட்டமும் அவர்களுக்கு பாடசாலை ஒரு குப்பைத்தொட்டி போல தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் இப்படியான கைங்கரியத்தில் அவர்கள் இறங்கி இருக்க வேண்டும். புத்தரின் சிலைக்கு முத்தம் கொடுத்ததற்காகவே வெளிநாட்டுப் பெண்மணியை தண்டித்த இந்த நாட்டில் கல்விக்கூடம் ஒன்றை மதுபானப் போத்தல்களின் உறைவிடமாக்கிய பொலிஸாருக்கு என்ன தண்டனை?

# உள்ளூர் நீர்வளம் குறித்த ஆய்வுகள் தேவை

■ லக்ஸ்மன்

நெடுந்தீவுக்கான சாரப்பிட்டி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நெடுந்தீவு மக்களின் குடிதண்ணீர் தேவையைக் கடற்கரையோரங்களை அண்டி இருந்த நன்னீர்க் கிணறுகளே பூர்த்தி செய்து வந்தன. சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்தக் கிணறுகள் மூலம் தமக்குத் தேவையான குடி தண்ணீரை அப்போது பெற்று வந்தனர்.

தீவின் உள் பகுதிகளில் உவர் நீர் காணப்பட்டாலும் கடற்கரையோரத்தில் நல்ல தண்ணீரே காணப்பட்டது. தாழைத்துறை எதியடி, மணல் துறை, கோட்டைக்காடு, சாரப்பிட்டி வெள்ளக் கடற்கரைப் பகுதிகளில் காணப்பட்ட கிணறுகளின் நீர் குடிதண்ணீராகப் பயன்படுத்தக் கூடியதாகவே இருந்துள்ளது.

சாரப்பிட்டியில் சுமார் இருபத்தியிரண்டு கிணறுகள், நன்னீர் கிணறுகள் அதை விட கோட்டைக்காடு, வெல்ல, தாழைத்துறை, எதியடி மணல் துறைப் பகுதிகளில் சுமார் பதின்நான்கு கிணறுகளின் நீர் நன்னீராகவே இருந்துள்ளது.

இது தவிர தோட்ட நிலங்களிலும் நல்ல தண்ணீர் கிணறுகள் இருந்துள்ளன. நெடுந்தீவில் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் என தனித்தனியாக கிணறுகள் இருந்துள்ளன. அப்போதைய கிராமசபை ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மக்களின் தேவை கருதி இவற்றை அமைத்துக் கொடுத்திருந்தது. சாரப்பிட்டி கிணறுகள் மிகவும் நீண்ட கால பழைமைவாய்ந்தவை. அவை அநேகமாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தை ஒட்டியவைகளாக இருந்திருக்கலாம். அக்காலத்தில் குதிரைகள் நீர் அருந்தவென வெட்டப்பட்ட தண்ணீர் தொட்டிகள் இன்றும் காணப்படுகின்றன. இவை பூதம் பொழிந்த கிணறுகள் என்றும் ஒரு கதையுண்டு.

மேற்கு சாரப்பிட்டி, கோட்டைக்காடு பகுதிகளில் உள்ள கிணறுகளின் தண்ணீர் உவர்ப்பின்றிக் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்களுடன் மத்தி, கிழக்கு பகுதி மக்களும் தமது தண்ணீர் தேவைக்காக அங்கு செல்கின்றனர். நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளதால் மக்கள் பெருமளவில் அந்தப் பகுதிகளுக்குச் செல்வதில்லை.

மத்தி, கிழக்குப் பகுதி மக்களுக்கு அவர்களது நன்னீர்த் தேவைக்கு மணல்துறைக் கிணறுகளே பெரிய அளவில் கைகொடுத்து வந்துள்ளது. மக்கள் அதிகாலை 4 மணிக்கே மணல் துறைக்குச் சென்று தமக்குத் தேவையான குடிதண்ணீரை எடுத்துக் கொள்வதுடன் குடும்பம் குடும்பமாகச் சென்று குளிப்பதும் அன்றாட நிகழ்வாகும்.

வண்டில்களில் பெரிய தாங்கிகள், பீப்பாக்கள் மூலமும் குடிதண்ணீர் எடுத்துவரப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதும் உண்டு. அதற்காக கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை.

நெடுந்தீவின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்த இந்தக் கிணறுகள் இன்று உவர் நீராக மாறியுள்ளதுடன் சில வேளைகளில் நீரின்றி கிணறுகள் வறண்டும் காணப்படுகின்றன. மக்கள் குடிக்கப் பயன்படுத்தக் கூடியதாக இருந்த இந்தக் கிணறுகளின் நீர் 1964 ஆம் ஆண்டுக்குப் பின்னரே படிப்படியாக உவர் நீராக மாற்றமடைந்ததுடன் வறட்சிக்கும் இலக்காகியுள்ளன. கடந்த காலங்களில் இடம்பெற்ற புயல், கடல் கொந்தளிப்புகளால் கடல்நீர் உட்புகுந்து கொண்டதில் இந்த மாற்றம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. 1814 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக தீவின் பெரும் பகுதியின் நீர்வளம் உவர் நீராக மாற்றமடைந்த போதும் 1964 ஆம் ஆண்டு வரை கடற்கரையோரப் பகுதி கிணறுகளில்நன்னீரே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தீவுப் பகுதியில் அல்லைப்பிட்டி, அனலைதீவு பகுதிகளைப் போன்று ஒரு நன்னீர் பிரதேசமாக நெடுந்தீவு இருந்துள்ளது. அந்த நிலை தற்போது மாற்றமடைந்து மக்கள் இரணைமடு தண்ணீரை எதிர்பார்க்க வேண்டியவர்களாகிவிட்டுள்ளனர்.

சாரப்பிட்டி, கோட்டைக்காடு பகுதிகளில் உள்ள நன்னீர்க் கிணறுகள் படிப்படியாக நன்னீர்த் தன்மையை இழந்து வருகின்றன. கடந்த காலங்களைவிட அண்மைக்காலமாக கூடிய அளவு அதிகரித்த பாவனையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. தண்ணீரில் உவர்த்தன்மை தென்படுகின்றது. மணல்துறை கடற்கரைப் பகுதியில் உள்ள ஒன்பதுக்கும் அதிகமான நன்னீர் கிணறுகள் கடந்த 2002 ஆம் ஆண்டவில் மக்களது பயன்பாட்டில் இருந்து அற்றுப்போயுள்ளன.

தினமும் காலை, மாலை வேளைகளில் குடங்களுடன் அங்கு சென்று இதமான கடற்காற்றையும் அனுபவித்து கடலிலும் நீராடி புதிய உற்சாகத்துடன் நீர்குடங்களுடன் திரும்பும் மக்கள் கூட்டத்தை முன்புபோல் இப்போது அங்கே காணமுடியாது. மக்கள் கிணறுகளைப் பயன்படுத்திய காலத்தில் தண்ணீருக்காக வரும் கால்நடைகள் மக்கள் நடமாடாத மணல்துறைக்கு வந்து நீர்க்கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பும் காட்சிகளே இன்று மணல் துறைக் காட்சிகளாகிவிட்டன. கண்ணுக்குக் குளிர்மையூட்டும் காட்சிகள் எல்லாமே தொலைந்துவிட மணல் கிணறுகள் வெறுமையாகிவிட்டன. நெடுந்தீவில் 2002 ஆம் ஆண்டு படை முகாம் ஏற்படுத்தப்பட்டதை அடுத்து அந்தப் பகுதிக்கு மக்கள் செல்வது அருகிவந்துள்ளது. கிணறுகள் பாவிக்கப்படாத நிலையில் சேதமடைந்துள்ளதுடன் கிணறுகளின் உட்புறம் சிறு மரங்களும் முளைக்கத் தொடங்கி விட்டன. அவ்வப்போது செல்லும் சிறுவர்கள் கிணறுகளில் இறங்கிக் குளித்து மகிழ்வதாலும் கற்கள், கஞ்சல்களைப்போட்டு மகிழ்வதாலும் அவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் மக்கள் தமது தேவைக்காக அவற்றைப் பயன்படுத்தும் நிலைகளும் அற்றுப்போய்விட்டன. இப்போது அங்குள்ள இரண்டொரு கிணறுகளை மட்டுமே சில பொதுமக்கள் பயன்படுத்துவதைக் காண முடிகின்றது.

கடந்த காலங்களில் கிராம சபை ஆண்டுதோறும் இந்தக் குடிதண்ணீர் கிணறுகளைச் சுத்தம் செய்வதுடன் கால்நடைகளுக்கான கேணிகளையும் துப்புரவு செய்து வந்துள்ளது. தவிர அப்போதைய சனசமூக நிலைய உறுப்பினர்கள் தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து கவனம் எடுத்து வேண்டிய வேளைகளில் சிரமதானப் பணிகளூடாக கிணறு கேணிகளைத் துப்புரவு செய்து மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையில் அக்கறை காண்பித்ததுண்டு. இன்று பொதுக்கிணறுகளாக இருந்த சில நன்னீர்க் கிணறுகளைக் காணவே முடியாதுள்ளது. எதியடி, தாழைத்துறை போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் கிணறுகள் இருந்துள்ளமை குறித்த வரலாற்றுத் தகவல்கள் கூட பிரதேச சபையிடம் தற்போது இருக்குமோ என்பது சந்தேகமே.

மணல் கிணறுகளை நீண்ட காலமாக துப்புரவு செய்வதற்கான அறிகுறியையே காணமுடியாதுள்ளது. இந்தக் கிணறுகள் அனைத்தும் நல்ல முறையில் மக்கள் பாவனைக்கு மீண்டும் வரவேண்டும். நல்ல தண்ணீரைப் பெறக்கூடிய சூழல் உள்ளூரிலேயே ஏற்படுத்தப்பட வேண்டும். நெடுந்தீவுக்கு வரும் அதிகாரிகள் உள்ளூரில் கிடைக்கக் கூடிய தண்ணீரைக் குடிப்பதற்குப் பதிலாக போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்துவதால் அங்குள்ள மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை குறித்த அவசியத்தை அவர்களால் உணர்ந்துகொள்ள முடிவதில்லை.

மணல்துறை மட்டுமன்றி, கடற்கரையை அண்டிய ஏனைய பகுதிகளிலும் நீர்வளம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு நீரின் தற்போதைய தன்மைகளைக் கண்டறிந்து நல்ல த்தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிகளை உறுதிப்படுத்த நீர்வழங்கல் வடிகால் அமைப்பு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது நெடுந்தீவு மக்களுக்கு சாட்டி தண்ணீர் கிடைப்பதாகவும் தவறான கருத்து வெளியாகியிருந்தது.

இரணைமடு நீரை பாக் மூலம் எடுத்து வந்து விநியோகிக்கும் திட்டம் இருப்பினும், பலத்த கடற்காற்று கொந்தளிப்பு நிறைந்த காலப்பகுதியில் அது சாத்தியமாக அமையுமா என்பதும் கேள்விக்குரியதே. முதலில் இங்குள்ள நீர்வளம் குறித்த ஆய்வுகளே முன்னெடுக்கப்பட வேண்டும்.



தண்ணீருக்காக வரும் கால்நடைகள் மக்கள் நடமாடாத மணல்துறைக்கு வந்து நீர்கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பும் காட்சிகளே இன்று மணல்துறைக் காட்சிகளாகிவிட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...

நவநாகரிகத்தை அதிகம் நாடுபவர்கள் நிச்சயமாக பெண்கள் மட்டும்தான். நவநாகரிகம் என்ற பெயரில் பெண்கள் இன்று கலாசாரத்தை சீரழிக்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் திருமணமாகாத பெண்களை விட திருமணம் ஆன பெண்களே கலாசாரத்தை சீரழித்து நவநாகரிகம் என்ற போர்வையில் அலைந்து திரிகின்றனர். திருமணம் ஆகிய நிலையில் கணவர்மார் வெளிநாடுகளில் வசிக்கும் பெண்கள் மிகவும் மோசமானவர்களாக இருக்கின்றனர். கணவர்மார் வெளிநாடுகளில் இருக்கும்போது இங்கு அவர்கள் அலங்காரம் செய்து மற்றவர்களை கவரும் வகையில் திரிகின்றனர்.

நானும் ஒரு பெண்ணாக இருப்பதனால் பெண்களை நினைக்கும் போது கவலையாக உள்ளது. இன்று நவநாகரிகத்தோடும், அளவுக்கு மீறிய அலங்காரத்தோடும் வாழ நினைக்கும் பெண்களே ஆண்களைச் சீரழிக்கின்றனர். நவநாகரிகத்தை நாடும் பெண்களே கலாச்சாரத்தை சீரழித்துக்கொண்டு இருகின்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தவே முடியாது.

த.யாளினி, மானிப்பாய்.

> இன்றைய காலகட்டத்தில் திருமணமாகாத பெண்களை விட திருமணம் ஆன பெண்களே கலாசாரத்தை சீரழித்து நவநாகரிகம் என்ற போர்வையில் அலைந்து திரிகின்றனர்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :-..........................................................

..........................................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**

'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மனக்காயம்




என் காலில் முள்
குத்திவிட்டது...
இவ்வாறு நான் என்
இனியர்களிடமெல்லாம்
சொல்லிச் சொல்லி
அழுதேன்........
அப்போது என்னைப் பார்த்து
சிரித்தபடியே........
ஊன்றுகோலை ஊன்றியபடி
என்னை கடந்து
நடந்து செல்கின்றான்
காலில்லா மனிதன்!

ம.சலக்சிகா, சண்டிலிப்பாய்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



## யாரவன்



என் உணர்வுகளைப்
புரிந்து கொள்பவன்
என் குறைகளோடு
என்னை நேசிப்பவன்
தான் கொடுக்க
நினைக்கும் முழு
அன்பையும்
கேட்டுக் கேட்டுப்
பெற்றுக்கொள்பவன்
என் சக்தியின் சிவமானவன்
என் தேடலைப்
பூர்த்தி செய்பவன்
என்னை முழு
மனிதனாக்குபவன்

மயூரி கனகரட்ணம்,
கைதடி.

# ஓய்வை பயனுள்ள வகையில் பயன்படுத்துவோம்

> ஓய்வைப் பயன்படுத்தி மனிதாபிமானதான பணிகள் ஒவ்வொன்றையும் பயனுள்ள வகையில் மேற்கொண்டால் எதிர்கால சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.


ஓய்வு என்பது அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான ஒன்றாகும். உடலும் மூளையும் பூரணமாக ஓய்வு எடுக்கின்றன. உடல் உழைப்பு இல்லாத வேளையிலும், மூளை சிந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றது. இன்றைய காலத்தில் பல்கிப்பெருகி வரும் சமூகப் பிரச்சினைகளை மனிதன் சந்திப்பதால் மூளையின் வேலை அதிகரிக்கின்றது.

இதயத்துடிப்பு, சுவாசம் ஆகியன மனிதன் உறங்கும் வேளையில் செயற்பட்டுக் கொண்டு இருப்பதனால் உடலுக்கும் உள்ளத்துக்கும் களைப்பை நீக்கி உற்சாகத்தைக் கொடுக்க இந்த ஓய்வு அத்தியாவசியமாகின்றது.

வேலை எதுவும் இன்றி வீணாகக் காலம் கடத்துவதை ஓய்வு எனக் கருதமுடியாது. அப்படியாயின் ஓய்வு எம்மைத் தீய பாதைக்கு இட்டுச் செல்லுமானால் எமது உள்ளங்களில் பிறரைப் பற்றி குறை கூறுதல் மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காணுதல் போன்ற பண்புகளில் மகிழ்ச்சி அடைய வைக்கும் போக்கை இன்றைய சமூகத்தில் காண முடிகின்றது.

ஆகவே சமூக சேவை என்பது ஓய்வைப் பயன்படுத்தி மனிதாபிமானப் பணிகள் ஒவ்வொன்றையும் பயனுள்ள வகையில் ஆற்றுவதால் எதிர்கால சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

*சி.சுங்கானந்தி (B.A.)*,
5ஆம் வட்டாராம், நயினாதீவு.



## நேர்மை



பகலுக்குத் தேவை
வெளிச்சம்
நட்புக்கு தேவை
உண்மை
இரவுக்குத் தேவை
நிலவு
ஆகாயத்துக்குத்
தேவை வானம்
அதையும் விட
மனிதனுக்கு தேவை
நேர்மை

அ.சுபாஷினி
மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க செயற்பாடுகள் முடங்கும் நிலை

## கிளைக் குழுத் தேர்தல் நடைபெற்றும் பொதுச்சபை கூடாததால்

கிளிநொச்சி, மே 16
கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள போதும் அதன் பொதுச்சபை கூட்டப்படாமையால் சங்கச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூட்டுறவு ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பில் ஆர்வலர்கள் மேலும் தெரிவிக்கையில்:-
குறித்த சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் நிறைவடைந்து அதன் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளபோதும் பொதுச் சபையைக் கூட்டுவதற்கு முன்னைய நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இதனால் சங்கச் செயற்பாடுகள் முடங்கும் நிலைமையும் காணப்படுகின்றது.
கடந்த வருடம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள், குறுக்கீடுகளினால் ஏற்ற ஓர் இடைக்கால சபை உருவாக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் குறித்த சங்கத்துக்கு நியமிக்கப்பட்ட தலைவரால் 38 லட்சம் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டு அது கண்டுபிடிக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அரச அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக குறித்த மோசடி தொடர்பில் ஒரு தொகைப் பணத்தைச் செலுத்தியதுடன் இன்னும் 14 லட்சம் ரூபா செலுத்தவேண்டியுள்ளது.
இந்த நிலையில் பொதுச்சபை கூட்டப்படாமையால் சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுவதுடன் அவை முடங்கிப் போகும் நிலையும் காணப்படுகின்றது. (வ-6)

## ஒலுமடுவில் செயலமர்வு



முல்லைத்தீவு,மே 16
ஒலுமடு அ.த.க. பாடசாலையில் போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் மு.விமலேந்திரன் தலைமையில் கடந்த மாதம் 6 ஆம் திகதி இந்த கற்றல் வழிகாட்டலும், வலுவூட்டல் செயலமர்வும் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் ஆரம்ப உரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த க.இ.கமல்ராஜ் நிகழ்த்தினார்.
வளவாளர்களாக கல்விமான்களான பா.தனபாலன், பி.பரவ கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-29)

## திறந்து 6 மாதங்கள்; இயங்கவில்லை சந்தை

அக்கராயன்,மே 16
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் திறந்து வைக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் இயங்காதுள்ள ஸ்கந்தபுரம் பொதுச் சந்தையை விரைவாக இயங்க வைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
60 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தச் சந்தை கால்நடைகளின் தங்குமிடமாகவும் நெல் களஞ்சியப்படுத் தப்படும் பாதுகாப்பு இடமாகவும் இருந்து வருகின்றது.
இந்தக் கட்டடத்தில் சில வசதிகள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக இந்தச் சந்தை இயங்காமல் உள்ளது.
சந்தையை விரைவில் இயங்க ஏற்பாடு செய்யுமாறு மக்கள் கேட்கின்றனர்.
இதேவேளை - அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதிகளை உள்ளடக்கி மீன் மற்றும் இறைச்சிகளுக்கான சந்தை ஒன்றை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-18)

## விடத்தல்தீவு கொல்களத்தில்
# பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக முறைப்பாடு



மன்னார்,மே 16
விடத்தல்தீவு பகுதியில் அமைந்துள்ள கொல்களத்தில் பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாக அந்தக் கிராம மக்கள் விடத்தல் தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாக மக்கள் தெரிவித்துள்ளதாவது:-
விடத்தல் தீவு கிராமத்தில் அமைந்துள்ள கொல்களத்தில் விடத்தல் தீவு, இலுப்பைக் கடவை, பெரியமடு, கறுக்காக் குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களுக்கு அங்கிருந்தே மாட்டு இறைச்சி கொண்டு செல்லப்படுகின்றது.
ஆனால் குறித்த கிராமங்களில் மாடு வெட்டப்படுவதற்கான கொல்களங்கள் உள்ள போதும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஏனைய மூன்று கொல்களங்களுக்கும் அனுமதி வழங்கவில்லை.
இந்த நிலையில் விடத்தல் தீவு கிராமத்தில் உள்ள கொல்களத்தில் குறித்த 4 கிராமங்களை சேர்ந்த மாட்டு இறைச்சி விற்பனையாளர்களும் மாடு வெட்டுகின்றனர்.
இந்த நிலையில் பசு மாடுகளும் களவாக வெட்டப்படுகின்றன.
கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த கொல்களத்தில் நிறைமாத பசு ஒன்று வெட்டப்பட்டு பசுவின் வயிற்றுக்குள் இருந்த கன்றுக் குட்டியும் வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக குறித்த கிராம மக்கள் விடத்தல் தீவு பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.
மாந்தை மேற்கு பிரதேச சபை ஏனை மூன்று கிராமங்களிலும் அமைந்துள்ள கொல்களங்களுக்கும் அனுமதி வழங்காத காரணத்தாலேயே குறித்த சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் மாந்தை மேற்கு பிரதேச சபை இந்த விடயத்தில் மௌனம் காத்து வருவதாகவும், பொது சுகாதார பரிசோதகர்களும் இந்த விடயத்தில் மௌனம் காத்து வருவதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாக மாந்தை மேற்கு பொது சுகாதார வைத்திய அதிகாரி றோய் பீரிசுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது உரிய பதிலை வழங்கவில்லை.
குறித்த பிரச்சினைகள் தொடர்பாக அந்தக் கிராம மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர். (ம-12)

# கட்டுப்பணத்தை செலுத்த முடியாமல் திணறும் கிளிநொச்சி விவசாயிகள்

## எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை

கிளிநொச்சி, மே 16
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த விவசாயிகள் கடனடிப்படையில் பெற்றுக் கொண்ட விவசாய இயந்திரங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்த முடியாமலும் வங்கிக் கடன்களைச் செலுத்த முடியாமலும் விவசாயிகள் தற்கொலை முயற்சிக்கு செல்லும் நிலை காணப்படுகின்றது.
கடந்தகால போர் காரணமாக இடம்பெயர்ந்து 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதன் பின்னர் மீள்குடியமர்ந்த விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் வங்கிக் கடன்களைப் பெற்றும் இலகு கடன் அடிப்படையில் விவசாய இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்தனர். அவற்றின் மூலம் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு நெற்செய்கையில் ஏற்பட்ட நோய்த்தாக்கம், அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சி, 2012 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு என்பவற்றால் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை.
இதனால் வங்கிக் கடன்களையும் வாகனக் கடன்களையும் செலுத்த முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது.
இதனால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட வாகனங்களில் அறுபது வீதமானவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் 16 வரையான வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
இதேபோன்று கரைச்சிப் பிரதேசத்திலும் 25 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனைவிட வங்கிக் கடன்களைப் பெற்று அவற்றைச் செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.
இதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட சில இடங்களில் விவசாயிகள் பலர் தற்கொலை முயற்சி கூட செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-6)

# மஞ்சள் கடவை வீதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை

வவுனியா ஏ-9 பிரதான வீதியில் மஞ்சள் நிறக்கடவையை மீறி வீதியை கடப்போருக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வவுனியா பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
அண்மையில் மஞ்சள் நிற கடவைகளை மீறி கடப்போர் பலர் வீதி விபத்துக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
இதேவேளை மஞ்சள் கடவைகளுக்கு முன் உரிய பொலிஸார் பிரதான வீதிகளில் நிறுத்தப்பட்ட வேளையிலும் திடீரென குறுக்காக பயணிகள் செல்வதால் பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
வவுனியா கண்டி வீதியில் 12 இற்கு மேற்பட்ட மஞ்சள்நிற கடவைகள் உள்ளன. இவற்றில் வவுனியா தமிழ்மகா வித்தியாலயம், கல்வித் திணைக்களம், பஸ் நிலையம், வவுனியா பொது வைத்தியசாலை, வவுனியா பொலிஸ் நிலையம் ஆகியவற்றின் முன்பாக பல விபத்துக்கள் இடம்பெறுவதற்கு ஏதுவாக வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் வீதிச் சட்டங்களை மீறுவதே அதிகமாகவுள்ளன.
இதுவரை 4 பேர் உயிரிழப்புகள் மஞ்சள் நிற கடவைகளுக்கு முன் நிகழ்ந்துள்ளன.
எனவே தான் பொலிஸார் பயணிகளுக்கு மஞ்சள் நிற கடவைகளுக்கு முன்பாக கடக்குமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (வ-402)

## நாங்கள் எங்கும், எப்படியும் செல்வோம்...!



மஞ்சள் கோடு கடவை இருந்த போதும் அதனை அலட்சியப்படுத்தி, வவுனியா பஸ் நிலையத்துக்கு பலரும் வேறு இடங்களாலேயே குறுக்காகச் செல்கின்றனர். அவ்வாறான ஒரு காட்சியையே இங்கு காண்கிறீர்கள். விபரீதங்களைத் தவிர்க்க கடவையைப் பாவித்தால் நல்லதுதானே. (ஒ-402)

# கிராஞ்சியில் 'மகாசென்'னால் படகுகள் சேதம்

கிளிநொச்சி, மே 16
கிளிநொச்சியில் திங்கட்கிழமை அதிகாலை வீசிய மகாசென் புயலினால் கிராஞ்சி கிராமத்திலுள்ள கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன.
ஸ்ரீ முருகன் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட கடற்றொழிலாளர்களின் படகுகளும் மீன்பிடி உபகரணங்களுமே இவ்வாறு சேதமடைந்துள்ளதாக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ந-16-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் விமலுக்கு எதிராக பொதுபல சேனா போர்க்கொடி

## மேற்குலகத்திடமிருந்து நிதியா? முடிந்தால் நிரூபிக்குமாறு சவால்

கொழும்பு,மே 16

மேற்குலக நாடுகளிடமிருந்து தாம் 5 சதமாவது நிதியுதவி பெற்றிருந்தால் அதனை அமைச்சர் விமல் வீரவன்ஸ நிரூபித்துக் காட்டட்டும் என்று சவால் விடுத்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொடஅத்தே ஞானசார தேரர், இந்தியாவிலுள்ள சிவசேனா அமைப்புடன் இணைந்து பௌத்த தர்ம வரலாற்றை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் அவரது மனைவியும் செயற்படுகின்றனர் என்ற பரபரப்புக் குற்றச்சாட்டையும் முன்வைத்தார்.

தமது அமைப்பு மேற்குலக நாடுகளிடமிருந்து நிதி பெறுவதாகச் சுமத்திய குற்றச்சாட்டை அமைச்சர் விமல் வீரவன்ஸ நிரூபித்தால், பொது மன்னிப்புக் கேட்டு தமது அமைப்பை உடனடியாகக் கலைத்து விடுவதாகத் தெரிவித்த அவர், அவ்வாறில்லாவிட்டால் அமைச்சர் விமல் வீரவன்ஸ அரசியலிலிருந்து உடன் விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

கொழும்பு, தும்முல்லை சந்தியிலுள்ள சம்புத்த்வ ஜெயந்தி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுபலசேனா அமைப்பின் பயணத்தை முடக்குவதற்காக அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ஸவும், சில நிறுவனத்தினரும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், நாம் நோர்வேயிலிருந்து நிதியுதவி பெறுவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இவர் போன்ற பைத்தியக்காரர்களின் குற்றச்சாட்டுகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

பொதுபலசேனா அமைப்பு நோர்வேக்கு ஒருபோதும் செல்லவில்லை. இந்த அமைப்பை நிறுவுவதற்கு முன்னர் நான் உள்ளிட்ட தேரர்கள் குழுவினர் நோர்வே சென்றோம். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் நாம் அங்கு சென்றோம். புலிகளுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யாத நல்ல புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்து நாம் பேச்சு நடத்தினோம்.

இலங்கையில் துன்பங்களை அனுபவிக்கின்ற தமிழர்களுக்கு உதவி செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கைகளை முன்னெடுங்கள், அதற்கு நாங்கள் உதவி செய்கின்றோம் என்று அவர்கள் கூறினர். மிலேச்சத்தனமான போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நல்வாழ்வுக்காகத்தான் நாம் அன்று நோர்வே சென்றோம். தமிழர்களின் நலனுக்குத் தாம் உதவி செய்கின்றோம் என நோர்வேயிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் எம்மிடம் கூறினர். அதற்கான நடவடிக்கைகளையும் நாம் ஆரம்பிக்க இருந்தோம். ஆனால், சில அடிப்படைவாதிகளின் செயற்பாட்டால் அந்த நடவடிக்கைகள் அப்படியே முடங்கி விட்டன.

அன்று முதல் இன்றுவரை புலம்பெயர் தமிழர்களுடனும், சிங்களவர்களுடனும், முஸ்லிம்களுடனும் நாம் பேச்சு நடத்தவில்லை. புலம்பெயர் இலங்கையர்களுடனேயே பேச்சு நடத்துகிறோம்.

நாம் புலம்பெயர் தமிழர்களைச் சந்திப்பதாக எம்மீது அரசினர் குற்றஞ்சுமத்துகின்றனர். ஆனால் நோர்வே செல்லும் அமைச்சர்கள் அங்குள்ள புலம்பெயர் தமிழர்களுடன்தான் தங்கியிருந்து வருகின்றனர்.

அண்மையில் அமெரிக்கா சென்றும் புலம்பெயர் இலங்கையர்களுடன்தான் நாம் பேச்சு நடத்தினோம். புலம்பெயர் தமிழர்களுடன் அல்ல.

**அமைச்சர் விமலுக்குச் சவால்**

பொதுபலசேனா அமைப்பு நோர்வேயிடமிருந்து நிதி பெறுகின்றது என அமைச்சர் விமல் வீரவன்ஸ பகிரங்கக் குற்றச் சாட்டை முன்வைத்திருந்தார்.

நோர்வே உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடமும் நிறுவனங்களிடமும் எமது அமைப்பு 5 சதமாவது நிதியுதவி பெற்றிருந்தால், அமைச்சர் விமல் வீரவன்ஸ அதை நிரூபித்துக் காட்டட்டும். அவர் அதனை நிரூபித்தால் பொது மன்னிப்பு கேட்டு, இரண்டு மணித்தியாலத்துக்குள் எமது அமைப்பை உடனடியாகக் கலைத்து விடுவோம். இல்லாவிட்டால், அமைச்சர் விமல் வீரவண்ஸ அரசியலிலிருந்து உடன் விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

அமைச்சர் விமல் வீரவன்ஸ குறித்து எமக்குப் பெரும் சந்தேகம் உள்ளது. இந்தியாவிலுள்ள சிவசேனா அமைப்புக்கும் அவருக்கும் தொடர்பு இருக்கின்றதா என்ற கேள்வி எமக்கு இருக்கின்றது. இந்தியாவில் இயங்கி வரும் சிவசேனா அமைப்பு பௌத்த சமயத்துக்கு எதிரானதாகும். பௌத்த சமயம் இந்தியாவில் தோற்றம் பெற்றதல்ல என்று பௌத்தத்தின் வரலாற்றை அழித்தொழிக்க அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்-என்றார். (ச-சி-ரி)

# இனவாத இயக்கத்துக்கு நோர்வேயே நிதியுதவி

## குற்றஞ்சாட்டுகிறார் விமல்

கொழும்பு,மே 16

சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பேதங்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் கைங்கரியத்தில் பலர் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்தகைய இனவாத சக்திகளுக்குப் பக்கபலமாக நோர்வே அரசு பின்னணியில் செயற்பட்டு வருவது உறுதியாகி உள்ளது.



- இவ்வாறு வீடமைப்பு மற்றும் நிர்மாண, பொறியியல் சேவை மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.

லிந்துல ஜனசெவன வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக சிங்களவர்களை உசுப்பிவிட்ட குறிப்பிட்ட ஓர் இயக்கத்துக்கு நிதியுதவி செய்தது நோர்வே அரசே என உள்நாட்டு ஞாயிறு பத்திரிகையொன்றிலும், இணையதளமொன்றிலும் செய்திகள் வெளிவந்துள்ளன.

குறிப்பிட்ட இந்த இயக்கத்தின் குழுவொன்று நோர்வே நாட்டுக்குச் சென்று அங்குள்ள தமிழ் டயஸ்போரா (புலம்பெயர்) பிரமுகர்களைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது. கடந்த ஞாயிறு பத்திரிகை யொன்றில் வெளியான செய்திகளின்படி இந்தக் குழு அமெரிக்காவிலும், டயஸ்போரா தலைமைகளைச் சந்தித்து உரையாடியுள்ளதாகத் தெரிய வருகின்றது. அந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தவர் நோர்வேயைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரே என்பது கவனிக்கத்தக்க விடயம்.

சிங்கள பௌத்தர்களைக் காப்பாற்றுவதற்கு நோர்வே அரசுக்கும் புலம்பெயர் தமிழருக்கும் அக்கறை வரவேண்டிய அவசியம் என்ன? முஸ்லிம்களுக்கு எதிரான கடும் போக்கைக் கொண்டுள்ள சிங்கள அமைப்புக்கு நோர்வே ஏன் நிதியுதவி செய்யவேண்டும்? இவர்களின் சதியை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இந்தக் கருத்துகளை கூறியதற்காக என்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள், நிந்தனைகள் சுமத்தப்படலாம். அவ்வாறு செய்யப்பட்டாலும் கூட இத்தகைய சதிகளையும் அவற்றின் பின்னணியில் உள்ளவர்களையும் சரியாகப் புரிந்து கொண்டு நாம் நடைபோட வேண்டும்-என்றார். (சி)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடர்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**இடபர்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனர்:** அநாவசியமான பேச்சைத் தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகர்:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரத்தில் கடினமாக உழைக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு குறையும்.

**சிங்கர்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கன்னி:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசுக் காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத்தொடங்குவீர்கள்.

**நாளை**

*வைகாசி-03 வெள்ளிக்கிழமை 17.05.2013*
*திதி: ஸப்தமி மா. 06.04 வரை*
*நட்சத்திரம்: ஆயிலியம் பி.இ. 12.19 வரை*
*சுபநேரம்: 05.53 - 07.23 வரை*
*இராகுகாலம்: 10.23- 11.53 வரை*

**துலாபர்:** நீண்டநாள்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவு கட்டுவீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெறுகும். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். கோபம் குறையும்.

**விருச்சிகர்:** உணர்ச்சி வசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளை சொல்லி ஆதங்கப்படுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசர்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

**மகரர்:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

**கும்பர்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**மீனர்:** நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் நன்மை கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப்படுத்துவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 4 | | 8 | 9 | | |
| 3 | | 6 | 7 | | | 5 | | |
| 8 | | | 9 | | 5 | | | |
| | | | | | | 8 | 3 | 4 |
| 5 | | 3 | 8 | | 9 | 1 | | 6 |
| 6 | 8 | 1 | | | | | | |
| | | | 5 | | 4 | | | 3 |
| | | 9 | | | 6 | 4 | | 7 |
| | | 8 | 1 | | 7 | | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 6 | 9 | 3 | 4 | 5 | 7 | 2 |
| 2 | 5 | 7 | 1 | 8 | 6 | 3 | 4 | 9 |
| 9 | 4 | 3 | 2 | 7 | 5 | 8 | 6 | 1 |
| 7 | 8 | 2 | 4 | 5 | 9 | 1 | 3 | 6 |
| 1 | 9 | 4 | 3 | 6 | 8 | 7 | 2 | 5 |
| 3 | 6 | 5 | 7 | 2 | 1 | 4 | 9 | 8 |
| 5 | 2 | 9 | 8 | 4 | 3 | 6 | 1 | 7 |
| 6 | 3 | 1 | 5 | 9 | 7 | 2 | 8 | 4 |
| 4 | 7 | 8 | 6 | 1 | 2 | 9 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# அச்சுவேலி ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு இடையூறு விளைவித்ததால் நடவடிக்கை

அச்சுவேலி, மே 16

அச்சுவேலி பிரதேச வைத்திய சாலை நிர்வாகத்துக்கு இடையூறு செய்யும் வகையில் செயற்படும் வைத்தியசாலை உத்தியோகத்தர் சிலருக்கு எதிராக யாழ். பிராந்திய சுகாதார பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

உயர் அதிகாரிகள் குழு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று விசாரணை செய்துள்ளது.

அச்சுவேலி பிர்தேச வைத்திய சாலைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பதிகாரிக்கும் முகாமைத்துவக் குழுவின் செயற்பாடுகளுக்கும் உரியமுறையில் ஒத்துழைப்பு வழங்காமல் முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு எதிராக ஓர் அணி செயற்பட்டு வந்தது.

ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்ற பெண் வைத்தியர் ஒருவர் உட்பட வைத்திய சாலை உத்தியோகத்தர் சிலர் உயர் அதிகாரிகளின் விசாரணைக்கு உள்ளாகி உள்ளனர்.

எதிராகச் செயற்பட்ட அணியினர் தொலைபேசி மிரட்டல், மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளில் தலையிட்டுக் குழப்பம் விளைவித்தல், நோயாளர்களை தரக்குறைவாக ஏசி எச்சரித்தல், பொருத்தமான முன் அறிவித்தல் இன்றி கடமைக்கு சமுகம் கொடுக்காமல் இருத்தல் உள்ளிட்ட வகைகளில் முரண்பட்ட நிலையில் நடந்து கொண்டமை தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது. இதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறிப்பிட்ட சிலர் உரிய முறையில் விசாரணைக்கு சமுகம் அளிக்காமல் தன்னிச்சையாக நடந்து கொள்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களின் முரண்பாடான செயற்பாடுகள் தொடர்பாக நோயாளர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக நோயாளர் நலன்புரி சங்கமும், சுகாதார பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-11)


சுன்னாகம் புனித சூசையப்பர் தந்தையர் மன்றத்தின் 27 ஆவது ஆண்டு விழா சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. பங்குத் தந்தை ம.றெக்ஸ்சவுந்தரா அடிகளார் முன்னிலையில் அ.யூட் சன் அன்புமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பங்குத் தந்தை அருட்பணி நிரூபன் நிசாந் கலந்து கொண்டார். சிறப்பு நிகழ்வாக இலத்திரனியல் தொழில்நுட்பச் சாதனங்களின் பெருக்கம் மனித வாழ்வுக்கு சுகமா? சுமையா? என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. (ந)

இரவு நேரத்தில் சைக்கிளில் பயணம் செய்வோர்

# பயண விதிமுறைகளை கடைப்பிடியுங்கள்

வடமராட்சி, மே 16

இரவு நேரத்தில் சைக்கிள்களில் பயணம் செய்வோர் இரவு நேர சைக்கிள் பயண விதிகளை மீறிச் செல்வதாக வடமராட்சி பொலிஸ் வீதி போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிச் செல்வோரால் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. இதனால் இரவு நேரப் பயண விதிகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

எனவே இரவு நேரத்தில் சைக்கிள்களில் பயணம் செய்வோர் லையிட், பெல், பிறேக், மக்காட், சிவப்புக் கல் என்பவற்றைப் பூட்டிப் பயணம் செய்யுமாறு வடமராட்சி வீதி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-293)

# முன்பள்ளி மாணவர்களின் கல்விச் சுற்றுலா

நெல்லியடி, மே 16

நெல்லியடி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் என 80 பேர், யாழ். குடாநாட்டுக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட இந்தச் சுற்றாவின்போது கீரிமலை, மாவிட்டபுரம், சுப்பிரமணியம் பூங்கா, கோட்டை, ஆஞ்சி நேயர் கோயில் என்பவற்றை பார்வையிட்டனர்.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகத்தினர் ஒன்றாக இணைந்து செயற்படவும் ஆன்மிக வழிபாடுகளில் ஈடுபடவும் மாணவர்கள் உளரீதியாக ஆறுதல் அடையவும் என இச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது என நிர்வாகத்தினர் கூறினர்.(ந-ரி)


கீரிமலை சிவன் ஆலயம் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆலயம் போர் அனர்த்தத்தின்போது சேதமடைந்த நிலையில் இருந்தது. (ந-17)

# கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரியில் தமிழ் விழா



கொழும்புத்துறை, மே 16

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி தனிநாயகம் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்விழா நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிக பீடாதிபதியும் யாழ். தமிழ்ச் சங்கத் தலைவருமான பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்தந்தை பா.கி.நேசரட்ணம் (தமிழ் நேசன்) அடிகள் கலந்து சிறப்பிப்பார்.

தமிழ்ப்பணி தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் ஜனன நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வரும் வேளையில் தனிநாயகம் தமிழ் மன்றம் தமிழ் விழாவை முன் னெடுப்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு நிகழ்வாக குருமட மாணவர்களின் "இன்னும் புழுதியில்..." என்னும் நவீன நாடகமும் இடம்பெறும். (ஒ-135)

# காரைநகர் ஆஸ்பத்திரியில் நிரந்தர வைத்தியர் இல்லை

## நோயாளர்கள் சிரமத்தில்

காரைநகர்.மே.16

காரைநகர் அரசினர் வைத்திய சாலையில் நிரந்தர வைத்திய அதிகாரி இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய தென்பகுதியைச் சேர்ந்த வைத்தியர் கடந்த மாதம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதனை அடுத்து ஒப்பந்த அடிப்படையில் பதிவு வைத்தியர் ஒருவரே தற்காலிகமாகக் கடமையாற்றி வருகின்றார்.

நிரந்தர வைத்திய அதிகாரி கடமையாற்றிய காலப்பகுதியில் காரைநகரை விட வெளியிடங்களில் இருந்தும் குறிப்பாக பொன்னாலை, மூளாய், சுழிபுரம் போன்ற பகுதிகளில் இருந்தும் நோயாளர்கள் சிகிச்சைக்காக இங்கு வருகை தந்தனர்.

மாதாந்தம் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

நூற்றுக்கணக்கானோர் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

தற்போது நிரந்தர வைத்திய அதிகாரி இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

விரைவில் நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# முன்பள்ளி மெய்வன்மைப் போட்டி



தென்மராட்சி,மே 16

சாவகச்சேரி குடும்ப முன் பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-9)

விவசாய தகவல் தொழில்நுட்ப பூங்காவில்

# மாணவர், விவசாயிகளுக்கு 26 விதமான பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். திருநெல்வேலியில் உள்ள விவசாய தகவல் தொழில்நுட்ப பூங்காவினால் விவசாயிகள் உட்பட மாணவர்களுக்கும் விவசாயத் துறை சார்ந்த 26 விதமான பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் க.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிலேயே முதலாவது விவசாய தகவல் தொழில் நுட்ப பூங்காவாக மாற்றப்பட்டுள்ள யாழ். மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையம் யாழ். மாவட்டத்தின் விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் 26 விதமான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

தொழில்நுட்பப் பயிற்சிகள் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் விவசாயத்துறை சார்ந்த கடமையில் உள்ள போதனாசிரியர்களினால் விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது நாளாந்தம் ஒரு பாடசாலையின் மாணவர்கள் மற்றும் ஏனையோர் குறைந்தது 40 இற்கும் மேற்பட்டவர்கள் வருகை தந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். இதனை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா இரத்தினம்



காரைநகர், கருங்காலியை பிறப்பிடமாகவும், மருதடிப் பிள்ளையார் கோயிலை வதிவிடமாகவும், தற்போது கொழும்பு, மூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா இரத்தினம் 12.05.2013 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற க.கு.ச. இரத்தினத்தின் (பிரபல வர்த்தகர், க.கு.ச. இரத்தினம் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமுத்து (பிரபல வர்த்தகர், ருவன்வெல நாகமுத்து) - அமராவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (பிரபல வர்த்தகர், க.கு.சங்கரப்பிள்ளை ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சரோஜினிதேவி, தனலெட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, நகுலாதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற Dr. செல்வரட்ணம், கெங்காதரன், சிவபாதவிருதயர், இராஜேந்திரம், அமிர்தலிங்கம், அனுசா ஆகியோரின் அன்பு மாமியும், சந்திரிகா, சந்திரலதா, சிவபாலன், சிவகௌரி, சிவகாந்தன், கிருஷ்ணவேணி, நிஷாந்தன், கஜப் பிரியன், விசாகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிரூபா, அபிஈசன், விஷ்ணுகன் ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நடராசா மற்றும் நவரட்ணம் (J.P), சுந்தரலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.05.2013, 15.05.2013 அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு இன்று (16.05.2013) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கு.ச. இ.விக்கினேஸ்வரன் (மகன்)

No.22 1/2, Moor Road,
Colombo - 06.

(C/9085)(10.6)

# 126 தனியார் வர்த்தகங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு

## வடக்கில் 3 மாதங்களில் மட்டும்

யாழ்ப்பாணம்,மே 16

வடக்கில் உள்ள தனியார் வர்த்தகங்களில் கடந்த ஜனவரி தொடக்கம் மார்ச் வரை 126 வர்த்தகங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று வடமாகாண தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகளவாக யாழ்ப்பாணத்திலேயே 69 வர்த்தகங்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளன.

கிளிநொச்சியில் 12 , வவுனியாவில் 27 , முல்லைத்தீவில் 18 என மொத்தம் 126 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடக்கில் தனியார் நிறுவனங்கள் சில இன்னும் பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன. அவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஒ-4)

# காற்றில் பறந்தன விளம்பர தட்டிகள்

நாவற்குழி,மே 16

யாழ். நகரின் கரையோரத்தில் கடந்த திங்கட்கிழமை தாக்கிய 'மகாசென்' புயலினால் நாவற்குழி பாலத்தை அண்டிய பகுதியில் நடப்பட்டிருந்த வீதி, மற்றும் விளம்பரத் தட்டிகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. (ஒ-ரி-51)

### விற்பனைக்கு

ஆடு,மாடு, வைக்கோல் விற்பனைக்கு.
தொடர்பு: P.V.சூரியர்,
'செல்வவேல்',இல.10, கல்லூரி வீதி,
கோக்குவில்.தொ.பே.:021 222 7217 (37399)(5.6)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 50 வயது தொழிலதிபருக்கு படித்த சைவபோசனமுள்ள 40 வயதுக்குட்பட்ட பெண் தேவை.
தொடர்பு: 077 918 1310 (37398)(5.6)

### வீடுகள் வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் இரு வீடுகள் வாடகைக்கு உண்டு
36/1, 5ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
071 258 9933 (37397)(5.6)

### காணி விற்பனைக்கு

பலாலிறோட், உரும்பிராய் மடத்தடிக்கு அருகில் 3½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 844 8937,
077 833 1144 (37394)(6.11)

## 4ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளில்



மலர்வு 25 * 04 * 1984

உதிர்வு 16 * 05 * 2009

## கதிர்காமவேலன் ஹரிதாஸ்

[நிரந்தர முகவரி: மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமம்.
தற்காலிக முகவரி : ஜெயந்திநகர், கிளிநொச்சி.]

பாதி வாழ்க்கையிலே கண்ணிமைக்கும் முன்னே
மறைந்துவிட்ட உமது உறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்துவிட்ட உமது அன்பின் உலராத வாசனையும்
ஆண்டுகள் பலகோடி ஆனாலும் அகலாது எம்மைவிட்டு
உந்தன் நினைவுகள் என்றும் எம் இதயத்தில்
இந்நாளில் கதிர்காமவேலன் சிறிகாந்தனையும்
நினைவு கூருகின்றோம்.

என்றும் உன் பிரிவுத்துயரில்
குடும்பத்தினர், உற்றார்,உறவினர்,நண்பர்கள்.



# 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
09.02.1938

மறைவு
14.04.2013

## அமரர் சின்னத்தம்பி சிவபாலசுப்பிரமணியம்

(தொண்டர், சவாரி)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து, இன்று எம்மை விட்டுப் பிரிந்து பரமனின் பாதார விந்தத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்ட எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி சிவபாலசுப்பிரமணியம் (தொண்டர், சவாரி- கலைவாரிதி, கலாபூஷணம், முன்னாள் ஊழியர், C.T.B கோண்டாவில்) அவர்களின் மரணச் செய்தி கேட்டு, ஓடோடி வந்து, உடன் நின்று உதவியவர்கள், ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்கள், உள்ளூர், வெளியூர்களில் இருந்து அனுதாபம் தெரிவித்தவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வேளையில் உதவி புரிந்தவர்களுக்கும், மரணச் சடங்குகளை செவ்வனே நடத்த உதவியவர்கள், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி, சகோதரி,
அருள் குடும்பம்
சிவா குடும்பம் } டென்மார்க்
ராசன் குடும்பம்

(C/9422)(10.6)

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை பத்மநாதன் (சமாதான நீதிவான் - அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பத்மநாதன் (11.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், மகாலட்சுமியின் அன்புத் தம்பியும், காலஞ்சென்றவர்களான வரதலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் பாசமிகு கணவரும், சுரேசன் (லண்டன்), சுரேந்திரன் (இந்திரன் - லண்டன்), சுதாகரன், சுதாஜினி, சுபாஜினி (கனடா), சசிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாம்பாள், தயாளினி, புஸ்பலதா, வாமதேவன், சிவதாஸ் ஆகியோரின் அன்பு மாமனும், கவிஞர் புதுவை இரத்தினதுரை, சரோஜினிதேவி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 0052.

(35027) (46.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tourism opportunities

3rd edition

සංචාරක උදාව
சஞ்சாரக உதாவ
Sancharaka Udawa
2013



சஞ்சாரக உதாவ
சுற்றுலாத்துறை விரிவாக்கல் ஒன்றுகூடல் சந்தை

**சர்வதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் (2013 யூன் மாதம் 14ஆம் திகதி) வெள்ளிக்கிழமை (15 ஆம் திகதி) சனிக்கிழமை ஆகிய திகதிகளில் காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும்.**

ஒருங்கே
- தொழில்துறை வழிகாட்டல் நிகழ்ச்சி நிரல்
- கட்டுரை போட்டி

Exhibition Secretariat - BConnected (Pvt) Ltd
No: 100, Jawatta Road, Colombo 05, Sri Lanka
Tel: 011 3158416, 2507345 Fax: 011 2507345
E-mail: info@sancharakaudawa.lk www.sancharakaudawa.lk

ஏற்பாட்டாளர்கள் | ஊடக ஆதரவாளர்கள் | நிகழ்ச்சி முகாமையாளர்கள் | நிகழ்ச்சி நடைபெற இடம் தந்து உதவியவர்கள்

Slaito
Sri Lanka Association of Inbound Tour Operators
Ministry of Economic Development
sri lanka
BMICH

## வவுனியாவில் இடர் வரைபடம் தயாரிப்பு

வவுனியா, மே 16

வவுனியா இடர் வரைபடத்தை தயாரிக்கும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ குழுவினர் ஈடுபடவுள்ளனர்.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா கிறிஸ்து குளப்பகுதியில் இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என். சூரியராஜ் தலைமையில் வவுனியா இடர் வரைபடம் வரையப்படவுள்ளது.

இந்த இடர் வரைபடம் அனர்த்த பிரதேசங்கள், பாதுகாப்பு மிக்க பிரதேசங்கள், இடைதங்கல் முகாம்கள் உட்பட பல்வேறு விடயங்களை தெளிவுபடுத்தும் வரைபடமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. "FOSDOO" நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ந-402)

**சீமெட் வைத்தியசாலை சேவைகள் (வரையறுக்கப்பட்ட) நிறுவனம்**
(A Ceyline Group Company)

**வேலைவாய்ப்பு**

1) ஆய்வுகூட உதவியாளர்கள்
- அடிப்படைத்தகைமைகள்
  - க.பொ.த (A/L) கணித/விஞ்ஞான பாடத்தில் சித்தியுடையவர்கள்
  - முன் அனுபவம் எதிர்பார்க்கப்பட மாட்டாது

2) உதவியாளர்கள் (ஆண்கள்)
- க.பொ.த. (O/L)
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்

தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளமும், மேலதிக சலுகைகளும் வழங்கப்படும்.

தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
**முகாமையாளர், சீமெட் வைத்தியசாலை சேவைகள் (பிரைவேட்) லிமிட்.**
**இல.550, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
OR thaya@ceymed.lk
Tel: 071 4535 258
(C/9424)(10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி யோகநாதன்



கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வராணி யோகநாதன் (முன்னாள் ஆசிரியை) 12.05.2013 இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் க.வைத்திலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்தியர் இ.அம்பலவாணர்-செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், அ.யோகநாதனின் அன்பு மனைவியும், பிரசாந், ஜெய்சாந் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்காந்தன், ஞானலிங்கம் மற்றும் தியாகலிங்கம், வரதலிங்கம், கணேசலிங்கம், செல்வமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரன், யோகதீஸ்வரன்,யோகபரன், யோகாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி 15.05.2013 ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **வை.சிவசிதம்பரம் (தாய்)**
**வைத்தியர் வை.வரதலிங்கம் (சகோதரன்) 0770871638**

அளவெட்டி. (36552) (10-6)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் தங்கராஜா (மல்லாகம்-அச்சுவேலி-கனடா)



ஐயனார் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி,கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் தங்கராஜா 11.05.2013 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னத்தங்கச்சி (மல்லாகம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-கண்மணி (அச்சுவேலி) தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற தங்கராஜாவின் ஆருயிர் மனைவியும், சசிகுமார் (Teknion), காலஞ்சென்ற விஜேந்திரகுமார் மற்றும் வகிந்தகுமார் (Allan Window), பகிந்தகுமார் (கனடா)ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சங்கீதா, தீபிகா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தவரத்தினமணி(இளைப்பாறிய ஆசிரியை-இலங்கை), நாகரட்ணம், முத்துலிங்கம், கனகரட்ணம், இராசலட்சுமி, காலஞ்சென்ற செல்வகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கயிலைநாதர் மற்றும் விமலேஸ்வரி, காலஞ்சென்ற கமலாலட்சுமி மற்றும் ராதா, சிவகணேசன் காலஞ்சென்ற ரஜீந்திரன் மற்றும் தங்கமலர், காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் ஜெயச்சந்திரன் (இலங்கை), காலஞ்சென்ற புஸ்பமலர்(பேபி) மற்றும் பேரின்பராஜா(சுவிஸ்), புஸ்பராஜா(பிரான்ஸ்), காந்தராஜா, ரவீந்திரநாதன், பிரேமசந்திரன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,விஜே, விகாஷ், விதுஷா, கிருத்திக், அக்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.05.2013 வெள்ளிக்கிழமை பார்வைக்காக மாலை 5.00 மணியில் இருந்து இரவு 9.00 மணிவரை Highland Funeral Home (Warden&Sheppard) 3280 Sheppard Ave. East,Scarborough, ON.M1T 3K3 எனும் முகவரியில் வைக்கப்பட்டு தொடர்ந்து 18.05.2013 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று,தகனக் கிரியைக்காக Frost Lawn Crematorium(Yonge & Sheppard) 4570 Yonge Street,Toronto,ON.M2N 5L6 இக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
சசிகுமார் - 905 472 4955
வகிந்தகுமார் - 416 618 4955
பகிந்தகுமார் - 647 856 5896
தவரத்தினமணி(இலங்கை)- 94 21 321 9259
ஜெயச்சந்திரன் - 94 21 321 2599

**ஐயனார் கோயிலடி,**
**மல்லாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(36551)(5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தரமான மகிழ்ச்சிக்கு எது அவசியம்

*நிரந்தரமான மகிழ்ச்சி வேண்டுமானால், நாம் அந்தக்கரணங்களைச் சுத்தி செய்து ஆத்மீக வழியைப் பின்பற்றி, உலகளாவிய அன்பைப் பெருக்க வேண்டும்.*

*விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் எமக்குத்தரும் பலவாறான வசதிகளால் நாம் நிரந்தரமான சந்தோஷத்தை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இன்பத்தை உணரும் உடம்பும் இன்பத்தை ஊட்டவல்ல பொருள்களும் இரண்டுமே தோன்றி மறைகின்ற நிரந்தரமற்றவையாகும்.*



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது
**சாயி சிந்தனை**

## உணவு செயல்திட்ட செயலமர்வு

பாடசாலை உணவுச் செயற்றிட்டத்துக்கான பெறுபேற்று ஆய்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை உணவு செயற்றிட்டம் கடந்த 10 வருடங்களாக வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பெறுபேறுகள் தொடர்பான ஆய்வொன்றை உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் நடத்த உத்தேசிக்கப்பட்டு இதற்கான முன்னாயத்த செயலமர்வாக இந்தச் செயலமர்வு அமையும். செயலமர்வில் வலய பாடசாலை உணவுச் செயற்றிட்ட இணைபாளர் மற்றும் கோட்டத்தின் அபிவிருத்தி உதவியாளரும் கலந்து கொள்வதுடன் இச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய மேலதிகாரிகளும் கலந்து முற் திட்டங்களை தீட்டவுள்ளனர். (ந-402)

# வெள்ளவாய்க்கால் புனரமைப்புக்கான நிதி திரும்பிச் செல்லும் அபாயம்

## அதற்கான பணிகள் பூர்த்தியடையாததால்

யாழ்ப்பாணம்,மே 16

வடலியடைப்பு வெள்ளவாய்க்கால் இடர்முன்தடுப்பு செயற்றிட்டத்துக்கு முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட 2.5 மில்லியன் ரூபா நிதி, குறித்த வேலை நிறைவுபெறாததால் திரும்பிச் செல்லவுள்ளதாக சபையின் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்தார்.

4.6 மில்லியன் ரூபா பெறுமதியான வடலியடைப்பு வெள்ளவாய்க்கால் புனரமைப்பில் முதல் கட்டமாக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக வலி.தென்மேற்கு பிரதேச சபை நியமிக்கப்பட்டது. பிரதேச சபையால் தனியார் ஒப்பந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

குறித்த ஒப்பந்தத்தை பொறுப்பேற்ற நிறுவனம் 3 கம்பிகள் வைத்து அமைக்க வேண்டிய 'கொன்கிறீட்டை' 2 கம்பிகளை வைத்து அமைத்துள்ளது. இதனை பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் இனங்கண்டு தலைவருக்கு தெரியப்படுத்தினர். இதனையடுத்து பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் குறித்த தவறு உறுதிப்படுத்தப்பட்டு, சபைத் தலைவரால் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதனை சபை உறுப்பினர்கள் நிராகரித்தனர். குறித்த தவறு மட்டும் சீர் செய்யப்பட்டு புனரமைப்புச் செய்ய முடியாதெனவும் முற்று முழுதாக அதற் கான பணிகள் மீள மேற்கொள்ள வேண்டும் என்றும் சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் விடாப்பிடியாக இருந்தனர். இதனால், இந்த விடயம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டு அவரது அறிக்கையில், குறித்த தவறை மட்டும் சீர் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டதாக தலைவர் தெரிவித்தார். இதனையும் சபை உறுப்பினர்கள் நிராகரித்துள்ளனர். இதனால் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நிறைவடைய வேண்டிய குறித்த வேலை இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. இதன் காரணமாக குறித்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீளத் திரும்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

"சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரதும், பிரதம தொழில்நுட்ப உத்தியோகத்தரினதும் அறிக்கைகளை ஏற்று பணிகளை நடைமுறைப்படுத்த சம்மதித்தால் மாத்திரமே நிதி திரும்புவதை தடுக்க முடியும் என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-5-15)

## இரு தினங்களின் பின் மீண்டும் சேவைக்கு வந்த வடதாரகை II

யாழ்ப்பாணம்,மே 16

கடந்த திங்கள், செவ்வாய் இரு தினங்களிலும் நெடுந்தீவுச் சேவையில் ஈடுபடாத நிலையிலுள்ள வடதாரகை II படகு நேற்று புதன்கிழமை மீண்டும் சேவைக்கு வந்தது.

படகுக்குத் தேவையான எரிபொருளை வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்காததாலேயே வடதாரகை இரண்டு தினங்கள் சேவையை மேற்கொள்ளவில்லை.

குறித்த படகு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் இன்னமும் கடற்படையினர் அதில் கடமையில் உள்ளதாகத், தகவல்கள் கசியும் நிலையில், இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் எஸ்.சுதாகருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, வடதாரகை இன்னமும் எம்மிடம் கையளிக்கப்படவில்லை. படகுச் சேவையில் ஈடுபடுவதற்கு டீசல் வழங்காமையே சேவை இடம்பெறாமைக்குக் காரணம் என்பது தவறு. தொடர்ந்தும் கடற்படையினர் வசமே வடதாரகை உள்ளது என்று தெரிவித்தார். எனினும் நேற்றைய தினம் சேவைக்கான எரிபொருளை வீதி அபிவிருத்தி அதிகார சபையே வழங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-7)


**உடனடி விற்பனைக்கு**

பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகில் பாவித்த நிலையிலுள்ள கடை முன்பக்க, உள்பக்க தரமான அலுமினிய பிற்றிங், கண்ணாடித் தட்டுக்கள் என்பன உடனடி விற்பனைக்கு.

தொடர்புக்கு- 0727 359535

APCgraphi

**இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS)**
**மட்டுப்படுத்தப்பட்ட / திறந்த போட்டிப்பரீட்சை**

துறைசார் நிபுணர்களினதும் பரீட்சை மதிப்பீட்டாளர்களினதும் வழிகாட்டலில்

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

| | | |
|---|---|---|
| பிரிவு (I) | ஒவ்வொரு ஞாயிறும் | பி.ப 1 மணி - 5 மணிவரை |
| பிரிவு (II) | ஒவ்வொரு புதன்கிழமையும் | பி.ப 4.30 - 7 மணிவரை |

**ஆரம்பம்: 22.5.2013 புதன்கிழமை**

இப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் பின்வரும் இடங்களிலும் நடைபெறவுள்ளன. இந்த நிலையங்களில் முன்கூட்டியே பதிவை மேற்கொள்ளவும்.

| | |
|---|---|
| வவுனியாவில் | C.B.A கல்வி நிலையம், வைரவப்புளியன்குளம். |
| மன்னாரில் | I.D.M. NETIONS CAMPUS பிரதான வீதி, HNBமுன் |
| சித்தன்கேணியில் | Subra கல்வி நிலையம் |
| நெல்லியடியில் | Sigma Solution (செலான் வங்கி முன்) |

T.P:075 4164564 (C/9428) (10,6)

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,**

**செய்முறைப் பரீட்சை (சங்கீதம்/ நடனம்)**

- இசைமாணி/ நடனமாணி - 1ஆம், 2 ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருடத்தேர்வு
- கலைமுதற் தேர்வு: 2010
- பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி - I - 2010
- பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி - II - 2009 & 2010

மேற்படி கற்கை நெறிகளில் சங்கீதம் மற்றும் நடன பாடத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை 23.05.2013 (வியாழக்கிழமை) தொடக்கம் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகள் ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.** (சி/9430) (45.6.)


## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை நாகம்மா



கல்லைவேம்படி,சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நாகம்மா நேற்று (15.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், கந்தசாமி,சின்னராசா, தவச்செல்வம்,முருகமூர்த்தி,கிருஸ்ணமூர்த்தி, மோகனதாஸன், சண்முகராசா, பரமேஸ்வரி, பத்மநாதன், தவறாணி, தவறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,நாகேஸ்வரி, விஜயலக்சுமி, சின்னத்துரை, தவறஞ்சினி, விமலாதேவி, மஞ்சுளாதேவி, சுகந்தினி, தயானந்தன், தயாஸ்காந்தன், ஜெயதீஸ்வரன், கிருபாநந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லை வேம்படி,சுழிபுரம். (36557)(5.6) தகவல்: குடும்பத்தினர்.





**செல்வம்ஸ் பற்றறி சேல்ஸ் அன் சேர்விஸ்**

இன்று (16.05.2013) வியாழக்கிழமை நிகழும் மங்கலகரமான விஜய வருடம் வைகாசி மாதம் 2 ஆம் நாள் பூச நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 7.25 மணிமுதல் காலை 8.53 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில்

**திரு. S.D.R அருட்பிரகாசம் (FCMA)**
**MANAGING DIRECTOR**
**E.B.CREASY & Co Ltd**

அவர்களால் திறந்து வைக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். மேலும் திறப்பு விழா அன்று 3K பற்றறி கொள்வனவில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுக்கு விலைக்கழிவுடன் குடை பரிசாக வழங்கப்படும். மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களை எமது புதுக்கடைத் திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்)

இல.756, கே.கே.எஸ் றோட், தட்டாதெரு சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

செல்வம்ஸ் உரிமையாளர் 021 222 2642

(36553)(10,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனே அதிரடி கலங்கியது கொல்கத்தா




சென்னை, மே.16

கொல்கத்தாவை 7 ஓட்டங்களால் வீழ்த்தியது புனே. ஐ.பி.எல். தொடரின் 65 ஆவது போட்டி ராஞ்சி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் புனே வொரியஸ் அணியும் கொல்கத்தா அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி களத் தடுப்பில் ஈடுபட்டது. இதன்படி புனே வொரியஸ் அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக உத்தப்பாவும், பிஞ்சும் களமிறங்கினர். இருவரும் சிறந்த அடித்தளத்தை அணிக்கு பெற்றுக்கொடுத்தனர். அணி 41 ஓட்டங்களைப் பெற்றபோது உத்தப்பா (25) சேனநாயக்காவின் சுழலில் சிக்கினார். பிஞ்சுடன் இணைந்தார் பண்டி. இருவரும் இணைந்து அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க புனேயின் ஓட்ட வேகம் சரமாரியாக எகிறியது. அணி 97 ஓட்டங்களைப் பெற்ற போது பிஞ்ச் அரைச்சதத்தை தவறவிட்ட நிலையில் 48 ஓட்டங்களுடன் பாலாஜியினால் வெளியேற்றப்பட்டார். பண்டியுடன் இணைந்தார் யுவராஜ்சிங். இருவரும் இணைந்து அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தனர். இறுதியில் இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து புனே அணி 170 என்ற கடினமான இலக்கை கொல்கத்தாவுக்கு நிர்ணயித்தது. பண்டி (66), யுவ ராஜ்சிங் (30) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் கொல்கத்தா அணி சார்பில் பாலாஜி, சேனநாயக்க, கலிஸ் தலா ஒவ்வொரு இலக்குகளைச் சரித்தனர்.

171 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடியது கொல்கத்தா. இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் பிஸ்லா ஆட்டமிழக்க அடுத்து வந்த கலிஸும் ஒரு ஓட்டத்துடன் பனலின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த கம்பீரும் 12 ஓட்டங்களுடன் பண்டியின் பந்தில் நடையைக் கட்ட கொல்கத்தா அணி வெறும் 29 ஓட்டங்களுக்கு 3 முக்கிய இலக்குகளை இழந்து தடுமாறியது.

எனினும் அடுத்து இணைந்த யூசுப்பதான், டென்டொசக்ட் இணை அணியின் இக்கட்டை உணர்ந்து நிதானமாகவும் அதிரடியாகவும் ஓட்டங்களைக் குவித்தது.

யூசுப் பதான் 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களை விளாசினார். பதிலுக்கு மறுமுனையில் டென்டொசக்டும் 30 பந்துகளில் 42 ஓட்டங்களைக் குவிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை 127 எட்டியது. இந்த இணையின் அதிரடி புனே அணியை நிலைகுலைய வைத்தது. இந்த இணையை பிரித்தால் மட்டுமே புனேயின் வெற்றி சாத்தியம் என்ற நிலையில் டென்டொசக்ட் 42 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். அடுத்து வந்த திவாரியும் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழக்க மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பதான் 72 ஓட்டங்களுடன் களத்திலிருந்து வெளியேற கொல்கத்தாவின் வெற்றிவாய்ப்பு கனவானது. இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 163 ஓட்டங்களை மட்டுமே கொல்கத்தா அணியால் பெறமுடிந்தது. பந்து வீச்சில் புனே அணி சார்பில் பர்னல் 2 இலக்குகளையும், பிரவீன்குமார், பண்டி தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக புனே வொரியர்ஸ் அணியின் பண்டி தெரிவானார். (16)

# ராஜஸ்தானை " வீழ்த்தியது மும்பை




**முன்வரிசை இலக்குகள் சரமாரியாக சரிக்கப்பட 88 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகளை இழந்தது ராஜஸ்தான் அணி.**

சென்னை, மே 16

ராஜஸ்தானை 14 ஓட்டங்களால் வீழ்த்தியது மும்பை அணி. ஐ.பி.எல் தொடரின் 66 ஆவது போட்டி நேற்று மும்பையில் இடம்பெற்றது. இதில் ராஜஸ்தான் அணியும் மும்பை அணியும் மோதின நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி சார்பில் மக்ஸ்வெல், தாரி இருவரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். இருவரும் அதிரடியில் இறங்க மும்பையின் ஓட்ட வேகம் ஆரம்பம் முதலே எகிறத் தொடங்கியது. நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 25 ஓட்டங்களை எட்டிய போது மக்ஸ்வெல் (23) வொட்சனின் பந்தில் வீழ்ந்தார். தாரியுடன் இணைந்தார் கார்த்திக் மறுமுனையில் தாரி 1 சிக்ஸர், 8 பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களை குவித்தார். அணி 100 ஓட்டங்களைக் கடந்த நிலையில் கார்த்திக் (21) ஓட்டங்களுடன் ரம்பியின் பந்தில் சாம்சனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்தார் ரோகித் சர்மா அவரும் 14 ஓட்டங்களுடன் பல்க்னரின் பந்தில் வொட்சனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க, ராயுடு(7) ஜோன்சன்(2) அடுத்தடுத்து ஆடுகளம் விட்டகன்றனர். இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மும்பை அணி 8 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களை ராஜஸ்தானுக்கு எதிராக நிர்ணயித்தது. பந்து வீச்சில் ராஜஸ்தான் அணிசார்பில் பல்க்னர், வொட்சன் தலா 2 இலக்குகளையும் ரம்பி, கூப்பர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர் 167 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடியது ராஜஸ்தான். அணி சார்பில் டிராவிட், ரஹானே இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்திலேயே டிராவிட் ஆட்டமிழக்க, ரஹானேயுடன் இணைந்தார் பல்க்னர். இருவரும் பெரிதாக சோபிக்காத நிலையில் ரஹானே (4), பல்க்னர் (12), குல்கர்ணியின் பந்தில் பவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். சாம்ஸன் (4), ஜோன்சனின் பந்தில் ஓஜாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். முன்வரிசை இலக்குகள் சரமாரியாக சரிக்கப்பட 88 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகளை இழந்தது ராஜஸ்தான் அணி. பின்னர் பின்னி, கொட்ஜ் இருவரும் சிறப்பாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்தனர். இவர்களது ஆட்டத்தின் உதவியுடன் ராஜஸ்தான் அணியால் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. பின்னி (37) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்திலிருந்தார். பந்துவீச்சில் மும்பை அணிசார்பில் ஜோன்சன், குல்கர்ணி தலா இரு இலக்குகளையும், ஹர்பஜன்சிங், மலிங்க, ஓஜா தலா ஒரு இலக்கையும் சரித்தனர். ஆட்ட நாயகனாக மும்பை அணியின் தாரி தெரிவு செய்யப்பட்டார். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டத்தை முடித்து வைக்கும் திறன் டோனியிடமே உள்ளது

## புகழ்கின்றார் டேவிட் மில்லர்

'20/20' மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆட்டத்தை முடித்து வைக்கும் திறன் தற்போது டோனிக்குத் தான் உள்ளது என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் மில்லர்.

கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியில்விளையாடும்டேவிட் மில்லர். பெங்களூர் அணிக்கு எதிராக அவர் அதிரடியாக விளையாடி சதம் அடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச்சென்றார்: அதுகுறித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த சில ஆண்டுகளாக டோனி மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறார். ஆட்டத்தை முடித்து வைப்பதில் அவரது செயற்பாடு நன்றாக இருக்கிறது. சர்வதேச போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை முடித்துவைக்கும் திறன் கொண்டவராகக் காணப்படுகிறார்.

குளுஸ்னர் எனக்கு துடுப்பாட்டப் பயிற்சி அளித்தார். இது எனது அதிர்ஷ்டம். அவரது துடுப் பாட்ட நுணுக்கங்கள் எனக்கு அதிக நம்பிக்கை அளித்தது. இதனால் என்னால் அதிரடியாக விளையாட முடிந்தது." என்று தெரிவித்தார்.

மில்லர் பெங்களூர் அணிக்கு எதிராக 38 பந்துகளில் 101 ஓட்டங்கள் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

# டெல்லியை வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்



இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 64ஆவது ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 33 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென்னை எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக்காக 7.2 பந்துப்பரிமாற்றங்களில் 61 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் மெதுவான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

துடுப்பாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக மகேந்திரசிங் டோனி 35 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும், முரளி விஜய் 23 பந்துகளில் 31 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 26 பந்துகளில் 26 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 17 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டெல்லி டேர்டெவில்ஸ் அணி சார்பாக உமேஷ் யாதவ் 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், வன்டர் மேவா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சேவாக்கை முதலாவது பந்துப் பரிமாற்றத்தின் இரண்டாவது பந்திலேயே இழந்த அவ்வணி, தொடர்ந்தும் இலக்குகளை இழந்து தடுமாறியது. அணித்தலைவர் டேவிட் வோணர் தனித்து நின்று போராடிய போதிலும், ஏனைய வீரர்கள் சிறப்பாக ஆடாததால் அவரின் இலக்கு வீழ்த்தப்பட்டவுடன் டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் தோல்வி உறுதியானது.

துடுப்பாட்டத்தில் டெல்லி டெயாடெவில்ஸ் அணி சார்பாக டேவிட் வோணர் 37 பந்துகளில் 44 ஓட்டங்களையும், ஜொஹான் போத்தா 20 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக அல்பி மோர்க்கல் 32 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், டுவைன் பிராவோ, ரோகித் சர்மா, ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மகேந்திரசிங் டோனி தெரிவானார். (ற)

# எதிர்காலத்தில் 10 அணிகள் ஐ.பி.எல்லில்

எதிர்காலத்தில் ஐ.பி.எல். தொடரில் 10ஆவது அணியை சேர்ப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்துள்ள ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா, இந்த ஆண்டு வரியாக மட்டும் 950 கோடி இந்திய ரூபாவை பி.சி.சி.ஐ. செலுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஐ.பி.எல். 6ஆவது தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுக்லா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது,

"உலகம் முழுவதும் உதைபந்தாட்டத்துக்கு அடுத்த நிலையில் ஐ.பி.எல். ஆட்டங்கள் புகழ் பெற்று விளங்குகிறது. இந்த ஆட்டங்கள் 198 நாடுகளில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது. ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் எதிர்காலத்தில் 10ஆவது அணியை இணைத்துக் கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்படுகின்றது" என்று தெரிவித்தார். (ற)

# இந்தியாவுக்கெதிரான தொடரை வெல்வோம்



இந்திய அணிக்கெதிரான தொடரை கைப்பற்றுவோம் என்று தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளர் ஸ்டெயின் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இறுதியில் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சென்று 3 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. இதுகுறித்துக் கருத்துக் கேட்கும்போதே ஸ்டெயின் இவ்வாறு தெரிவித்தார். தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் சன்ரைசர்ஸ் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளராகத் திகழும் ஸ்டெயின் இதுகுறித்து மேலும் கூறுகையில்,

"இப்போது எங்கள் டெஸ்ட் அணி சிறப்பாக உள்ளது. உள்ளூர் மைதானங்களில் மிகச்சிறப்பாக விளையாடுகிறோம். எனவே, இந்தியாவை வெல்ல முடியும். தென்னாபிரிக்காவுக்கு வந்து எம்மை வெற்றிகொள்வது கடினமாக இருக்கும்.

இந்திய ஆடுகளங்களை விட, தென்னாபிரிக்க ஆடுகளங்களில் இலக்குகள் விரைவில் விழும். இது இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு சற்று கடினமாக இருக்கும். இந்திய அணியில் மிகச் சிறந்த வீராகள் சிலர் உள்ளனர் என்பதை நான் மறுக்கவில்லை. ஷிகார் தவான் திறமையாக துடுப்பெடுத்தாடுகின்றார். சச்சின் மிகத் திறமையானவர். அவருக்குப் பந்துவீசுவது மிகவும் கடினமாக உள்ளது" என்று தெரிவித்தார்.

இந்தியா 2010-11ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா சென்று விளையாடிய டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)

# போர்மியுலா வன் தொடரில் பெர்னான்டோ வென்றார்




ஸ்பெயின் நாட்டின் கெட்டலுன்யா விளையாட்டு திடலில் இடம்பெற்ற ஃபோர்மியுலா வன் கார் பந்தய போட்டித்தொடரின் 5 ஆம் சுற்றில் பெர்ராரி அணியைச் சேர்ந்த பெர்னான்டோ அலொச்சோ வெற்றி பெற்றார். இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை முறையே லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் மற்றும் பெர்ராரி அணியின் பிலிப்பே மெஸ்சா ஆகியோர் தம் வசப்படுத்தியிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தகுதிகாண் சுற்றில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்த மெர்சடீஸ் அணியினர் போட்டியில் தமது திறமையை வெளிப்படுத்த தவறியிருந்தனர். தொடர்ச்சியாக தகுதி காண் சுற்றில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப் படுத்தி வரும் மெர் சடீஸ் அணியின் கார்களுடைய ரயர்கள் போட்டி இடம்பெறும் வேளையில் முறையாக சூழ்நிலைக்கு பொருந்தாமை மிகப்பெரும் பின்னடைவாக அமைந்தது. வெப்பமான காலநிலை போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. விசேடமாக பயன்படுத்தப்பட்ட ரயர்கள் விரைவில் தவாளிப்புகளை இழக்க தொடங்கியிருந்தன. இதன் காரணமாக வழமையாக இடம்பெறும் 2 அல்லது 3 பிற் நிறுத்தல்களுக்கு மேலதிகமாக இந்த போட்டியில் சில அணியினர் 4 பிற் நிறுத்தல்களையும், டயர் மாற்றல்களையும் மேற்கொண்டனர்.



ஃபோர்மியுலா வன் போட்டித் தொடரின் அடுத்த சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை மொனாகோ நாட்டின் மொண்டேகார்லோ நகரில் இடம்பெறவுள்ளது. (ற)

# புற்றுநோயைக் கண்டறியும் 'யூவி'யின் இலவச மையம்



புற்றுநோயைக் கண்டறிவதற்கான இலவச மையம் ஒன்றை இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங் ஆரம்பித்துள்ளார்.

புற்றுநோய் பாதிப்பில் இருந்து போராடி மீண்ட கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் தீவிர பயிற்சிக்குப் பின்னர் தற்போது இந்திய அணியிலும் இடம்பிடித்துள்ளார்.

அத்தோடு நின்றுவிடாது மக்களிடையே புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகிறார்.

இந்தநிலையில் ஜார்க்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் இலவச புற்றுநோய் கண்டறியும் மையம் ஒன்றை யுவராஜ் சிங் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தார்.

இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய யுவராஜ் சிங்,

"புற்றுநோய் வந்தால் குணமாகாது, இறந்துவிடுவோம் என்று மக்கள் நினைக்கின்றனர். ஆனால் அது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, உடனடியாக சிகிச்சைகளை மேற்கொண்டால் குணமடையலாம். இந்த இலவச பரிசோதனை மையம் குறித்து உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்துங்கள்" என்று தெரிவித்தார்.

அப்போது அவரிடம் ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க திட்டம் உள்ளதா? என்று கேட்டபோது, "எதிர்காலத்தில் அதுபற்றி முடிவு செய்வேன். ஆனால், தற்போது இந்த மையம் நோயைக் கண்டறிவதையும் சேவையை மட்டுமேசெய்யும்" என்றுபதிலளித்தார்.

யுவராஜ் சிங்கின் 'யூவி கேன்' அமைப்புடன் இணைந்து அப்போலோ கிலனீகிள்ஸ் புற்றுநோய் மருத்துவமனை இலவச பரிசோதனை முகாம்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டு முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 16
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு

**எல்லே**
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: ஜெயபுரம் மகா வித்தியாலயம்
2ஆம் இடம்: கனகபுரம் மகா வித்தியாலயம்
3ஆம் இடம்: முழங்கவில் மகா வித்தியாலயம்


**கபடி**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: சிவநகர் அ.த.க. பாடசாலை
2ஆம் இடம்: பூநகரி மகா வித்தியாலயம்
3ஆம் இடம்: உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
2ஆம்இடம்: சிவநகர் அ.த.க. பாடசாலை
3ஆம்இடம்: கல்வெட்டிதிடல் நாகேஸ்சர வித்தியாலயம்

**வலைப்பந்தாட்டம்**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம்: இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
2ஆம்இடம்: அக்கராயன் மகா வித்தியாலயம்
3ஆம் இடம்: புனித திரேசா பெண்கள் கல்லூரி
**17 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம்: புனித திரேசா பெண்கள் கல்லூரி
2ஆம்இடம்: அக்கரயன் மகா வித்தியாலயம்
3ஆம் இடம்: இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம்: வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
2ஆம்இடம்: இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
3ஆம்இடம்: வேரவில் இந்து மகா வித்தியாலயம்

**உதைபந்தாட்டம்**
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம்: சிவநகர் அ.த.க. பாடசாலை
2ஆம் இடம்: முழங்காவில் மகா வித்தியாலயம்
3ஆம் இடம்: உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

**கரப்பந்தாட்டம்**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம்: பாரதி வித்தியாலயம்
2ஆம்இடம்: தர்மபுரம் மகா வித்தியாலயம்
3ஆம்இடம்: வேரவில் இந்து மகா வித்தியாலயம்
**17 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம்: பாரதி வித்தியாலயம்
2ஆம் இடம்: கிளிநொச்சி இந்துக் கல்லூரி
3ஆம்இடம்: இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் வேரவில் இந்துக் கல்லூரி
2ஆம் இடம்: உருத்திரபுரம் மகா வித்தியலயம்
3ஆம் இடம்: பளை றோ.க. த.க.பாடசாலை. (ற-23)

(தொடரும்)



வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் முதலாமிடத்தைப் பெற்ற கிடாச்சூரி வேப்பங்குளம் அ.த.க.பாடசாலை அணியினர். (ற-23-422)

முல்லை. மாவட்டப் பாடசாலைகளுக்கிடையான உதைபந்து

## மூன்று பிரிவுகளிலும் விசுவமடு பாரதி சம்பியன்

புதுக்குடியிருப்பு,மே.16
முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆண்கள் பிரிவில் அனைத்து வயதுப் பிரிவுகளிலும் விசுவமடு பாரதி வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

முதலில் இடம் பெற்ற 15 வயதுப் பிரிவினருக்குகான இறுதியாட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலயமும், செம்மலை மகா வித்தியாலயமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இவ்வாட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் பாரதி வித்தியாலயம் வென்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தினை மாங்குளம் மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலயமும் கற்சிலைமடு மகா வித்தியாலயமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இவ்வாட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தத்தமது அணிகளே வெற்றிபெறவேண்டும் என்ற வேகத்துடன் போட்டியிட்டனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் விசுவமடு பாரதி வித்தியால அணி மேலும் ஒரு கோலைப் பெற்று முன்னிலைக்கு வந்தது. இதனையடுத்து அதிரடியாக ஆடிய கற்சிலை மடு மகா வித்தியாலய அணியினர் தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபித்து ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தினை சமநிலைப்படுத்தினர். ஆனால் விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தினர் மேலும் ஒரு கோலைப் பெற்று தமது அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் 3:2 என்ற கோல் கணக்கில் விசுவமடு பாரதி வித்தியாலய அணியினர் வென்று சம்பியனாகினர்.

இப்பிரிவில் மூன்றாமிடத்தினை உடுப்புக்குளம் தமிழ் மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 19 வயதுப்பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் விசுவமடு பாரதி வித்தியாலய அணியை எதிர்த்து கற்சிலைமடு வித்தியாலயம் மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் கோல் எதனையும் பெறாத நிலையில் வழங்கப்பட்ட சமநிலைத் தவிர்ப்பு உதையின் மூலம் 5:4 என்ற கோல் அடிப்படையில் பாரதி மகாவித்தியாலயம் வென்று சம்பியனாகியது.

இதில் மூன்றமிடத்தினை முல்லைத்தீவு மகாவித்தியாலம் பெற்றது.

(ற-400-433)



வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகிய வ/நெடுங்கேணி மகா வித்தியாலய அணி. (ற-400)

யாழ்.மாவட்ட பாடசாலைக்கிடையான ஹொக்கி

## யாழ்ப்பாணக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு

யாய்ப்பாணம், மே 16
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஹொக்கித் தொடரில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. அதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்று சமநிலையில் இருந்தன. அதையடுத்து வழங்கப்பட்ட 5 சமநிலை தவிர்ப்பு உதைகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ற-23)

## இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி

யாழ்ப்பாணம், மே 16
யாழ்.மாவட்ட கரப்பந்தட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி யாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பண்ணாலை கணேசா விளையாட்டுக் கழகம் மோதியது. 5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணிக்கும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம் பெறவிருந்த அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மைதானத்துக்கு சமூகம் தராமையால் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ற-23)

## மாவட்ட மட்டத்திலான கராத்தே முடிவுகள்



யாழ்ப்பாணம், மே 16
யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரால் நடத்தப்பட்ட மாவட்ட மட்ட கரத்தே போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**குமித்தே போட்டியில் வெற்றி பெற்றவர்கள்**

**50 கிலோ பிரிவு**
1ஆம் இடம் தயாநிதி
2ஆம் இடம் பேரின்பராஜ்
3ஆம் இடம் நிமலராஜ்
4ஆம் இடம் நீக்களஸ்

**55 கிலோ பிரிவு**
1ஆம் இடம் கஜேந்திரன்
2ஆம்இடம் யசோதரன்
3ஆம் இடம் யனுசன்
4ஆம் இடம் கிசோ

**60 கிலோபிரிவு**
1ஆம் இடம் சிவராஜா
2ஆம் இடம் பிரசாந்
3ஆம் இடம் விஜயராஜா
4ஆம் இடம் டிஸ்மன்

**67 கிலோ பிரிவு**
1ஆம் இடம் சீறிதரன்
2ஆம் இடம் சதீஸ்கரன்
3ஆம் இடம் யண்சன்
4ஆம்இடம் தர்தராசா

**65 கிலோ பிரிவு**
1ஆம் இடம் விஜந்திரன்
2ஆம்இடம் தனுஸ்காந்
3ஆம் இடம் விமலராஜ்
4ஆம் இடம்தனுஸ்சன்

**84 கிலோ பிரிவு**
1ஆம் இடம் விஜயகணேஸ்
2ஆம்.இடம் சாந்தராஜ்
3ஆம்இடம் துளசிதாஸ்
4ஆம் இடம் எடமன் றீகன்

**84 கிலோ பிரிவு**
1ஆம் இடம் பிரபகரன்
2ஆம் இடம் ஜெயந்தன்
3ஆம் இடம் பார்த்தீபன்
4ஆம் இடம் றஞ்ஜித் சைலேந்திரா குமார்.

(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி அமைப்புகள் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## உகண்டாவில் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, மே 16
உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.
இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது;
உள்ளூர் ஆட்சி அமைப்புக்களையே பயங்கரவாதிகள் இலக்கு வைத்தனர்.
அவற்றின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றுவதன் மூலம் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.
இதன் ஒரு கட்டமாகவே முன்னாள் யாழ். மாநகர சபை மேயர் சுட்டுக்கொல்லப்பட்டார்.
நாம் தற்போது பயங்கரவாதத்துக்கு முடிவு கட்டி உள்ளூர் ஆட்சியை வழமைக்குக் கொண்டு வருகிறோம். இதன் மூலமே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.
உள்ளூராட்சி மன்றங்களூடாகவே அபிவிருத்தி மக்களை சென்றடைய முடியும்.
இதுவே நடைமுறைக்கு சாத்தியமானதுமாகும்- என்றார்.
இதேவேளை சுமார் 28 வருடங்களுக்கு முன்னர் மகா போதிக்கு அண்மையில் 146 அப்பாவி பொது மக்கள் பயங்கரவாதத்தால் பலியெடுக்கப்பட்டனர். ஆனால் அப்போது எந்தவொரு மனித உரிமை இயக்கமும் இதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை என்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.
இதேவேளை; அங்கு உரையாற்றிய உகண்டா ஜனாதிபதி இலங்கையின் செயற்பாடுகளை தாம் பாராட்டுவதாகவும் எதிர்வரும் நவம்பரில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் தமது நாடு நிச்சயம் பங்குபற்றும் என்றும் தெரிவித்தார். (த-16)

# ஏட்டிக்குப் போட்டியாக நேற்று ஆர்ப்பாட்டங்கள்



எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தின் போது...

கொழும்பு, மே 16
மின் கட்டண அதிகரிப்பை அரசு உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் அரசை எதிர்த்தும், மின் கட்டண அதிகரிப்பைக் குறைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்து அரசுக்கு ஆதரவாக ஆளும்கட்சியும் கொழும்பில் மேற்கொண்ட இருவேறு போராட்டங்களால் ஏற்பட்ட கடும் வாகனநெரிசலால் தலைநகரம் நேற்று மாலை முடங்கியது.
இரு போராட்டங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதால் கொழும்பு கோட்டை மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட வாகன நெரிசலால் கொழும்பின் அனைத்துப் பகுதிகளிலும் பெரும் வாகன நெறிசல் ஏற்பட்டது.
எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மேற்கொண்ட போராட்டத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும், 40 தொழிற்சங்கங்களும் பங்கேற்றன.
இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது பொரளை கெம்பல் பார்க்கில் பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகி, கோட்டை வரை சென்றது.
இந்தப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயகக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, மௌபிம மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்றன. எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஜோன் அமரதுங்க, சஜித் பிரேமதாஸ, தயாசிறி ஜயசேகர, தயா கமகே, அஜித் பி பெரேரா உள்ளிட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா ஆகியோர் உள்ளிட்ட எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பங்கேற்றனர்.
இதேவேளை, வன ஜீவிகள் பாதுகாப்பு அமைச்சர் விஜித் விஜித்த முனி சொய்ஸா தலைமையில் இடம்பெற்ற அரச ஆதரவுப் போராட்டத்தில் சுயதொழில் புரிவோருக்கான சம்மேளனத்தினர் பங்கேற்றனர். இந்தப் போராட்டப் பேரணி கொழும்பு டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் ஆரம்பமாகி கோட்டை நோக்கிச் சென்றது. (த-ச)

## வடக்கு தேர்தல் மட்டுமே செப்ரெம்பரில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பதற்கு ஆளுநர்கள் நடவடிக்கைகளை எடுப்பர் என்றும் கூறப்பட்டிருந்தது.
ஆயினும், மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் கட்டளைக்குப் பின்னரே வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும். அதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தலை ஜனாதிபதி அடுத்த மாதம் முற்பகுதியில் தேர்தல்கள் ஆணையாருக்கு அறிவிப்பார் என்று அரசதரப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.
அவ்வாறான உத்தியோகபூர்வ அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் செப்ரெம்பர் முதல் வாரத்தில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

# வடக்குத் தமிழ் மக்கள் மனிதர்கள் இல்லையா?

## விக்கிரமபாகு கருணாரட்ண கேள்வி



கொழும்பு, மே 16
வடமாகாணசபைத் தேர்தலை நடத்தினால், தான் அரசிலிருந்தே விலகிவிடுவார் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளமை மிகவும் மோசமான கருத்தாகும். வட பகுதியில் வசிப்பவர்களும் மக்கள்தான். அவர்களும் நிம்மதியாக வாழ்க்கை நடத்தத் தீர்வு கிடைக்கவேண்டும்.''
- இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.
கொழும்பு, பான்ஸ் பிளேஸில் நேற்று இடம்பெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
தற்போது வடமாகாணசபைத் தேர்தலை வைக்க அரசு திட்டமிட்டுள்ளது.
ஆனால், அமைச்சர்களான விமல் வீரவன்ஸ மற்றும் பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றோர் தேர்தலை வைக்க வேண்டாம் என்கிறார்கள். அது மட்டுமல்லாது, அப்படி வடமாகாணசபைத் தேர்தலை வைப்பது மிகவும் விஷத்தன்மை கொண்டது என விமல் கருத்துத் தெரிவித்து வருகின்றார்.
அப்படியென்றால் வடபகுதியில் வாழும் தமிழர்கள் மனிதர்களில்லையா? அவர்களுக்கும் இந்த நாட்டில் சம உரிமை கிடைக்கவேண்டும்.
இதுபோன்ற துவேஷத்தன்மைகொண்ட விமல் வீரவன்ஸ போன்றோர்களின் கருத்துகளை அரசு நிச்சயம் தட்டிக் கேட்கவேண்டும். அப்படி செய்வதன் மூலமே நாடு ஐக்கியமடைந்து மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியும்'' - என்றார். (த-சி)

# 23 ஆவது கூட்டத்திலும் இலங்கையை நெருக்குக

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமை சபைக்கு கடிதம் ஒன்றையும் அது அனுப்பி வைத்துள்ளது.
நடந்து முடிந்த போரின் போது இலங்கை அரசினால் புரியப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக நம்பகமான - சுயாதீன- சர்வதேச விசாரணை நடத்தப்பட்டே ஆக வேண்டும் எனவும் அது வலியுறுத்தியுள்ளது.
இந்த விசாரணைகள் சர்வதேசதரத்தில் நடத்தப்பட வேண்டும்.
போதுமான அளவு அனுமதிக்கக் கூடிய சாட்சியங்கள் கிடைக்கப்பெறுமானால் அதற்குப் பொறுப்பானவர் 'சர்வதேசதரத்திலான முழு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று மன்னிப்புச் சபை கூறியுள்ளது.
ஐ.நா.வுடன் ஒத்துழைக்க இணையும் அல்லது ஏற்கனவே ஒத்துழைக்கும் தனி நபர்களை இலங்கை அரசு பழிவாங்குவதை அல்லது அச்சுறுத்துவதை தடுப்பதற்கு ஐ.நா. நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (த-ப)

# வடக்கு மக்களை முடக்க மஹிந்த அரசு முயற்சி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் இராணுவ ஆட்சியையே அரசு நடத்தி வருகிறது. அங்குள்ள தமிழ் மக்கள் மங்கல, அமங்கல நிகழ்வுகளை நடத்தவேண்டுமெனில் இராணுவத்தினரது அனுமதி பெறவேண்டிய நிலை உள்ளது. ராஜபக்ஷ பணியாளர்களின் இரும்புப் பாதங்களின் கீழ் வடக்கு மக்களை அரசு முடக்க முயற்சிக்கிறது.
போரில் இறந்ததாகக் கூறப்படும் காணாமல்போன தமது உறவுகளைத் தமிழ் மக்கள் தேடிக்கொண்டிருக்கின்றனர். இதற்காக கோவில்களிலும் சென்றுவழிபடுகின்றனர். ஆனால் அரசோ இவர்கள் குறித்து எந்தக் கவலையையும் இது வரை வெளியிடவில்லை. தமிழர்கள் போரில் இறந்துவிட்டனரா அல்லது காணாமல் போய்விட்டனரா என்பதை அரசு நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**காணிப் பிரச்சினை**

வடக்கு மக்களின் காணிப்பிரச்சினை குறித்து அரசு அதிக அவதானம் செலுத்த வேண்டும். போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.
வடக்கில் வாழ்ந்த சிங்கள மக்கள் யார்? முஸ்லிம் மக்கள் யார்? அவர்களது காணிகள் எவை? - இவை குறித்தும் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் வாழ்ந்த இடம் எது எனவும் அரசு ஆராய்ந்துபார்க்கவேண்டும்.
ஆனால் அரசோ இவற்றைச் செய்வதைவிடுத்து போர் முடிவடைந்ததுடன் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கும், அரசியல் நோக்கத்திற்கும் பல காணிகளை வடக்கில் சுவீகரித்துள்ளது.
வடக்கில் அரசு கைப்பற்றியுள்ள காணிகள் அனைத்தும் மக்களுடைய காணிகளே. எனவே, அவற்றை உரிய மக்களிடம் அரசு மீளக் கையளிக்கவேண்டும். ஆனால் இந்த அரசு பிரித்தானியர்களைப்போல் செயற்படுகிறது. தாம் வேறொரு நாட்டைக் கைப்பற்றியதுபோல் தான் இந்த அரசு செயற்படுகிறது- என்றார் அநுரகுமார. (த-சி)


**வேலையாள்கள் தேவை**
தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.
தொடர்புக்கு:- **இல.11, நவீன சந்தை**
மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி,
(36556) (2.3) யாழ்ப்பாணம். 021 222 0875

**போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்**
★வடமாகாணப் பரீட்சைகள்
★தேசிய பாடசாலை ஆசிரியர் தெரிவு
★ஏனைய பொது அறிவு பொது உளச்சார்பு பரீட்சைகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப. 1மணி- 4.30 வரை.
**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
0754164564

**மணல் மண் வேண்டுமா?**
★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.
$4\frac{1}{2}$ டிரக்டர் 20,500/- (36950) (10.6)
தொடர்பு:- **ராம் 072 63 78 546**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலையும் வடிவமைப்பும்
3ஆம் வருட மாணவர்களின்
**காண்பியற் கலைக் காட்சி**

கலைக்கூடம்,
(கலைப்பீட புதிய கட்டடத் தொகுதி- யாழ். பல்கலைக்கழகம்)
காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை,
16, 17, 18 . 05/2013.
பிரவேசம் இலவசம்
அனுசரணை- LATHU DIGITAL VIDEO & PHOTO
K.K.S. ROAD, INUVIL. 021 224 1510, 077 711 1009

**வடமராட்சியில் சிங்கள மொழி வகுப்புக்கள் வெகு விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன**
அடிப்படையில் இருந்து ஆறு மாத கால பாடநெறி. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையொப்பத்துடன் சான்றிதழ். அரச, வங்கி, தனியார் உத்தியோகத்தர்களுக்கான விசேட வகுப்புக்கள்.
விரிவுரையாளர்: செல்வி சுபசிங்கமுதியான்சேலாகே ரஸ்மி தாரக்கா
மேலதிக விவரங்களுக்கு:
சதாபொன்ஸ் கல்வி நிலையம், அல்வாய்.
தொ.பே: 021 226 3206, 077 309 5176 (c/9418) (6.11)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.